இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 154 | வள்ளுவர் ஆண்டு 2048 | சித்திரை 16 சனிக்கிழமை 29.04.2017


## ரணிலுக்கு மகிந்த அணி பாராட்டு

கொழும்பு, ஏப். 29
மீதொட்டமுல்ல குப்பைமேடு இடருக்குப் பொறுப்பேற்றுப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுத்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மகிந்த அணி சபையில் பாராட்டுத் தெரிவித்தது.எளஎ

>> 22

## மகிந்தவின் உறவினர்கள் மைத்திரியுடன் இரகசியம்

### இப்படிக் கூறுகிறார் எஸ்.பி.



கொழும்பு, ஏப் 29
சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைவதற்காக முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் நெருங்கிய உறவினர்கள் பலர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் இரகசியமாகப் பேச்சுக்களை நடத்தி

>> 22

## குப்பைமேடு இடரில் அரசியல்வேண்டாம்

### எதிர்க்கட்சித் தலைவர் அறிவுரை

கொழும்பு, ஏப். 29
சொந்த அரசியல் இலாபத்துக்காக மக்கள் வழங்கிய ஆணையை மீறும் வகையில் அரசியல் கட்சிகள் செயற்படக்கூடாது. மீதொட்டமுல்ல சம்பவத்தைவிடப் பெரிய இடர்களுக்கு முகங்கொடுக்க நேரிடலாம். எனவே, அவற்றைத் தடுப்பதற்குரிய பொறிமுறை

>> 22

## குப்பைமேடு சரிவை தடுக்கவே ஐந்து மாதம்

### சபையில் கூறினார் சம்பிக்க

கொழும்பு, ஏப். 29
மீதொட்டமுல்ல குப்பை மேடு சரிந்துவிழும் அபாயம் இருப்பதால் அதைத் தடுப்பதற்குரிய நடவடிக்கையே அடுத்த 5 மாதங்களுக்குள் முன்னெடுக்கப்படும். அதன் பின்னரே அங்கிருந்து குப்பைகளை

>> 22

# ராணுவ ஆட்சிக்கு மைத்திரி முயற்சி

## பொன்சேகாவின் நியமனம் தொடர்பில் சபையில் சந்தேகம் கிளப்பியது ஜே.வி.பி.



கொழும்பு, ஏப்ரல் 29
நல்லாட்சியை ஏற்படுத்தப் போவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த மைத்திரிபால. இராணுவ ஆட்சியை நோக்கி நகர்வதற்காகவா முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தலைமையில் சிறப்புச் செயலணியை அமைக்கவுள்ளார்"

இவ்வாறு நேற்றுச் சபையில் சந்தேகம் கிளப்பியது மக்கள் விடுதலை முன்னணி.

மீதொட்டமுல்ல இடர் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குப்பை என்பதைக் கழிவாக மட்டும் பார்க்கக் கூடாது. ஒரு நாட்டுக்கு வருமானத்தைப் பெற்றுக்கொடுக்கும் வளமாகவும் அது இருக்கின்றது. சில நாடுகளும், நிறுவனங்களும் குப்பையை முறையாக முகாமைத்துவம் செய்து அதன் ஊடாக வருமானம் ஈட்டுகின்றன. குப்பையைத் தேசிய சொத்தாக, வளமாக மாற்றிக்கொள்வதற்குரிய வேலைத்திட்டங்களை அரசு முன்னெடுக்கவேண்டும். கழிவு முகாமைத்துவம் தொடர்பில் பாடசாலை மட்டத்திலிருந்தே தெளிவுபடுத்தல்களைச் செய்ய வேண்டும். இங்கு குப்பைக்குள்ளும் அரசியல் மாபியா புகுந்துள்ளது. இந்நிலை மாற வேண்டும். இதை ஒரு தேசிய பிரச்சினையாகக் கருதி தீர்மானம் எடுக்கப்படவேண்டும்.

பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைத் தேடுவதைவிடச் சிறப்புச் செயலணி அமைத்து அடக்குமுறையைக் கையாள்வதற்கே அரசு முயற்சிக்கின்றது. இது ஜனநாயக விரோதச் செயல்.

நல்லாட்சி, ஜனநாயகம் எனக்கூறிவிட்டு ஆட்சிக்கு வந்த அரசு, கடந்த அரசு

>> 22

## பிரதேச சபைக் காணியை ராணுவத்திடம் இருந்து மீட்பதற்கு நடவடிக்கை

### ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் சரவணபவன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.29
இராணுவம் கையகப்படுத்தி வைத்துள்ள வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்குச் சொந்தமான 49 பரப்புக் காணியை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்று சண்டிலிப்பாய் பிரதேச செயலக

>> 21

## இலங்கைக்குள் மீண்டும் இந்தியப்படை நுழையும்

### கூறுகின்றார் சரத் வீரசேகர

கொழும்பு, ஏப்.29
முஸ்லிம் தீவிரவாதிகளை ஒழிப்பது என்ற போர்வையில் இந்திய இராணுவம் மீண்டும் இலங்கைக்குள் நுழையும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எரிபொருள் பாவனையில் இந்தியா உலகின் மூன்றாமிடத்தில் உள்ளது. இந்த எரிபொருளை அடிப்படையாக வைத்தே அந்த நாடு இலங்கைக்குள் நுழைந்து முக்கிய பகுதிகளை கைப்பற்றுவதற்கு முற்படுகின்றது.

>> 22

## யாழ். பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தரானார் பேராசிரியர் விக்னேஸ்வரன்



யாழ்ப்பாணம், ஏப். 29
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக தற் போதைய விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் ஆர்.விக்னேஸ்வரன் அரச தலைவரால் நியமிக்கப்பட்டார்.

இந்த உத்தியோகபூர்வ அறிவித்தல் நேற்றுக் காலை அரச தலைவரின் செயலாளர் பி.பீ. அபயக்கோன் மூலம் அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

கடந்த 24 ஆம் திகதியிலிருந்து

>> 22

## வீடமைப்புச் சபையின் நாவற்குழிக் காணியை ராணுவம் மீளளிக்கட்டும்

### திறைசேரியில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் உறுதியான தீர்மானம்

யாழ்ப்பாணம், ஏப். 29
யாழ்ப்பாணம் நாவற்குழியில் படையினர் வசம் உள்ள தேசிய வீடமைப்பு அதிகார சபையின் காணிகளை மீண்டும் சபையிடமே வழங்கவேண்டும் என்றுதீர்மானிக்கப்பட்டுள்ளது.

திறைசேரியில் தலைமை அமைச்சரின் செயலாளர் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி தொடர்பான கூட்டம்

>> 22

## திருட்டு நகை வியாபாரத்தில் பொலிஸாருக்கும் பங்கா?

### தீவிர விசாரணைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 29
திருட்டு மற்றும் கொள்ளை நகைகளை உருக்கித் தங்கமாக்கி வியாபாரம் செய்யும் சிலரிடம் இருந்து பொலிஸார் சிலர் கப்பமாகத் தங்கத்தைப் பெற்று வந்தார்களா என்பது தொடர்பான விசாரணைகளை பொலிஸ் உயர் அதிகாரிகள் ஆரம்பித்துள்ளனர். நகைக் கடை வர்த்தகர்கள் மூவரிடம் இது தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

திருட்டு நகைகளையும் கொள்ளை நகைகளையும் வாங்கி

>> 24

மாயக்கல்லி மலை விவகாரம்:

## அரச தலைவருடன் நேற்று சம்பந்தன், ஹக்கீம் பேச்சு

கொழும்பு, ஏப். 29
அம்பாறை, இறக்காமம் மாணிக்கமடு விவகாரம் தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை எதிர்க்கட்சித் தலைவர் இரா சம்பந்தன், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் நேற்றுச் சந்தித்துப் பேசினர்.

நேற்று முற்பகல் நாடாளுமன்றக் கட்டடத்

>> 22

## பரந்தன் - முறிகண்டி இடையே புதிய சாலை

### ஏ-9 நெடுஞ்சாலையில் நெருக்கடியை குறைக்க மாவட்டச் செயலர் யோசனை

யாழ்ப்பாணம், ஏப். 29
முறிகண்டிக்கும் பரந்தன் சந்திக்கும் இடையே ஏ-9 நெடுஞ்சாலைக்குச் சமாந்தரமாகப் புதிய சாலை ஒன்றை அமைக்கத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளுக்கு இடையில் மட்டும் அதிக விபத்துகள் இடம்பெறு

>> 04




# விகாரை அமைப்புக்கு எதிராக கிளர்ந்தெழுந்த முஸ்லிம்கள்

## அம்பாறை முழுவதும் நேற்றுப் போராட்டம்

கொழும்பு, ஏப். 29
இறக்காமம், மாணிக்கமடு மாயக்கல்லி மலையில் புத்தர் சிலை நிறுவப் பட்டுள்ளதைக் கண்டித்தும், அங்கு பௌத்த விகாரை அமைப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடைபெற்றன.

பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்லவில்லை. கடைகள் அனைத்தும் இழுத்து மூடப்பட்டன. வீதிகள் கறுப்புக் கொடிகளால் நிறைந்தன. கணிசமான

>> 21

கர்ப்பிணிப் படுகொலை குறித்து

## நெடுந்தீவுச் சிறுமியை கொன்ற கைதியிடம் விரைவில் விசாரணை

யாழ்ப்பாணம், ஏப். 29
ஊர்காவற்றுறை கர்ப்பிணிப் பெண் கொலை தொடர்பில் நெடுந்தீவுச் சிறுமியைப் படுகொலை செய்த குற்றத்துக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட கைதிக்கு தகவல்கள் தெரியுமா? என்பது தொடர்பில் விசாரணைகள் ஊர்காவற்றுறை நீதிவான் மன்றால் முன்னெடுக்கப்படவுள்ளன.

>> 04

புங்குடுதீவு மாணவி படுகொலை:

## சந்தேகநபர்கள் இருவர் வழக்கிலிருந்து விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.29
புங்குடுதீவு மாணவி படுகொலை வழக்கின் 10ஆவது மற்றும் 12ஆவது சந்தேகநபர்கள் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

2015ஆம் ஆண்டு புங்குடுதீவு மாணவி

>> 04

## வவுனியாவில் நேற்று அன்னாசி அறுவடை

வவுனியா விவசாய திணைக்களத்தின் முருகனூர் பண்ணையில் செய்கை பண்ணப்பட்ட அன்னாசி அறுவடை விழா நேற்று இடம்பெற்றது.

"வவுனியா முருகனூர் விவசாயப் பண்ணையில் செய்கை பண்ணப்பட்டுள்ள தென்னைப் பயிர்செய்கைக்குள் ஊடுபயிராக அன்னாசிப் பயிற்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் மூலம் 75 அன்னாசிச் செய்கையாளர்க



ளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. செய்கை மேற்கொள்ள வடக்கு மாகாண விவசாய அமைச்சின் மூலம் விவசாய திணைக்களத்தால் மானியங்கள் வழங்கப்பட்டிருந்தன.

இந்த நிலையிலேயே அன்னாசிப்பழம் அறுவடை செய்யப்பட்டு கிலோ ஒன்று 150 ரூபாவுக்கு விற்பனை செய்யும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த அறுவடை விழாவில் மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், மாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், இ.இந்திரராசா, செ.மயூரன், ம.ஜெயதிலகஉள்ளிட்டோர் கலந்து கொண்டனர்" என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சு அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-4)



### இந்திய மாருதி சுசுக்கி நிறுவனத்தின்

# அப்பாவித் தொழிலாளர்களுக்கு விரைந்து விடுதலைவேண்டும்

### யாழ்ப்பாண நகரில் நேற்றுக் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஏப். 29

ஆயுள்தண்டனை வழங்கப்பட்டுள்ள இந்திய மாருதி சுசுக்கி நிறுவனத்தின் அப்பாவித் தொழிலாளர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி யாழ்ப்பாண நகரில் நேற்று மாலை கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சோஷலிச சமத்துவக் கட்சியும் சமூக சமத்துவத்துக்கான உலக இளைஞர் மற்றும் மாணவர் அமைப்பும் இணைந்தே யாழ்ப்பாணம் மையப் பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்று பி.ப. 3.45 மணியளவில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"மாருதி சுசுக்கி வாகன நிறுவனத்தில் பணியாற்றிய அப்பாவித் தொழிலாளர்கள் மீது அந்த நிறுவனத்தின் நிர்வாகம் பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அவர்களுக்கு தண்டனை பெற்றுக் கொடுத்துள்ளது. இந்த வழக்கில் மாருதி சுசுக்கி தொழிலாளர்கள் 13 பேருக்கு ஆயுள்தண்டனையும் மேலும் 18 பேருக்கு 3 தொடக்கம் 5 வருடங்கள் வரையான சிறைத் தண்டனையும் நீதிமன்றால் விதிக்கப்பட்டுள்ளது.

தாம் வேலை செய்யும் வாகன ஒருங்கிணைப்பு தொழிற்சாலையில் நிலவும் கொடூரமான நிலைமைக்கும் கொத்தடிமை நிலைமைக்கும் எதிராக போராட்டத்தில் தொழிலாளர்கள் ஈடுபட்டனர். இதன்போது திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட கலவரத்தால் அங்கு தீ விபத்தும் ஏற்பட்டது. இதன் விளைவாக நிறுவனத்தின் மனிதவள முகாமையாளர் ஒருவர் உயிரிழந்தார். இதற்கு தொழிலாளர்களே காரணம் எனக் கூறி அவர்கள் தண்டிக்கப்பட்டுள்ளனர். ஆனால் இது திட்டமிடப்பட்டு முதலாளியால் முன்னெடுக்கப்பட்ட சதிவலையே ஆகும்.

எனவே உண்மை நிலையை அறிந்து தண்டனை பெற்றுள்ள அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும்" என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர். (வ-8)

## மோ. சைக்கிள் விபத்தில் சிக்கி குடும்பமே வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், ஏப். 29

மாங்குளம் ஒட்டுசுட்டான் வீதியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படுகாயமடைந்தனர். அவர்கள் மாஞ்சோலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மன்னாருக்குச் சென்று முல்லைத்தீவு திரும்பிய போதே அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகி வெள்ள வாய்க்காலுக்குள் தூக்கி வீசப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"முல்லைத்தீவு, முள்ளியவளையில் வசிக்கும் குடும்பத்தினர் மன்னாரில் உள்ள உறவினர் வீட்டுக்குச் சென்று திரும்பியுள்ளனர். மாங்குளம் ஒட்டுசுட்டான் வீதியில் 9ஆம் கட்டைப் பகுதியில் அவர்கள் பயணித்த மோட்டார் வீதியோரம் இருந்த பாதுகாப்பு கல்லில் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்து இடம்பெற்ற சமயம் மோட்டார் சைக்கிளில் கணவன், மனைவி மற்றும் அவர்களது மகள் உள்ளிட்ட மூவர் பயணித்துள்ளனர். விபத்தில் தாயும் மகளும் வீதியோரத்திலிருந்த 8 அடி பள்ளத்துக்குள் தூக்கி வீசப்பட்டனர்.

கணவன் மயக்கமடைந்தார். விபத்துக்குள்ளான மூவரும் மாஞ்சோலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப் படுகின்றன" என்று ஒட்டுசுட்டான் பொலிஸார் தெரிவித்தனர். (வ-101)

# கூட்டமைப்புக்கு சங்கரி சவால்!

### பதவிகளைத் தந்தால் ஒரு வாரத்தில் இராணுவத்தை வெளியேற்றுவாராம்

யாழ்ப்பாணம், ஏப். 29

"வடக்கு கிழக்கில் நிலைகொண்டுள்ள படையினரை வெளியேறுமாறு கோரி நாம் அவர்களிடமே பேச வேண்டிய தேவை கிடையாது. இது தொடர்பான சரியான முடிவை எடுக்கத் தெரியாத தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அத்தனைபேரும் பதவி விலகி, அந்த இடத்தை எம்பிடம் வழங்குங்கள். ஒரு வாரத்தில் இராணுவத்தை வெளியேற்றிக் காட்டுகின்றேன்"

இவ்வாறு சவால் விடுகிறார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி.

தற்போதைய நிலைமை தொடர்பில் கூட்டணியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு கிழக்கில் உள்ள படையினரை வெளியேறுமாறு கோரி நாம் அவர்களிடம் பேச வேண்டிய தேவையே கிடையாது. அவர்களே எமது எதிரிகள். இது தொடர்பான சரியான முடிவை எடுக்கத் தெரியாத கூட்டமைப்பின் அத்தனைபேரும் பதவி விலக வேண்டும். அவர்களது பதவிகளை எம்பிடம் வழங்கினால் ஒரு வாரத்தில் இராணுவத்தை வெளியேற்றிக் காட்ட என்னால் முடியும். அந்த இடத்தில் இருந்து வைக்கவேண்டிய நிபந்தனைகளே வேறு விடயங்கள். அதனை விடுத்து கூட்டமைப்பு இராணுவத்துடன் பேச வேண்டிய தேவை கிடையாது. கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனோ தலைமை அமைச்சர் போன்று பேசுகின்றார். இவை தொடர்பிலும் இறுக்கமான முடிவுகள் எட்டவேண்டிய காலம் இது. இனியும் நாம் தவறான முடிவுகளை எட்டக்கூடாது. 2005ஆம் ஆண்டு தேர்தலின்போதும் இதே தலைவர்கள் பிரபாகரனிடம் கோரியிருந்தால், கூட்டாட்சியைத் தருவதாக கூறிய ரணிலே வென்றிருப்பார். அப்போது கூட்டாட்சிக்காகவே அதிக சிங்களவர்களும் வாக்களித்தனர். ஆனால் தற்போது அந்த நிலைமை இல்லை.

தந்தை செல்வாவும் ஜீ.ஜீ.பொன்னம்பலமும் இணைந்து ஆரம்பித்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னத்திலேயே இனிவரும் அத்தனை தேர்தல்களையும் சந்திப்போம். இதில் அனைவருக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படும். எனவே அனைவரும் இணைந்து செயற்பட முன்வரவேண்டும் என்றார். (வ-4-101-106)



கிளிநொச்சி மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்ப உறவுகளின் போராட்டம் நேற்று 68ஆவது நாளாகவும் தொடர்ந்தது. கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலில் பெப்ரவரி 20 ஆம் திகதி ஆரம்பமான இந்தப் போராட்டம் தீர்வேதுமின்றித் தொடர்கின்றமை குறிப்பிடத்தக்கது. (த-6)

### கலால் சட்டத்தின் கீழ்

## பொலிஸாரும் வழக்கு

*காலி முதன்மை நீதிவான் தீர்ப்பு*

கொழும்பு, ஏப். 29

கலால் சட்டமூலத்தின் கீழ் வழக்குத் தொடுப்பதற்கான அதிகாரம் பொலிஸாருக்கும் உள்ளதாகக் காலி தலைமை நீதிவான் ஏ. நிஷாந்த பீரிஸ் நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்திருக்கிறார்.

சட்டவிரோதமாக மதுபானத்தைக் கொண்டு சென்ற ஒன்பது வாகனங்கள் காலி மாவட்டத்தின் பல்வேறு பொலிஸ் நிலையங்களால் கைப்பற்றப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் அரசுடமையாக்கப்பட்டன. இந்தத் தீர்ப்பை ஆட்சேபித்த வாகன உரிமையாளர்கள், பொலிஸாருக்கு அத்தகைய வழக்குகளைத் தொடுக்கும் அதிகாரம் இல்லையென மேன்முறையீடு செய்திருந்தனர்.

இந்த மேன்முறையீட்டை விசாரித்த காலி தலைமை நீதிவான் வாகன உரிமையாளர்களின் ஆட்சேபனையை நிராகரித்ததுடன், கலால் திணைக்கள சட்டத்தின்கீழ் பொலிஸாருக்கு வழக்குத் தொடுக்க அதிகாரம் உள்ளதாகத் தீர்ப்பளித்தார். (த-4)

# புலிகளிடம் பயிற்சி பெற்ற குற்றச்சாட்டில் கைதாகிய இருவரிடம் மே 9ல் விசாரணை

யாழ்ப்பாணம், ஏப். 29

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஆயுதப் பயிற்சி பெற்றனர் என்ற குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இருவர் மீதான வழக்கு விசாரணைகள் எதிர்வரும் 9ஆம் திகதி ஆரம்பமாகும் என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் அறிவித்தது.

2005ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்துக்கு இடைப்பட்ட கால எல்லைக்குள் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஆயுதப் பயிற்சி பெற்றனர் என்ற குற்றச்சாட்டில் கிளிநொச்சியில் வைத்து அத்திகே பிரசன்ன ஜயலத், ஸ்டென்லி கிருஷ்ணா ஆம்ஸ்ரோங் ஆகிய இருவரும் பயங்கரவாத தடுப்புப்பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தார்கள். அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஆயுதத்தைப் பாகம் பிரித்துக் கழற்றுதல், கைக்குண்டை எறிதல், ரி56, ரிவோல்வரைப் பயன்படுத்தும் பயிற்சி, உடல் ரீதியாகப் பயிற்சி பெற்றமை ஆகிய 4 குற்றச்சாட்டுகளை சந்தேகநபர்களுக்கு எதிராக முன்வைத்து யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் மேல் மன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. எதிரிகள் தரப்பில் சட்டத்தரணி முடியப்பு றெமிடியஸ் முன்னிலையானார். சாட்சியப்பதிவுக்காக வழக்கு எதிர்வரும் 9ஆம் திகதிக்கு மன்றால் ஒத்திவைக்கப்பட்டது. (வ-12)


## விபத்தில் படுகாயமடைந்தவர் நேற்று உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப்.29

சாலை விபத்தில் படுகாயமடைந்து 3 மாதங்களாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இளைஞர் நேற்று உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பளை, முள்ளியடியைச் சேர்ந்த பசுபதி தேனுகாந் (வயது -24) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தார்.

"3 மாதங்களுக்கு முன்னர் பளைப்பகுதியில் இடம்பெற்ற விபத்தில் அவர் படுகாயமடைந்தார். இளைஞன் உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். 3 மாதங்களாக அங்கு சிகிச்சை பெற்று வந்த இளைஞன் நேற்று சிகிச்சை பயனின்றி உயிழந்தார்" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-21)



# செட்டிகுளம் ம.வி. முன்பாக மீண்டும் நேற்றுப் போராட்டம்

*புதிய அதிபர் நியமனத்தை எதிர்த்து*

வவுனியா,ஏப். 29

வவுனியா, செட்டிகுளம் மகாவித்தியாலயத்தின் புதிய அதிபருக்கு எதிராக நேற்று இரண்டாவது தடவையும் மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 4 வருடங்களுக்கு மேலாகச் செட்டிகுளம்மகாவித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றியவருடைய காலத்தில் பாடசாலை கல்வி மற்றும் பௌதீக ரீதியில் அபிவிருத்தி அடைந்ததாகத் தெரிவிக்கும் பெற்றோர், இதனால் புதிய அதிபர் நியமனத்தை எதிர்ப்பதாகத் தெரிவித்து பாடசாலைகக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த பாடசாலைக்கு தரம் 1 அதிபர் நியமிக்கப்படவேண்டும் எனவும், அதற்கான தகுதி தனக்குள்ளபோதிலும் நியமனம் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து செட்டிகுளம் பிரதேசத்தைச் சேர்ந்த நித்தியானந்தம் என்பவர் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாட்டைப் பதிவு செய்திருந்தார். இதன் அடிப்படையிலேயே குறித்த அதிபர் நியமனம் தற்போது இடம்பெற்றுள்ளது.

இருப்பினும், இரண்டாம்தவணை ஆரம்பித்த நாளில் இருந்து மாணவர்கள் பாடசாலை முன்பாகப் பெற்றோர், பழைய மாணவர்களுடன் இணைந்து பேராடி வருகின்றனர். தமக்கு பழைய அதிபர் அல்லது வேறு ஒரு அதிபரை நியமிக்குமாறும், தற்போது நியமிக்கப்பட்டவர் தமக்கு வேண்டாம் எனவும் தெரிவித்தே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (து-4)

# வட மாகாண சபை உறுப்பினர்களுக்கு 'வாகனப் பெர்மிற்'

*விவரங்களைக் கோருகிறது கொழும்பு அமைச்சு*

யாழ்ப்பாணம், ஏப். 29

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு வாகன வரிச் சலுகை அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியதால், அதற்கான விவரங்களைக் கோரி உறுப்பினர்களுக்கு விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மாகாண சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் வாகன வரிச் சலுகை அனுமதிப்பத்திரத்தை வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களுக்கும் வழங்க வேண்டும் என்று வடக்கு மாகாண சபையால் கோரப்பட்டது. அது தொடர்பான விண்ணப்பங்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரிடம் முன்வைக்கப்பட்டன. அந்த விண்ணப்பங்களுக்கே அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த நிலையிலேயே வாகன வரிச் சலுகை அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பான விவரங்களைக் கோரி உறுப்பினர்களுக்கு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சால் விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களால் விண்ணப்பங்கள் முன்வைக்கப்பட்டதும் அவர்களுக்கான வாகன வரிச் சலுகை அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சால் தெரிவிக்கப்பட்டது. (வ-101)

## ஹெரோயின் வைத்திருந்தாரென இளைஞன் கைது

உயிர்க்கொல்லிப்போதைப்பொருளானஹெரோயினை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம், நாவாந்துறைப் பகுதியில் இளைஞன் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்என்றுபொலிஸார் தெரிவித்தனர்.

"பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் யாழ்ப்பாணம், நாவாந்துறைப் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞன். அவரிடம் இருந்து 10 மில்லி கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டது" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-ரி1)

## கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டோருக்கு ஒத்திவைத்த சிறை

தென்மராட்சி, ஏப். 29

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்களுக்கு 5 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதித்து சாவகச்சேரி நீதிவான் மன்று நேற்றுத் தீர்ப்பளித்தது.

கொடிகாமம் எருவனில் கசிப்பு உற்பத்திப் பகுதி கொடிகாமம் பொலிஸாரால் கடந்த 12ஆம் திகதி சுற்றிவளைக்கப்பட்டது. அங்கு 4 ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்பும் அதனை உற்பத்தி செய்யும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன.

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரையும் கசிப்பு உற்பத்திக்கு உதவினார் என்ற குற்றச்சாட்டில் மற்றொருவரையும் பொலிஸார் கைது செய்தனர். அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

சாவகச்சேரி நீதிவான் மன்றில் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சந்தேகநபர்கள் இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவருக்கு 4 வருட சிறைத் தண்டனையும் அவருக்கு உதவியாளராக செயற்பட்டவருக்கு ஒரு வருட சிறைத்தண்டனையும் விதித்து நீதிவான் தீர்ப்பளித்தார். இருவருக்குமான தண்டனைக் காலம் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை, எழுதுமட்டுவாழ் கரம்பகம் பகுதியில் 180 மில்லி லீற்றர் மற்றும் 90 மில்லிலீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்த இருவருக்கு தலா ஆறு மாதங்கள் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்த நீதிவான், அவர்களுக்கான தண்டணைக் காலத்தை 5 வருடங்களுக்கு ஒத்திவைத்தார். (வ-5)

# அலைபேசியில் ஆபாசப் படம் இரத்தினபுரிவாசிக்கு தண்டம்

தென்மராட்சி; ஏப். 29

அலைபேசியில் ஆபாசப் படங்கள் வைத்திருந்த இரத்தினபுரி வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் நேற்று 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார்.

கடந்த 16 ஆம் திகதி கொடிகாமம் நகரப் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய இளைஞரைக் கொடிகாமம் பொலிஸார் பிடித்து விசாரணை செய்தபோது, தான் ஒருவரை விரும்பியுள்ளதாகவும் அவரைச் சந்திக்கவே இங்கு வந்துள்ளதாகவும் அந்த நபர் தெரிவித்துள்ளார். இவரைப் பொலிஸார் சோதனையிட்டபோது அலைபேசியில் ஆபாசப் படங்கள் காணப்பட்டன. அவரைக் கைது செய்த பொலிஸார் மறுநாள் நீதிவானிடம் முற்படுத் தினர். இந்த நபரை நேற்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது குறித்த நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து50ஆயிரம்ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (து-9)

# தடுப்புக் காவல் சித்திரவதை; தொகுப்புரைகள் புதனன்று

யாழ்ப்பாணம்.ஏப்.29

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுப்பிலிருந்த சுமணன் என்பவரைச் சித்திரவதைக்குட்படுத்திய குற்றச்சாட்டில் 8 பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீதான வழக்கின் தொகுப்புரைகளை எதிர்வரும் 3ஆம் திகதி புதன்கிழமைக்கு யாழ்ப்பாண மேல் நீதிமன்று நேற்று ஒத்திவைத்தது.

இந்த வழக்கின் தொகுப்புரைகள் நேற்று நடைபெறும் என திகதியிடப்பட்டிருந்தது. எனினும் வழக்கை நெறிப்படுத்தும் பிரதி மன்றாதிபதி குமார் ரட்ணம் மன்றில் நேற்று முன்னிலையாகவில்லை. வடக்கு - கிழக்கில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட முழு அடைப்புக் காரணமாக ஏற்பட்ட போக்குவரத்துத் தடங்கலால் அவரால் மன்றில் முன்னிலையாக முடியவில்லை என்று அரச சட்டவாதி மன்றில் தெரிவித்தார்.

அரச சட்டவாதியின் அறிவிப்பையடுத்துவழக்கைஎதிர்வரும்மேமாதம் 3ஆம் திகதிக்கு ஒத்திவைக்க யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் உத்தரவிட்டார்.

பின்னணி

2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25ஆம் திகதி சுன்னாகத்தைச் சேர்ந்த சிறிஸ்கந்தராஜா சுமணன், சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் தடுப்பில் வைத்துக் கொடூரமாகச் சித்திரவதை செய்து கொலை செய்யப்பட்டார். எனினும் அவர் இரணைமடுக் குளத்தில் தற்கொலை செய்ததாகப் பொலிஸார் கொலையை மூடி மறைத்தனர் என்று அவருடன் கைது செய்யப்பட்டிருந்தவர்கள் மல்லாகம் நீதிமன்றில் கடந்த வருடம் தெரிவித்திருந்தனர்.

சுன்னாகம் பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி சிந்தக்க பண்டார உள்ளிட்ட 8 பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. அவர்களில் 5 பேர் மீது கொலைக் குற்றச்சாட்டும் 8 பேர் மீது சித்திரவதைக் குற்றச்சாட்டும் பதிவு செய்யப்பட்டது. (வ-12)

## அரசியல்வாதிகளின் அட்டவணையில் பள்ளிவாசல்கள் செயற்படக்கூடாது

*மஸ்தான்எம்.பி. வலியுறுத்து*

கொழும்பு, ஏப். 29

பள்ளிவாசல் நிர்வாகங்கள் அரசியல்வாதிகளின் அட்டவணைக்கு செயற்படுவதை விடுத்து நிர்வாகம் எடுக்கும் முடிவுகளுக்கு அரசியல்வாதிகளைச் செயற்பட வைக்க வேண்டும்.

இவ்வாறு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கே.காதர் மஸ்தான் தெரிவித்தார்.

வவுனியா நேரியகுளம் ஜாமிஉல் மஸ்ஜிதுல் ஹைறாத் ஜும்மா மஸ்ஜித் திறப்புவிழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

"கடந்த காலங்களில் வ்வுனியா மாவட்டப் பள்ளிவாசல் நிர்வாகத் தெரிவுகளில் அரசியல்வாதிகள் தலையிட்டதால் நீதிமன்றம் சென்ற வரலாறுகளை எமது சமூகம் உருவாக்கி இருக்கின்றமை வேதனையளிக்கிறது.

பள்ளிவாசல்களும் பொது அமைப்புக்களும் இணைந்தே ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்பவும், அபிவிருத்தியடையச் செய்யவும் முடியும். மாறாக ஒரு சிலரின் சுயநலத்துக்காக நிர்வாகங்கள் முறைகேடு செய்யப்படுவதையும் அவதானிக்கிறோம். இலங்கை முஸ்லிம்கள் மீதான அல்லாஹ்வின் கோபப் பார்வையே நாளுக்கு நாள் நாம் பிரச்சினைகளை எதிர்கொள்ளக் காரணமாக அமைகின்றன. பள்ளிவாசலை இறைவன் விரும்பும் வகையில் பயன்படுத்தி அவனது நெருக்கத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (து-4)

# தந்தை செல்வா நினைவு ஞாயிறன்று கொழும்பில்

யாழ்ப்பாணம், ஏப். 29

தந்தை செல்வா நற்பணி மன்றத்தால், தந்தை செல்வா நினைவு தினம் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30 மணிக்குக் கொழும்பு விவேகானந்தா சபை மண்டபத்தில் மன்றத் தலைவர் ஏ.சந்தனம் தலைமையில் நடைபெறவுள்ளது.

தலைமை விருந்தினராக அமைச்சர்.மனோகணேசன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாகக் கல்வி இராஜாங்க அமைச்சர் ராதாகிருஷ்ணன், முன்னாள் பேராசிரியர் சோ.சந்திரசேகரனும், மதிப்புறு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களான த. சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், மேல்மாகாண சபை உறுப்பினரான கே.ரி.குருசாமியும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். சிறந்த சேவை செய்த அதிபர்கள், பத்திரிகையாளர்கள், சமூக சேவையாளர்கள் 25 பேருக்குப் பொன்னாடை போர்த்தி, தந்தை செல்வா விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

மேலும் கண் பரிசோதனை செய்த 250 பேருக்குக் கண்ணாடி வழங்கல், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் பரீட்சையில் கூடிய புள்ளிகள் பெற்ற மாணவர்களுக்குப் பதக்கங்கள் வழங்கல் என்பனவற்றுடன் தந்தை செல்வா அறநெறி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். (து-5)

# மாமனிதர் சிவராமின் நினைவேந்தல் இன்று

யாழ்ப்பாணம், ஏப். 29

மாமனிதர் தராகி சிவராமின் 12 ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்று பி.ப. 3 மணிக்கு கிளிநொச்சி பாரதி ஸ்ரார் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஊடகவியலாளர் ஆ.சபேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், தலைமை விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார்.

தராகியும் இலங்கையின் பூகோள அரசியலும் என்னும் தலைப்பில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீட ஊடகக் கற்கை இணைப்பாளர் கலாநிதி எஸ்.ரகுராமும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கத்தில் சிவராம் என்னும் தலைப்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமசந்திரனும், சிவராமின் கனவு என்னும் தலைப்பில் மூத்த ஊடகவியலாளர் ராதயனும், நானும் சிவராமும் என்ற தலைப்பில் மூத்த ஊடகவியலாளர் மாணிக்கவாசகரும் உரையாற்றவுள்ளனர். (து-5)

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## ஆடல் அரங்கம் நடன நிகழ்வு யாழ். நகரில் இன்று

யாழ்ப்பாணம், ஏப். 29

உலக நடன தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண இந்தியத் துணைத் தூதரகம், வடக்கு மற்றும் மத்திய மாகாண நடன ஆசிரியர்களுடன் இணைந்து நடத்தும் ஆடல் அரங்கம் சிறப்பு நடன நிகழ்வு இன்று சனிக்கிழமை பி.ப. 4 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில்இடம்பெறும்என்றுஅறிவிக்கப்பட்டது. நிகழ்வில்

பஞ்சமூர்த்தி அஞ்சலியும், சாரி நடனம், கதகளிமற்றும்காவடிச்சிந்து, தில்லானா, அன்பு வழியே ஆன்மீக நெறி, ஏர் உழவர் மற்றும் ஐவகைநிலங்களா, கரகம்மற்றும் ராஜஸ்தான்நடனம்என்பன இடம் பெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (வ-108)

## நூல் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாண பொது நூலக வாசகர் வட்டத்தின் யுகதர்மம் நாடகமும் பதிவுகளும் நூல் அறிமுக நிகழ்வு இன்று சனிக்கிழமை பி.ப. 3.45 மணிக்கு நூலகக்கேட்போர் கூடத்தில்நடைபெறும்என்றுஅறிவிக்கப்பட்டது. அ. யேசுராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அறிமுகஉரையைநா.நவராஜும் கருத்துரைகளை திருமதி நவதர்ஷினி கருணாகரன், கண்ணன், யோ.யோண்சன் ராஜ்குமார் ஆகியோர் நிகழ்த்துவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

# நீதிமன்ற அவமதிப்பை கண்டித்து கவனவீர்ப்பு



திருகோணமலை, ஏப். 29

நீதிமன்ற உத்தரவைக் கிழித்தெறிந்தமையைக் கண்டித்தும், நீதிமன்றை அவமதித்தோரை உடனடியாகக் கைது செய்யுமாறு வலியுறுத்தியும் திருகோணமலை நீதிமன்றுக்கு முன்பாக சட்டத்தரணிகள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிழக்கு மாகாண வேலைதேடும்பட்டதாரிகள் கடந்த 25ஆம் திகதி இடம்பெற்ற கிழக்கு மாகாண சபை அமர்வின் போது அதன் முதன்மை வாயில் கதவுகளை மூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

"பட்டதாரிகளின் ஆர்ப்பாட்டத்தால் பொதுப் போக்கு வரத்துக்கு இடையூறு ஏற்படும் எனவும் பொதுமக்களுக்குப் பாதிப்புக்கள் இடம்பெறலாம் எனவும் தெரிவித்து திருகோண மலை தலைமையகப் பொலிஸார் அந்த ஆர்ப்பாட்டத்துக்குத் தடை உத்தரவு வழங்குமாறு திருகோண மலை நீதிவான் மன்றில் கோரினர்.

பொலிஸாரின் கோரிக்கையை ஆராய்ந்த திருகோணமலை நீதிமன்றத் தலைமை நீதிவான் எம்.எச்.எம்.ஹம்ஸா, "அமைதியான முறையிலும் பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படாத வகையிலும் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாத வகையிலும் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கு மாறு ஆர்ப்பாட்டத்தைத் தலைமை தாங்குபவர்களுக்குக் கட்டளையிட்டார்.

நீதிமன்றக் கட்டளையை பொலிஸார் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வேலைதேடும் பட்டதாரிகளிடம் வழங்கியபோது, அதனைப் பெற்றுக்கொண்ட ஆர்ப்பாட்டத்துக்கு தலைமை தாங்கிய பௌத்த பிக்கு பொலிஸாருக்கு முன்பே கட்டளையை கிழித்து காலுக்குக் கீழே போட்டு மிதித்தார் என்று பொலிஸாரால் குற்றஞ்சாட்டப்பட்டது.

"நீதிமன்றக் கட்டளையை பொலிஸாருக்கு முன்னே கிழித்தெறிந்தனர். எனினும் சம்பவம் தொடர்பில் போதுமான நடவடிக்கைகளை பொலிஸார் எடுக்காமல் இருந்தமை கண்டிக்கத்தக்கது-பாரதூரமான விடயம். வேலைதேடும் பட்டதாரிகளை மட்டுமல்ல பொலிஸாரையும் நாம் கண்டிக்கின்றோம்.

சந்தேகநபர்களுக்கு அழைப்புக்கட்டளை விடுக்குமாறு வேண்டியிருப்பதானது பொலிஸார் தரப்பில் செய்யப்பட்ட மாபெரும் தவறு. சட்டத்தை அவமானப்படுத்துகின்ற செயற்பாடு" என்று போராட்டத்தில் ஈடுபட்ட சட்டத்தரணி கள் தெரிவித்தனர். (வ-4-40)

## வீமன்காமம் பத்திரகாளிக்கு நாளை திருக்குட முழுக்கு

அச்சுவேலி, ஏப். 29

தெல்லிப்பளை வீமன்காமம் பத்திரிகாளி சமேத ஸ்ரீ வீரபத்திரர் ஆலய திருக்குட முழுக்கு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.08 மணி தொடக்கம் 10.50 மணி வரையுள்ள சுப வேளையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

எண்ணெய்காப்புசாத்துதல்இன்றுசனிக்கிழமை காலை6மணிதொடக்கம்பிற்பகல்3மணிவரை நடைபெறும்என்றுஆலயபரிபாலனசபையினர் தெரிவித்தனர். (வ-11)

## அல்வாய் விநாயகருக்கு நாளை திருக்குடமுழுக்கு

அல்வாய், மாலுசந்தி வரதராஜ விநாயகர் ஆலய திருக்குட முழுக்குப் பெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.08 மணிமுதல் 10.59 மணி வரையான சுபவேளையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

பக்தர்கள் எண்ணெயக்காப்புச்சாத்துதல் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி காலை 9.08 மணிமுதல் முறையே புதிதாக அமைக்கப்பட்ட கோபுரம், ஆலய மூலமூர்த்தி மற்றும் பரி வார மூர்த்திகளுக்கு திருக்குட முழுக்கு நடைபெறும். தொடர்ந்து நல்லை திருஞான சம்பந்த ஆதினக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீசோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள் அருளுரை நிகழ்த்துவார்.

அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் கோயில் மற்றும் லண்டன் ஈழ பசுபதிஸ்வரர் ஆலயம் ஆகியவற்றின் முதன்மைக் குருவான சிவாகம பிரதிஷ்டா ஞானபானு சிவப்பிரம்மஸ்ரீ ஸ்தாசிவ கரேஸ்வர குருக்கள் முதன்மைக் குருவாக இந்தத் திருக்குட முழுமைக்கை நடத்தி வைப்பார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-173)

(முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்)

### பரந்தன்...

கின்றன. இதனைத் தடுக்கும் வகையிலேயே இந்தத் திட்டம் முன்வைக்கப் பட்டு அதற்கான நிதியை வழங்குமாறும் கோரப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு. அருமைநாயகம் இந்தக் கோரிக்கையை தலைமை அமைச்சரின் குழுவிடம் முன்வைத் துள்ளார்.

வடக்கு, கிழக்கிலுள்ள மாவட்டங்களின் தேவைகள் குறித்த கலந்துரையாடல் ஒன்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் செயலர் உள்ளிட்ட குழுவினருக்கும் வடக்குகிழக்கிலுள்ள மாவட்டச் செயலர்களுக்கும் இடையில் கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் இந்த விடயம் பேசப்பட்டுள்ளது.

இது குறித்து கிளிநொச்சி மாவட்டச் செயலர் மேலும் தெரிவித்ததாவது:

ஏ9 பாதையில் இடம்பெறும் விபத்துக்களைக் குறைத்து நகரின் மத்தியில் ஏற்படும் நெருக்கடிகள், போக்குவரத்துச் சிக்கல்கள் அனைத்தையும் கருத்திற் கொண்டு மாற்றுத் திட்டம் தொடர்பில் ஆராயப்பட்டது. 2003 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட ஒரு திட்டம் இடைநடுவில் கிடப்பிலுள்ளது. அந்தத் திட்டமே, முறிகண்டியில் இருந்து பரந்தன் வரைக்குமான மாற்றுப் பாதை அமைக்கும் திட்டம்.

இவ்வாறு திட்டமிடப்பட்ட மாற்றுப் பாதையாக ஏற்கனவே சுமார் 50 அடி அகலத்தில் முறிகண்டியில் இருந்து மிகத் தரமான பாதை அளவு ஒன்று உள்ளது. அது தற்போது சாதாரண பாதையாகவும் உள்ளூர்ப் பாதையாகவும் பயன்பாட்டில் உள்ளது. இந்தப் பாதையைத் தரமாக செப்பனிட்டுத் தார் படுக்கை வீதியாகப் புனரமைப்புச் செய்வதன் மூலம் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்கும் வவுனியாத் திசையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கும் நேரடியாகப் பயணிக்கும் வாகனங்கள் இதனைப் பயன்படுத்த முடியும்.

கிளிநொச்சி மாவட்டத்தின் அதிக மக்கள் வாழும் பாரதிபுரம், கிருஸ்ணபுரம், அறிவியல் நகர் உள்ளிட்ட பகுதிகளும் நீண்ட காலமாகவே போதிய அபிவிருத்தி காணாமலேயே காணப்படுகின்றன. இவ்வாறான திட்டங்களின் மூலம் குறித்த பகுதியில வாழும் சுமார் 2 ஆயிரம் குடும்பங்களின் வாழ்வாதாரத்தையும் உயர்த்த முடியும். எனவேதான் குறித்த பகுதியின் சுமார் 18 கிலோ மீற்றர் பாதையையும் தரமாக அமைப்பதற்குத் திட்டமிட்டுள்ளோம்.

இப்பாதையின் அருகிலேயே விவசாய பீடம், பொறியியல்பீடம் என்பவற்றோடு ஆடைத் தொழிலகம் உட்பட அனைத்து முக்கிய மையங்களும் உள்ளடங்குகின்றன. இதனால் இந்தப் பாதையை முழுமையாகப் புனரமைக்கும் திட்ட மொன்றைத் தயாரித்து தலைமை அமைச்சரின் செயலகத்தில், செயலாளர் பாஸ்கரலிங்கம் தலைமையில் இடம் பெற்ற கலந்துரையாடலில் சமர்ப்பித்துள்ளோம். இந்தத் திட்டத்தின் முக்கியத்துவம், அதற்கான தேவைகள் தொடர்பில் கேட்டறிந்ததோடு அதனை நடைமுறைப்படுத்தவும் தற்போது கொள்கையளவில் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வீதியை முழுமையாக நடைமுறைப் படுத்துவதற்கு 500 மில்லியன் ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது. ஒரே தடவையில் திட்டத்தை நடைமுறைப்படுத்தாது இருகட்டமாக முன்னெடுக்கவும் எண்ணினோம். திட்டத்தை இரண்டாகப் பிரித்து முறிகண்டியில் இருந்து கனகபுரம் வரையில் முதல் கட்டமாகவும் கனகபுரத்தில் இருந்து பரந்தன் வரை இரண்டாம் கட்டமாகவும் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் முதல் கட்டப் பணிக்காக 250 மில்லியன் ரூபாவைக் கோரியுள்ளோம். அதற்குரிய பணம் கிடைப்பதற் கான வாய்ப்புக் கிட்டியுள்ளது. நிதி கிடைத்தவுடன் பணிகள் ஆரம்பிக்கப்படும். ஒரே தடவையில் இந்தப் பணியை மேற்கொள் வதால் 500 மில்லியன் ரூபாத் திட்டத்துக்கு பெரிய ஒப்பந்தகாரர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். ஆனால் தற்போது திட்டம் இரு பகுதியாக பிரிக்கப்பட்டமை யால் உள்ளூரில் உள்ள ஒப்பந்தகாரர்களும் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தும் வாய்ப்பு ஏற்படும்.

இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக முடிக்கும் சந்தர்ப்பத்தில் ஏ9 வீதியில் குறித்த பகுதியில் இடம்பெறும் அநாவசிய உயிரிழப்புக்கள் தடுக்கப்படுவதோடு குறித்த பிரதேசத்தின் கிராமங்களும் முன்னேற்றமடையும் - என்றார். (கு-4-101)

### நெடுந்தீவுச்...

ஊர்காவற்றுறைப் பகுதியில் கர்ப்பிணிப் பெண்ணொருவர் கொடூரமாக அடித்துக் கொலை செய்யப்பட்டார். அது தொடர்பான வழக்கு விசாரணை ஊர்காவற்றுறை நீதிமன்றில் பதில் நீதிவான் ஜோய் மகிழ் மகாதேவா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சந்தேகநபர்கள் இருவரும் மன்றில் முற்படுத்தப் பட்டனர்.

சந்தேகநபர்கள் இருவரும் தம்மை வழக்கு விசாரணையின் போது, சாட்சியான சிறுவன் காட்டி கொடுக்காதுவிட்டால், சிறுவனின் குடும்பத்துக்கு 5 இலட்சம் ரூபா பணம் தருவதாக சிறைசாலையில் தடுத்து வைக்கப்பட்டு உள்ள சிறுவனின் உறவினர் ஒருவருடன் பேரம் பேசப்பட்டது என்று கடந்த வழக்கு தவணையின் போது சிறுவனின் தாயாரால் மன்றின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

அது தொடர்பில் , விசாரணை நடத்த அன்றைய தினம் நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

"சந்தேகநபர்கள் இருவரும் தன்னுடன் பேரம் பேசவில்லை என்று சிறுவனின் உறவினர் தெரிவித்தார். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஜெகன் என்பவர், குறித்த படுகொலை தொடர்பில் தனக்கு தகவல்கள் தெரியும் எனவும் , அதனை தான் நீதிமன்றில் கூறுவதற்கு தனக்கு 5 இலட்சம் ரூபா பணம் தருமாறும் சந்தேகநபர்களிடம் பேரம் பேசியுள்ளார்" என்று பொலிஸார் நேற்று மன்றில் தெரிவித்தனர்.

நெடுந்தீவுச் சிறுமியைப் படுகொலை செய்த குற்றத்துக்கு யாழ்ப்பாண மேல் நீதிமன்றால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவரே ஜெகன் என்பவர் என்றும் பொலிஸார் மன்றில் தெரிவித்தனர்.

தூக்குத் தண்டனைக் கைதியான ஜெகனை எதிர்வரும் 12ஆம் திகதி மன்றில் முற்படுத்துமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார். அன்று வரை வழக்கை ஒத்திவைத்த நீதிவான் மன்று, சந்தேகநபர்கள் இருவரின் விளக்கமறியலையும் நீடித்தது.

இதேவேளை, கடந்த சில தினங்களுக்கு முன்னர் கிளிநொச்சி நீதிவான் மன்றில் நடைபெற்ற வழக்கு விசாரணையில் திருட்டுக் குற்றத்துக்குசிறைத்தண்டனைவிதிக்கப்பட்ட ஒருவர், "தனக்கு ஊர்காவற்றுறை கர்ப்பிணிப் பெண் படுகொலை தொடர்பில் சில தகவல்கள் தெரியும் எனவும் , அதனை தான் ஊர்காவற்றுறை நீதிமன்றில் தெரிவிக்க தயார் எனவும் கிளிநொச்சி நீதிவான் மன்றில் தெரிவித்திருந்தார்.

அதனையடுத்து அது தொடர்பில் குறித்த கைதி, ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் சாட்சியமளிக்க ஏற்பாடு செய்யுமாறு கிளிநொச்சி நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

**பின்னணி**

ஊர்காவற்றுறைப் பகுதியில் கடந்த ஜனவரி மாதம் 24ஆம் திகதி ஒரு பிள்ளையின் தாயும் ஏழு மாத கர்ப்பிணியுமான ஞானசேகரன் ஹம்சிகா (வயது- 27) எனும் பெண் கொடூரமாக அடித்துக் கொலை செய்யப்பட்டார்.

இந்தப் படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் குற்றஞ்சாட்டி சகோதரர்களான இருவர் அன்றைய தினம் மாலை மண்டைதீவு சந்தியில் உள்ள ஊர்காவற்றுறைப் பொலிஸாரின் காவலரணில் கடமையில் இருந்த பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். (வ-37)

### சந்தேகநபர்கள்...

வித்தியா கூட்டு வன்புணர்வின் பின் படுகொலை செய்யப்பட்டார். கொலைக் குற்றச்சாட்டில் 12 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் 12 பேரும் யாழ்ப்பாண மேல் நீதிமன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் சுருக்கமுறையற்ற விசாரணைகள் நிறைவடைந்து வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டது.

இந்த நிலையில் வழக்கின் தொடர் விசாரணைகள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் பதில் நீதிவான் ஜோய் மகிழ் மகாதேவா முன்னிலையில் நேற்று இடம்பெற்றது.

"10ஆவது சந்தேகநபரான பியவர்த்தன ராஜ்குமார் மற்றும் 12ஆவது சந்தேகநபரான தர்மலிங்கம் ரவீந்திரன் ஆகியோர் மீதான குற்றச் சாட்டுக்களுக்கு போதிய ஆதாரங்கள் இல்லை. அவர்கள் இருவரையும் வழக்கிலிருந்து விடுவிக்க பரிந்துரைக்கப்படுகிறது" என்று ஊர்காவற்றுறை நீதிவான் மன்றுக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டது.

குறித்த சந்தேகநபர்கள் இருவரையும் விடுவிக்க உத்தரவிட்ட பதில் நீதிவான், வழக்கு விசாரணையை ஒத்திவைத்தார். (வ-12)

SM

ஓடர் நகைகள் குறித்த தவணையில்
22 கரட் தங்கத்தில் செய்துகொடுக்கப்படும்
தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்

சரவணா மகாலட்சுமி
தங்கமாடம்

அக்ஷய திருதியையை முன்னிட்டு
வாடிக்கையாளர்களுக்கு
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்.

இல.97, பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.
No.021 226 2111
mail: Saravanajewelery@gmail.com

புதிய வினோ நகை மாடம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்

அக்சயதிருதியை திருநாளில் நகைகளை கொள்வனவு செய்பவர்களுக்கும்
வாங்குபவர்களுக்கும் பெறுமதி மிக்க பரிசில்கள் காத்திருக்கின்றன.

22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
நவீன அழகிய தங்க
ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்

பிரதான வீதி, சங்கானை.
(செலான் வங்கி அருகில்)

New Vino Nagai Madam
Main Street Chankanai.
(Near the Seylan Bank )
T.P : 077 600 2588

அக்ஷய திருதியையில் ஆபரணங்களை வாங்கி
சுபீட்சமடைவீர்களாக

ஆசைப்பிள்ளை
அன் சன் நகை மாடம்
Aasaipilai & Son Nagai Maadam

தங்கத்தைப் போன்றே தரம்
மற்றும் நம்பிக்கையில் 100%
அக்ஷய திருதியை
தங்கத் திருநாள் கொண்டாட்டம்
இன்றும் 28/04/2017
நாளையும் 29/04/2017
இடம்பெறும்

கே.ரி.பிளாசா, பிரதான வீதி, சங்கானை.
K.T.Plazaa, Main Road, Chankanai.
Tel: 021 321 2399

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ
அக்ஷய திருதியையை முன்னிட்டு அன்பான வாடிக்கையாளர்களுக்கு உங்கள் இல்லங்களில்
ஐஸ்வரியம் பெருகவும், செல்வம் பெருகிடவும் காஞ்சனா நகைமாளிகையில் நகைகளைப்
பெற்றிட வாழ்த்துகின்றோம்.

T.Suthan

காஞ்சனா நகைமாளிகை
Kanchana
Jewel House

குறிப்பு:
விசேடவிலைக்கழிவும், அன்பளிப்புக்களும்
வழங்கப்படும். அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கை
யாளர்கள் அனைவரையும் **அக்ஷய** திருதியையில் கலந்து
சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

224, Main Street,
Point Pedro.
021 226 2574 / 077 188 2119

அக்ஷய திருதியை அனைவருக்கும்
சுபீட்சமாய் அமைய வாழ்த்துகின்றோம்

பிறேம்
நகைமாடம்
28,29/04.2017

அக்ஷய திருதியை திருநாளிலே
தங்க நகைகளை வாங்கி
ஐஸ்வரியத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்
1ஆம் பரிசு தங்க நாணயம்
2ஆம் பரிசு காஸ் குக்கர்
3ஆம் பரிசு மின்விசிறி (fan)
மற்றும் 10 ஆறுதல் பரிசில்களும்,
வாடிக்கையாளர் அனைவரும்
நினைவு பரிசில்களும் வழங்கப்படும்.

பிறேம் நகைமாடம்
PREM NAGAI MAADAM
No.171, Prem Plaza, Jaffna Road, Manipay. T.P - 021 320 9167 / 0773039572

Modern & Distinctive
உரிமையாளர்: இ.பிறேமகுமார்
Prem Nagai Maadam
# 171, Prem Plaza, Jaffna Road, Manipay. Tel: 077 303 9572, 021 320 9167

நிகழும் மங்கலகரமான ஏ விளம்பி வருடம்
சித்திரைத்திங்கள் 15,16 ஆம் நாள்களில் (28.29.04.2017)
வெள்ளிகிழமை, சனிக்கிழமை அன்றைய நாள்களில்
அள்ள அள்ளக் குறையாத ஐஸ்வரியத்தை அள்ளித்தரும்
அக்ஷயதிருதியை எனும் திருநாளிலே
தரம், நம்பிக்கை, கைராசி அனைத்திற்கும் உரித்தான
உங்கள்

மயூரன்ஸ்
நகை மாளிகை

ஸ்தாபனத்தில் தங்க நகைகளைப் பெற்று
என்றுமே குறையாத இன்பத்தைப் பெற்றிட
அன்போடு அழைக்கின்றோம்.

அக்ஷய திருதியை அன்று நகை கொள்வனவு செய்பவர்களுக்கு
பெறுமதி வாய்ந்த அன்புப் பரிசுகள் வழங்கப்படும்.

இல. 95, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P : 077 651 0251

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ
நியூ பிரணகாஸ்
நகைத்தொழிலகம்
New Branakas
Jewellery & Work Shop

தங்கத் திருநாளாம்
அட்சய திருதியை
28/29.04.2017 ஆம்
திகதிகளில் எம்மிடம்
தங்க நகைகளை வாங்கும்
அனைவருக்கும்
அன்பளிப்புப் பொருள்கள்
வழங்கப்படும்.

No.11, கன்னாத்திட்டி வீதி, யாழ்ப்பாணம்.
No.11, Kannathiddy Road, Jaffna.
branakasjewellers@gmail.com
T.P:- 021 222 8465

# JMC Projects (India) Ltd.

An ISO 9001, ISO 14001 (EMS) & OSHAS-18001 Company.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக உலகின் பல பாகங்களிலும் வணிக மற்றும் நிறுவன கட்டட நிர்மாணம், நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு நிர்மாணம், கைத்தொழில் மற்றும் உட்கட்டமைப்பு நிர்மாணத்துறைகளில் மிகச்சிறந்த அனுபவமுள்ள JMC Projects (India) Ltd நிறுவனத்திற்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் பணியாற்ற கீழ்க்காணப்படும் பதவிநிலைகளுக்குரியவர்கள் தேவைப்படுகின்றார்கள்.

## Positions

| S.No. | Description | Qualification | No of Vacancies | Experience | Field |
|---|---|---|---|---|---|
| 1. | Quantity Surveyor | BSc degree in quantity surveying or eqv. | 01 | 5 Years | water pipe line |
| 2. | Technical officer (pipe line) | Diploma in Civil engineering | 04 | 4-7 Years | DI Pipe line |
| 3. | Technical officer (QA/QC) | Diploma in Civil engineering | 02 | 4-7 Years | Water projects |
| 4. | Supervisors | Certificate level in civil engineering or eqv. | 03 | 4 -7 Years | Water/ Infra Project |
| 5. | Carpenter ( Form work) | Better knowledge of form working | 20 | 5 Years | Water retaining structure |
| 6. | Carpenter – Assistant ( Form work) | Knowledge of form working | 20 | 1 Year | Water retaining structure |
| 7. | bar bender | Better knowledge of bar bending | 20 | 5 Years | Water retaining structure |
| 8. | Bar bender - Helper | Knowledge of bar bending | 20 | 1 Year | Water retaining structure |
| 9. | DI Pipe fitter | Better knowledge of more than 600 mm dia pipe fitting | 10 | 5 Years | DI Pipe line |
| 10. | DI Pipe fitter - Helper | Knowledge of more than 600 mm dia pipe fitting | 40 | 1 Year | DI Pipe line |
| 11. | Hydra crane operator | Have valid certificate & License | 03 | 5 Years | DI Pipe line |
| 12. | JCB Backhoe loader operator | Have valid certificate & License | 03 | 5 Years | DI Pipe line |
| 13. | Semiskilled labours | | 40 | 2 Years | DI Pipe line |
| 14 | Unskilled labours | | 40 | 6 Months | Pipe line |

பதவிநிலை மற்றும் சம்பளம் ஆகியன தகைமை மற்றும் தொழில்அனுபவம் ஆகியவற்றைக் கொண்டு தீர்மானிக்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் 02/05/2017 தொடக்கம் 05/05/2017 வரையான நாள்களில் முற்பகல் 10.00 தொடக்கம் மாலை 05.00 வரை நேர் முகத்தேர்வில் பங்குபற்றலாம்.

இடம் : JMC PROJECTS INDIA LTD, ஜயா கடையடி , A 9 வீதி, சாவகச்சேரி, யாழ்ப்பாணம் .

தொடர்புகொள்ளவேண்டியவர் : திரு – பபில்ராஜ் (0763166448), திரு . சுரேந்திரன் (0767892513 )


# சாவகச்சேரி பிரதேசசபை - கொடிகாமம்
# குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டங்களுக்கான கேள்வி கோரல்

01. தலைவர், பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேச சபை,தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமாண வேலைகளுக்காக கோருகின்றார்.
02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
03. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி ஈறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி அமைப்புக்கானஇக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப் பட்டிருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர்,சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்(தொலைபேசி:021-373 4825, 021-2050356, தொலைநகல்: 021-2050356, மின்னஞ்சல் -chavakachcherips1@yahoo.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 25.05.2017 ஆம் திகதிவரையான காலப்பகுதியில் வேலை நாள்களில் காலை 09.00 மணி முதல் மாலை 14.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தவிசாளர் /செயலாளர்,சாவகச்சேரி பிரதேச சபை கொடிகாமம் எனும் இடத்திலிருந்து 03.05.2017 ஆம் திகதியிலிருந்து 25.05.2017 வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/-(வரி நீங்கலாக) செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
07. கேள்வி இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டும், அல்லது பதிவுத் தபால் மூலம் தவிசாளர்/ செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபை கொடிகாமம் எனும் முகவரிக்கு 25.05.2017 திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித்திகதியில் இருந்து நாவற்குழி மேற்கு மயான உள்ளக வீதிக்கு 49 நாள்கள், எழுதுமட்டுவாள் சிவன்கோவில் வீதி , கோயிலாகண்டி வீதிகளுக்கு 63 நாட்கள்(நாற்பத்தொன்பது நாள்கள் ; அறுபத்து மூன்று நாள்கள் -13.07.2017 , 27.07.2017 ) வரையும் செல்லுபடியாகும்.
09. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் (மாதங்கள்) | வேண்டப்படும் தரம் (வீதி) | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(6)/2-PADG/2017/1 | எழுதுமட்டுவாள் சிவன்கோவில் வீதி புனரமைப்பு | 3.863 | 03 | C8 | 38700.00 | 24.08.2017 |
| NP/14/41(6)/2-PADG/2017/2 | நாவற்குழி மேற்கு மயான உள்ளக வீதி புனரமைப்பு | 0.852 | 02 | C9 | 8520.67 | 10.08.2017 |
| NP/14/41(6)/2-PADG/2017/3 | கோயிலாகண்டி வீதி புனரமைப்பு | 4.304 | 03 | C8 | 43100.00 | 24.08.2017 |

10. கேள்விதாரர்களுக்கான முன்கலந்துரையாடல் 17.05.2017ஆம் திகதி மாலை 14.30மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்துகொள்ளலாம். இதற்கு எவ்வித கொடுப்பனவும் வழங்கப் படமாட்டாது.

**தலைவர், உள்ளூர் அதிகார பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்.** **29.04.2017**

## பல்கலை, வெட்டுப்புள்ளிகள் அடுத்த மாதம் வெளியிடப்படும்

2016/2017ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழகப் பிரவேசத்துக்கான வெட்டுப்புள்ளிகள் மே மாதம் நடுப்பகுதியில் வெளியிடப்படும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழகங்களின் 210 பாடநெறிகளுக்காக 71 ஆயிரத்து 111 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. அந்த விண்ணப்பங்கள் இப்போது பரிசீலிக்கப்படுகின்றன என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் டிசில்வா தெரிவித்தார். (ஐ-4)


## உடனடி வேலைவாய்ப்பு

**கட்டார்** (Qatar)

01) சுப்பர் மார்க்கட் 20 ஆண்கள்
RL 1200 -1600 SR 48,000 - 64,000 + OT

02) ஏயார்ப் போட் - (30 ஆண்கள்) லேபர்
RL 1500 - SR 60,000 + OT

**( 2 வருடகால ஒப்பந்தம் உணவு, தங்குமிட வசதிகள், மருத்துவ வசதிகள், நாடு திரும்பும் போது விமான சீட்டு இலவசம்)**

Phone No :- 077 843 2212
Email :- asianlanka27@gmail.com
New Golf Lankan man Power
No.36, Dam Si. co:12
(aja/cs/3570)(11)



## சிவன் ஜோதிடம்

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள
**பண்டித் ஜெயதேவ் சுவாமிகள்**
**076 585 9977 , 075 787 3073**

துல்லியமாக கணித்து சொல்லப்படும் விடயங்கள்

மெய்யன்பர்களே !

இந்தியாவின் புகழ் பெற்ற மாந்திரீக ஜோதிடர் இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. கணவன் மனைவி சண்டை பிரிவு, காதல் திருமண தடை இதுவரை திருமணமே ஆகாதவர்கள் பிள்ளைகள், பெற்றோர் சொல் கேளாமல் திரிவது. வேலை தொழில் உத்தியோகம் இப்படி பல பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். பணம் பெறாமையால் தொழில் பாதிப்பு பலன் சொல்வதோடு பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திரபாக்கியம் பலன்களை சொல்வார். மேலும் உங்கள் வீட்டில் செல்வம் கொழிக்க உதவும் லட்சுமி பூசை செய்து தருவார்.
தமிழ் மொழிகளில் ஜோதிடம் சொல்லப்படும்.

100% உத்தரவாதம்

**இல.394, 1/1 மணிக்கூட்டு வீதி,**
**(பெருமாள் கோயில் வீதி, லிங்கம் கிறீம் ஹவுஸ் அருகில்)**
**யாழ்ப்பாணம்.**
நேரம்: காலை 8.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை



சிவமயம்
அரியாலை
**ஸ்ரீ கலைமகள் சன சமூக நிலையம்**





ஸ்தாபிதம்: 16.01.1946

## 71வது ஆண்டு விழாவும்
## புதிய மைதானத் திறப்புவிழாவும்

**இடம் : அரியாலை ஸ்ரீ கலைமகள் ச.ச.நிலைய விளையாட்டு மைதானம் (நொத்தாரிசு வீதி)**
**காலம் : 29,30/04.2017 சனி,ஞாயிறு தினங்கள்**

**நிகழ்வுகள்**



**29.04.2017 சனி காலை:**
★ ஆண்களுக்கான மரதன் ஓட்டம்
★ பெண்களுக்கான மரதன் ஓட்டம்
★ ஆண்களுக்கான மிதிவண்டி ஓட்டம்
**இரவு:** தேனிசை மழை பாடல் போட்டி

**30.04.2017 ஞாயிறு காலை 9.30 மணி:**
புதிய மைதானம் திறப்பு விழா நிகழ்வு
சம்பிரதாயபூர்வமாக திறந்து வைப்பவர்
நிலையத் தலைவர்
**திரு. க. சண்முகலிங்கம்**

**30.04.2017 ஞாயிறு பி.ப 1.00 மணி:**
**மெய்வன்மைப் போட்டிகள்**



★ தலைவர்: விளையாட்டுக் குழுத் தலைவர் **ப.லக்ஸ்மன்**
★ பிரதம விருந்தினர் : **திரு.பொ.வாகீசன்** (யாழ்.மாநகரசபை ஆணையாளர்)
★ சிறப்பு விருந்தினர்கள் :
**திரு.க.மயூரன்**
விளையாட்டு உத்தியோகத்தர்
நல்லூர் பிரதேச செயலகம்
**திரு. க.உதயகுமார்**
(நோர்வே வாழ் நிலைய அங்கத்தவர்)
**இரவு:** மூத்த விளையாட்டு வீரர்கள் மதிப்பளிப்பு
★ மதிப்பளிக்கப்படுவோர்:
திரு.க.மோகனராசா திரு. நா.திருச்செல்வம்
★ பரிசளிப்பு நிகழ்வு

**சிறப்பு நிகழ்வு**

**யாழின் முன்னணி கலைஞர்கள் பங்குகொள்ளும்**
**மாபெரும் இசை நிகழ்வு**
**அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்**

அரியாலை
ஸ்ரீ கலைமகள் ச.ச.நி. நிர்வாகம்

நிர்வாகத்தினரும்,
நிலைய மக்களும்

(CS/3557)(10)

## முல்லை சந்தைகளில் மாட்டிறைச்சி இல்லை

முல்லைத்தீவு, ஏப். 29
முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பொதுச்சந்தைகளில் மாட்டிறைச்சியைக் கொள்வனவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் சட்ட விரோதமான முறையில் மாடுகளை இறைச்சிக்காகக் கொல்லும் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன என்று மக்கள் குற்றம் சாட்டினர்.

" பொதுப் பரிசோதகரின் வேலை நிறுத்தத்தால் இங்கு இறைச்சிக்காகக் கொல்லப்படும் மாடுகளுக்கு அனுமதிகள் வழங்கப்படுவதில்லை. அதனால் சிலர் சட்ட விரோதமாக மாடுகளை இறைச்சிக்காகக் கொல்லுகின்றனர். உணவுக்குப் பொருத்தமான மாடுகளைக் கொல்லுகின்றார்களா என்பது சந்தேகத்துக்குரியதாக உள்ளது. எனவே சட்ட ரீதியாக மாட்டிறைச்சியைச் சந்தையில் கொள்வனவு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்." என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர். (ஐ-7)

# பிரதேச சபையின் அனுமதி பெற்று புதிய கட்டடங்களை அமைக்கவும்

## புதுக்குடியிருப்புப் பிரதேச சபை கோரிக்கை

முல்லைத்தீவு, ஏப். 29
புதுக்குடியிருப்புப் பிரதேச சபை ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் புதிதாகக் கட்டடங்களின் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளும் போது பிரதேச சபையின் அனுமதியை பெற்றதன் பின்னர் பணிகளை மேற்கொள்ள வேண்டும். அதன் மூலம் சில இடர்களைத் தவிர்த்துக் கொள்ளலாம். இவ்வாறு புதுக்குடியிருப்புப் பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
"புதுக்குடியிருப்புப் பிரதேச சபை ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் புதிதாகக் கட்டடங்களின் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளும் போது, பிரதேச சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இது தொடர்பாக பல தடவைகள் அறிவித்திருந்த போதும், அதனை முறையாக எவரும் பின்பற்றவில்லை. அனுமதியைப் பெற்றுக் கொள்ளாது கட்டுமானப்பணிகளை ஆரம்பித்ததன் பின்னர் எமக்குக் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளுக்கு அமைவாக நாம் சட்ட நடவடிக்கைகள் எடுக்க நேரிடும். இடர்களைத் தவிர்த்துக் கொள்வதற்கு ஏதுவாக பிரதேச சபையிடம் முறைப்படி அனுமதிகளைப் பெற்றதன் பின்னர் கட்டடங்களின் கட்டுமானப் பணிகளை ஆரம்பிப்பதால் அவற்றைத் தவிர்த்துக் கொள்ளலாம். அனுமதிகள் பெற்றுக்கொள்ளாது கட்டப்படும்கட்டடங்களின்அனைத்துக் கட்டுமானப் பணிகளுக்கு எதி ராகவும் சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு புதுக்குடியிருப்புப் பிரதேச சபை முழு மூச்சுடன் செயற்படும். என்றார். (ஐ -7)

# இ.போ.ச. பேருந்துகள் மீது இனந்தெரியாதோர் கல்வீச்சு

முல்லைத்தீவு, ஏப். 29
முல்லைத்தீவு மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் இலங்கைப் போக்குவரத்து சபைக்குச் சொந்தமான இரண்டு பேருந்துகள் மீது இனந்தெரியாதோர் நேற்றுக் கற்களை வீசித் தாக்குதல் நடத்தினர் என்று இலங்கைப் போக்குவரத்துச் சபையின் முல்லைத்தீவு சாலை முகாமையாளர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
"வவுனியாவில் இருந்து முல்லைத்தீவுக்கு வருகை தந்த பேருந்து மீது கூழமுறிப்புப் பகுதியில் வைத்தும், மற்றொரு பேருந்து மீது தேராவில் பகுதியில் வைத்தும் கற்கள் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டன. எனினும் பேருந்துகளுக்குப் பெரிதாகச் சேதங்கள் எதுவும் ஏற்பட வில்லை. கற்களை வீசித் தாக்குதல் நடத்தப்பட்ட போதும் பேருந்துகள் பொதுமக்களுக்கான சேவையைத் தொடர்ந்தும் வழங்கின." என்றார். (ஐ-7)


















**வேலையாள்கள் தேவை**
யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஒரு கோழிப்பண்ணைக்கு வேலையாள்கள் தேவை. விருப்பம் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.
**077 868 9500**

**காணி தேவை**
தெல்லிப்பழை சந்திக்கும் மல்லாகத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் கே.கே.எஸ். வீதியில் இருந்து 150 மீற்றரிற்குள் வீடு கட்டக் கூடிய 3 - 6 பரப்புக் காணி தேவை.
தொடர்பு: mpiraveenan@yahoo.com
அல்லது 077 960 6133


**நல்லூர்க் கந்தன் திருமண சேவை**
எல்லா மதம், எல்லா இனம், வெளிநாடு, உள்நாடு ஆகிய சகல திருமணங்களும் எம்மால் செய்து கொடுக்கப்படும்.
இல.303, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
வி.ஜெயந்தி
T.P: 077 9733 183
021 227 1468

**வீடு விற்பனைக்கு**
யாழ் மத்தியூஸ் வீதியில் இல.13/2 இல் ஒரு பரப்புக் காணி 04 அறை வீடு கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.
**077 186 0182**

**லவ் பேட்ஸ் விற்பனைக்கு**
லவ்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு.
(C 29479) (14)
**077 241 1504**

# சட்டவிரோதக் கட்டடம் தொடர்பில் 24 மணி நேரத்துக்குள் நடவடிக்கை

## வலி. தென்மேற்கு பிரதேச சபைக்கு சரவணபவன் எம்.பி அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஏப். 29
"வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் இடம்பெற்று வரும் சட்ட விரோத கட்டடத்துக்கு எதிராக 24 மணித்தியாலங்களுக்குள் சட்ட நடவடிக்கையை எடுத்து பிரதேச சபை செயலாளர் அறிக்கையிட வேண்டும்"
இவ்வாறு அறிவுறுத்தல் வழங்கினார் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.
சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் சட்டவிரோதமாக கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் கட்டடம் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை பிரதேச சபை எடுக்கவில்லை என்று பொதுமக்கள் குற்றஞ் சாட்டினர்.
"எமது எல்லைக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமாக கட்டடம் கட்டப்படுவது தொடர்பாக முறைப்பாடு கிடைத்தது. அந்த இடத்துக்குச் சென்று விசாரணைகளை நடத்தினோம். முன் அனுமதி பெறப்படாமல் கட்டட வேலைகள் இடம்பெற்றதால், அவற்றை நாம் நிறுத்துமாறு எழுத்துமூலமாக அறிவித்தல் விடுத்தோம்" என்று வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார். எனினும் தற்போதும் கட்டடம் கட்டும் பணிகள் இடம்பெறுகின்றன என்று பொதுமக்கள் சுட்டிக்காட்டினார்கள்.
"சட்டவிரோதமான முறையில் கட்டப்பட்ட கட்டடத்தை நிறுத்துமாறு எழுத்துமூலம் அனுப்பியிருந்த கடிதத்தின் பிரதியை பொலிஸாரிடம் உடனடியாக கொடுத்து 24 மணித்தியாலத்துக்குள் சம்பந்தப்பட்ட கட்டட உரிமையாளர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக எனக்கு அறிக்கையும் சமர்ப்பிக்க வேண்டும்" என்று வலி. தென்மேற்கு பிரதேச சபைச்செயலாளருக்கு நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான ஈ.சரவணபவன் அறிவுறுத்தல் வழங்கினார். (வ-8)

**தெல்லிப்பழை வீமன்காமம்**
அருள்மிகு பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திர ஆலய
புனருத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் - 2017

**எண்ணெய்க்காப்பு :-** இன்று (29.04.2017) சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.
**அஷ்ட பந்தன கும்பாபிஷேகம் :-** நாளை (30.04.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09.08 - 10.59 மணிக்கு நடைபெறும்.

அடியார்கள் இக்காலங்களில் ஆலயத்துக்கு வருகை தந்து இறைவனை தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

**தெல்லிப்பழை,**
**வீமன்காமம்.** (c /29480)(11,17) **ஆலய பரிபாலனசபையினர்.**

மாகாண சமூகசேவைகள் திணைக்களம் - வடமாகாணம்
**பெறுகைகளுக்கான அழைப்பு**
**கைதடி அரச முதியோர் இல்லத்துக்கான ஒப்பந்த அடிப்படையில் சுத்திகரிப்பு சேவையைப் பெற்றுக்கொள்ளல் - 2017/18**

1. வடமாகாண சமூகசேவைகள் திணைக்களத்தின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான, தகைமை வாய்ந்த சுத்திகரிப்பு சேவைகள் வழங்குநரிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.
2. விலைக்கேள்விதாரர் சுத்திகரிப்பு சேவை தொடர்பில் வியாபார பெயர் பதிவினையுடைய ஒரு நபராக அல்லது நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
3. யாழ்ப்பாண மாவட்டத்தில் தலைமை அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. விலைமனுதாரர் கேள்விகோரப்படும் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கான சேவை வழங்கல் தொடர்பில் மூன்று (03) வருடத்துக்குக் குறையாத முன் அனுபவத்தினைக் கொண்டிருத்தல்வேண்டும்.
5. பொருத்தமான கேள்வி வைப்புபணம் செலுத்தப்பட்டமை பெறுகைகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
6. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர் இத்திணைக்களத்தில் கிடைக்கும் "Application for Bid Documents" என்ற படிவத்தினைப் பூர்த்தி செய்து பெறுகைக்கு மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா.2,000 காசாக செலுத்தி தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாள்களில் 28.04.2017 தொடக்கம் 18.05.2017 வரையான காலப்பகுதியில் 09.00 மணிதொடக்கம் 15.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.
7. "Cleaning Service -2017/2018, Elders Home Kaithady, Reference No NP/24/2/3/Cle.Ser/2017-2018" என்ற விவரம் கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்படாத விவரம் குறிப்பிடப்படாத மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது
8. விலைக்கேள்விகள் 19.05.2017 ஆம் திகதி 14:00 மணிக்கு முன்பதாகப் பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ இத்திணைக்களத்தில் பணிப்பாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக்கேள்விகள் 19.05.2017 ஆம் திகதி 14.00மணிக்குத் திறக்கப்படும்.
9. விலைமனுதாரர்கள் அல்லது எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட அவர்களின் பிரதிநிதிகள் மட்டுமே பெறுகைகள் திறக்கப்படும்போது அனுமதிக்கப்படுவர்.
10. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்குப் பெறுகைகள் குழுவிற்கு அதிகாரமுள்ளது.

**வனஜா செல்வரட்ணம்**
**தலைவர், திணைக்களபெறுகைகள் குழு,**
**மாகாணசமூகசேவைகள் திணைக்களம் வ.மா**
**கண்டிவீதி,கைதடி**

**தொலைபேசி: 0213202464 தொலைநகல்: 0212231725**
**மின்னஞ்சல்:** ssdeptnp@gmail.com (C 29477)

## அச்சுவேலி வேலாயுதரின் திருவிழா நாளை ஆரம்பம்

அச்சுவேலி,ஏப்.27
அச்சுவேலி வடக்கு (சரசாளி) சித்திர வேலாயுதர் ஆலயத்தின் வருடாந்த அலங்காரத் திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டது.
ஆலய முதன்மைக் குரு இ.நித்திய கஜேந்திரன் ஐயர் தலைமையில் இடம்பெறும் திருவிழாக்களில் மே மாதம் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வேட்டைத் திருவிழாவும் மறுநாள் 8ஆம் திகதி திங்கட்கிழமை சப்பறத் திருவிழாவும் 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும் 10ஆம் திகதி புதன் கிழமை தீர்த்தத் திருவிழாவும் 11ஆம் திகதி வியாழக்கிழமை திருக்கல்யாணமும் இடம்பெறும்.
மறுநாள் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வைரவர் சாந்தியும் எட்டாம்மடையும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

## தையிட்டி விநாயகருக்கு நாளை திருக்குட முழுக்கு

யாழ்ப்பாணம், ஏப்.28
தையிட்டி, அரசடி சித்தி விநாயகர் ஆலய திருக்குட முழுக்குப் பெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.15 மணிக்கு இடம்பெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்தனர். (வ-10)

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம்.ஏப்.29
கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்தப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறும் என்று சங்கத்தின் செயலாளர் ந.கனகலிங்கம் அறிவித்தார்.
இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாகத் தெரிவுகளும் இடம்பெறவுள்ளதால் அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (வ-10)

## பொதுச் சபைக் கூட்டம்

வட்டுக்கோட்டை,ஏப்.29
அராலி மத்தி, உலோலசிட்டி விநாயகர் சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுச் சபைக் கூட்டமும் 30ஆவது ஆண்டு நிறைவு விழாவும் இன்று சனிக்கிழமை மு.ப.10 மணிக்கு அராலி மத்தியிலுள்ள சங்கத் தலைவரின் இல்லத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.
சங்கத்தலைவரான வி.செல்வரத்தினத்தின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.மோகன் கலந்துகொள்வார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-10)

## கதைத் தொகுதிகள் உரையாடல் நிகழ்வு

யாழ்ப்பாண இலக்கியக் குவியத்தின் ஏற்பாட்டில் வி.கௌரிபாலனின் 'காற்றில் மிதக்கும் தழும்பின் நிழல்', 'சாத்திரியின் அவலங்கள்', 'திரேசாவின் யோவான் 14:2' ஆகிய கதைத் தொகுதிகளுக்கான உரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு 149/ஏ பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம் (சுண்டுக்குளி தபாலகம் முன்பாக) என்ற முகவரியில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

## சாயி பக்தர்களின் அனுபவப் பகிர்வு

யாழ்ப்பாணம்,ஏப்.29
சத்திய சாயி சேவா நிறுவனத்தின் பொன்விழா ஆண்டையொட்டி சாயி பக்தர்களின் அனுபவப் பகிர்வு சாயி சமர்ப்பணம் தொடர் 3 இன்று மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் சத்தியசாயி சேவா நிலையத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
நிகழ்வில் இலங்கை சத்திய சாயி பன்னாட்டு நிறுவனத்தின் வடபிராந்திய முன்னாள் தலைவரும், சத்தியசாயி பாடசாலை முகாமைக்குழுவின் செயலாளரும், இலங்கை சத்தியசாயி பன்னாட்டு நிறுவனத்தின் வடமராட்சி சாயி நிலையங்களின் இணைப்பாளருமான ஸ்ரீ.வே.சேனாதிராஜாவின் சாயியுடனான அனுபவப் பகிர்வும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

## ரணில் - மோடி சந்திப்பில் சீனாவுக்கு முன்னுரிமை

இந்தியா, இலங்கை தலைமை அமைச்சர்களிடையே இடம்பெற்ற சந்திப்பில் சீனா தொடர்பான விடயங்களுக்கே முக்கியத்துவம் வழங்கப்பட்டது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
அம்பாந்தோட்டைத் துறை முகத்தை சீனாவுக்கு வழங்குவது குறித்து மோடி, ரணிலிடம் கேள்வி எழுப்பினார். துறைமுகம் சீனாவின் வர்த்தக நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படுமே தவிர, இராணுவ நடவடிக்கைகளுக்கு அனுமதிக்கப்படாது என்று ரணில் உறுதியளித்தார் என்று கூறப்படுகிறது. (ஐ - 10)

# பூந்தோட்டம் முகாம் மக்கள் புதிய வீடுகளில் குடியேற மறுப்பு

## அங்கு அடிப்படை வசதிகள் இல்லையெனக் குற்றச்சாட்டு

வவுனியா, ஏப். 29

21வருடங்களாக வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் வசித்துவரும் மக்கள் சின்ன அடம்பனில் அண்மையில் நிர்மாணிக்கப்பட்ட புதிய வீடுகளில் குடியேற மறுப்புத் தெரிவித்து வருகின்றனர். அடிப்படை வசதிகள் இல்லாதமையால் அங்கு குடியேற முடியாத நிலை உள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

போர் காரணமாகப் பல்வேறு பகுதிகளிலிருந்தும் 1995ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து வந்த மக்கள் வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் 21வருடங்களாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குத் தற்போது சின்ன அடம்பனில் 67 வீடுகள் லைக்கா நிறுவனத்தால் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் வீடுகளில் குடியேற நலன்புரி நிலையத்திலிருக்கும் மக்கள் மறுப்புத் தெரிவித்து வருகின்றனர்.

அங்கு தண்ணீர், மின்சாரம், போக்குவரத்து, கல்வி, வைத்தியசாலை போன்ற முக்கிய அடிப்படைத் தேவைகள் ஏற்படுத்தப்படவில்லை. மின் இணைப்புப் பணிகள் பூர்த்தி செய்து கொடுக்கப்படவில்லை என்று அந்த மக்கள் மேலும் கூறினர்.

புளியங்குளம்பரசன்குளம் பகுதியில் லைக்கா நிறுவனத்தால்கட்டிமுடிக்கப்பட்ட 85 வீடுகளில் தங்களைக் குடியமர்த்துமாறு இந்த மக்கள் கோரியுள்ளனர். இங்கு ஓரளவு வசதிகள் காணப்படுவதாக அவர்கள் கூறியுள்ளனர்.

சின்ன அடம்பனில் கட்டிமுடிக்கப்பட்ட வீடுகளிலிருந்த பொருள்கள் திருடர்களால் திருடப்படுகின்றன. அதனாலேயே மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் அவசர அவசரமாகத் தங்களை அங்கு சென்று குடியேற வேண்டும் என்று வற்புறுத்துவதாக நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள குடும்பத் தலைவி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக வவுனியா மாவட்டத் திட்டப் பணிப்பாளர் திருமதி கிருபா சுதன் தெரிவித்ததாவது:

பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்ட மக்களின் விருப்பத்தின்பேரிலே அவர்களை அங்கு குடியேற்றுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டது. உத்தியோகபூர்வமாக நிகழ்வுகள் இடம்பெற்று வீடுகளின் திறப்புக்களும் அரசியல் பிரமுகர்கள், அரச அதிகாரிகள் உள்ளிட்டவர்களின் முன்னிலையில் மக்களிடம் கைளிக்கப்பட்டன.

கையளிக்கப்பட்ட திறப்புக்கள் திரும்பப் பெறப்படும். பெயர் விவரங்கள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு உரிய திறப்புக்கள் மீள அவர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று அவர்களிடம் ஏற்கனவே கூறப்பட்டது. இது அந்த நிறுவனத்துக்கும் தெரிந்த விடயம் - என்றார்.

நிர்மாணிக்கப்பட்ட வீடுகளில் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என நலன்புரி நிலைய மக்கள் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக் குறித்துக் கேட்டபோது,

இலவச மின்சார இணைப்புக்காக 20ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. சின்ன அடம்பனில் குடியேறுபவர்களுக்குச் சோலர் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன். அந்தப் பகுதியில் குடியேறும் மக்கள் பயமின்றி 24 மணி நேரமும் வெளிச்சத்தில் இருக்கவேண்டும் என்பதற்காகவே 55 இலட்சம் ரூபா செலவில் 60மின் குழிழ்கள் பொருத்தப்பட்டுள்ளன.

அங்கு சென்று குடியமரும் பட்சத்தில் போக்குவரத்து வசதிகளை நாங்கள் ஏற்படுத்தித் தருவோம். அங்கு சென்று குடியமராமல் பேருந்துச் சேவையை எப்படி மேற்கொள்வது? அங்கு சென்று குடியமரும் பட்சத்தில் மேலதிக தேவைகளைப் பெற்றுக்கொடுக்க முடியும். ஒரு இலட்சம் ரூபா வாழ்வாதாரமாகக் கொடுப்பதற்குச் சிறப்பு அனுமதி பெறப்பட்டுள்ளது. இதில் 75 ஆயிரம் ரூபாவுக்கு வாழ்வாதார உதவியாகக் கால்நடைகள் வழங்குவதற்கும் 25ஆயிரம் ரூபா பணமாக வழங்குவதற்கும் மாவட்டச் செயலர் அமைச்சின் செயலாளரிடம் அனுமதி பெற்று வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

அந்தப் பணத்தைப் பெறுவதற்கு 90 குடும்பத்தினர் வங்கியில் கணக்குத் திறந்துள்ளனர். சில தினங்களில் பணம் கணக்கில் வைப்பிலிடப்படும். நலன்புரி நிலையத்திலிருந்து அவர்களின் பொருள்களை எடுத்துச் செல்வதற்கு மாவட்டச் செயலர் போக்குவரத்து வசதிகள் மேற்கொண்டுள்ளார் - என்றார்.

(து - 4)

## வடக்கு தாதியர்களுக்கு மே முதல் இடமாற்றம்


வட மாகாண சுகாதாரத் திணைக்கள வைத்தியசாலைகளில் ஐந்து வருடங்களுக்கு மேல் சேவையாற்றும் தாதிய அலுவலர்களுக்கான வருடாந்த இடமாற்றப் பட்டியல் மாகாண சுகாதார அமைச்சின் செயலாரால் வைத்தியசாலைகளுக்கும் சம்பந்தப்பட்ட தாதிய அலுவலர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த இடமாற்றம் எதிர்வரும் மே இரண்டாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் அனுப்பப்பட்டுள்ளது. மாகாண சுகாதார அமைச்சினால் ஏற்கனவே அனுப்பப்பட்ட தாதிய அலுவலர்களுக்கான இடமாற்றப் பட்டியல் தொடர்பான மேன்முறையீடுகள் பரிசீலிக்கப்பட்டுச் சிலரின் மேன்முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுப் புதிய நிலையங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஏனையோரின் இடமாற்றத்தில் மாற்றமில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது. மாகாண வைத்தியசாலைகளில் கடமையாற்றும் 197 தாதிய அலுவலர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டது.

(து-9)

## மின் கட்டண அறவீடு நீண்ட காலம் இல்லை

### ஊழியர் பற்றாக்குறையே காரணம் எனச் சுட்டிக்காட்டு


கோப்புப்படம்

முல்லைத்தீவு, ஏப். 29

மின்சார சபைக்குப் போதிய ஊழியர்கள் இன்மையால் மின்சாரக் கட்டணத்தை அற வீடு செய்ய முடிய வில்லை என மின்சார சபை உத்தியோகத்தர் தெரிவித்தார்.

வவுனியா வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் நீண்ட காலமாக மின்சாரக் கட்டணங்கள் அறவீடு செய்யப்படவில்லை.

இரண்டு வருடங்களுக்கு மேலாகப் பல குடும்பங்களிடம் மின்சாரக் கட்டணம் அறவீடு செய்யப்படாமல் உள்ளது.

விவசாயத் தேவைக்காக நீரிறைக்கும் மின் மோட்டர்களை பயன்படுத்துவதால் பெரும்பாலான குடும்பங்கள் மாதம் தோறும் அதிக மின் கட்டணத்தைச் செலுத்த வேண்டிவரும். மாதம் தோறும் கட்டணங்களை அறவீடு செய்யாமல் முழுமையாக ஒரே தடவையில் அறவிட்டால் விவசாயிகள் பாதிக்கப்படக் கூடும். இதனைத் தவிர்க்கும் படி கடந்த 24ஆம் திகதி நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இணைத் தலைவர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது. அத்துடன் அரச திணைக்களங்களுக்கும் மின்சாரக் கட்டண அறவீடுகள் ஒழுங்காக வராமையால் சிரமங்களை எதிர்கொள்ளவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக அதிகாரிகளும் தெரிவித்தனர்.

"மின்சாரக் கட்டணம் அறவீடு செய்வதற்குப் போதிய ஊழியர்கள் இல்லை. குறைந்தளவான ஊழியர்களே உள்ளனர். அவர்களைக் கொண்டு சில இடங்களிலேயே சேவையைச் செய்யக்கூடியதாக உள்ளது. ஒரே தடவையில் கட்டணம் அறவீடு செய்யமாட்டோம்.

பகுதி பகுதியாகச் செலுத்தக் கூடிய ஒழுங்குகள் செய்துள்ளோம். மின்துண்டிப்புச் செய்யப்படமாட்டாது" என ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட மின்சார சபை உத்தியோகத்தர் தெரிவித்தார். (து - 7)

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வடக்கில் பணிப்புறக்கணிப்பு

### வருடாந்த இடமாற்றப் பட்டியல் முறையற்றது எனத் தெரிவித்து

யாழ்ப்பாணம் ஏப் 29

வடக்கு மாகாண சுகாதார திணைக்களம் மற்றும் உள்ளூராட்சிச் சபைகளில் கடமையாற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்றுமுன்தினம் தொடக்கம் வெளிக்கள வேலைப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சினால் கடந்த ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையிலான இடமாற்றப் பட்டியல் வெளியிடப்பட்டது. இது தாபன விதிக்கோவைகளுக்கு முரணானது எனக் கூறிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் வெளிக்களப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரால் கடந்த வருடம் அனுப்பப்பட்ட இடமாற்றப் பட்டியல் தாபன விதிக் கோவைகளுக்கு முரணான முறையில் தயாரிக்கப்பட்டதெனக் குற்றஞ்சாட்டிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கடந்த டிசெம்பர் மாதம் தொடக்கம் ஜனவரி பத்தாம் திகதி வரை 22 தினங்கள் வெளிக்களப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இது தொடர்பாகத் தொழிற்சங்கத்தினர் மாகாண சுகாதாரஅமைச்சருடன்கலந்துரையாடியதையடுத்துப் போராட்டம் கைவிடப்பட்டு அவர்கள் கடமைக்குத் திரும்பினர்.

மீண்டும் அதே இடமாற்றப் பட்டியலை அனுப்பியுள்ள சுகாதார அமைச்சின் செயலாளர், எதிர்வரும் மே முதலாம் திகதி தொடக்கம் சுகாதாரப் பரிசோதகர்கள் புதிய நிலையங்களில் கடமையேற்கவேண்டுமென அறிவித்திருந்தார்.

இதனால் தாய்ச்சங்கத்தின் வேண்டுகோளின் பிரகாரம் வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் அனைத்துப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் நேற்று முன் தினம் தொடக்கம்வெளிக்களப்பணிக்குச் செல்லாமல் அலுவலகங்களில் கடமையாற்றவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (து-9)

## சகல திணைக்களப் பணியாளர்களும் வடமாகாண சேவைக்குள் உள்ளீர்ப்பு

யாழ்ப்பாணம் ஏப். 29

வடக்கு மாகாண அரச திணைக்கள நிலையங்களில் பணியாற்றும் அனைத்துப் பணியாளர்களும் மாகாண சேவைக்குள் உள்ளீர்க்கப்படவுள்ளனர். இதுவரை மாகாண சேவைக்குள் உள்ளீர்க்கப்படாத பணியாளர்கள் உரிய படிவங்கள் மூலம் பொது சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2007 ஜனவரி முதலாம் திகதிக்கு முன்னர் நியமனம் பெற்ற வட மாகாண ஆளணிக்குட்பட்ட மாகாண அரச பணியாளர்கள் அனைவரும் வடக்கு மாகாணத்துக்கு உள்ளீர்ப்புச் செய்யப்படுவதற்கு விண்ணப்பிக்குமாறு மாகாணப்பொதுச்செவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபைக்குட்பட்ட பகுதிகளில் கடமையாற்றுவோரில் மாகாண உள்ளீர்ப்புக் கடிதத்தை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் உடனடியாக விண்ணப்பித்து மாகாண உள்ளீர்ப்புக் கடிதத்தை மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரிடம் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

1996 ஆம் ஆண்டு வடக்குகிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட அரச திணைக்கள நிறுவனங்களில் கடமையாற்றியோர் வடக்கு - கிழக்கு மாகாணத்தினால் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டனர். பின்னர் வடக்கு மாகாண சபை தனித்து இயங்கத் தொடங்கிய பின்னர் பணியாளர்கள் வடக்கு மாகாண சபைக்குள் உள்ளீர்க்கப்பட்டனர்.

2007 ஜனவரி முதலாம் திகதிக்குப் பின்னர் வடக்கு மாகாண சபையின் அரச திணைக்களங்களில் இடமாற்றம் பெற்றுக் கடமையாற்றும் பணியாளர்களில் சிலர் இன்னமும் மாகாண சேவைக்குள் உள்ளீர்க்கப்படவில்லை என அவதானிக்கப்பட்டுள்ளது எனவும், இதனையடுத்து அனைத்துப் பணியாளர்களையும் வடமாகாண சேவைக்குள் உள்ளீர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டது.(து-9)





மட்டக்களப்பு கல்குடாப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுவரும் சாராய உற்பத்தித் தொழிற்சாலையைத் தடை செய்யக்கோரி நேற்று வெள்ளிக்கிழமை சித்தாண்டியில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மயிலத்தமடு மற்றும் மாதவனை கால்நடைப் பண்ணையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பிரதேசக் கால்நடை வளர்ப்பாளர்கள் கலந்து கொண்டனர். (ஐ)

## தந்தை செல்வா நினைவு தினம்

மட்டக்களப்பு,ஏப்.29

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பட்டிருப்புத் தொகுதிக் கிளையின் ஏற்பாட்டில் தந்தை செல்வாவின் 40 ஆவது நினைவு தினம் நாளை ஞாயிற்றுக்கிழமை களுதாவளை கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா சம்பந்தன் , இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டு உரை நிகழ்த்தவுள்ளனர். (ஐ-101)

## ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை; சந்தேகநபர்களின் மறியல் நீடிப்பு

கொழும்பு, ஏப். 29

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட நால்வரினதும் விளக்கமறியல் எதிர்வரும் மே 12 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் எம்.கணேசராஜா முன்னிலையில் சந்தேக நபர்களை நேற்று முன்னிலைப்படுத்திய போதே, நீதிவான் அவர்களுக்கான விளக்கமறியலை நீடித்தார்.

கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சித் தலைவருமான பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மாகாணசபை உறுப்பினருமான பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்தராஜா, கஜன் மாமா எனப்படும் கனகநாயகம் மற்றும் இராணுவப் புலனாய்வு உத்தியோகஸ்தர் எம்.கலீல் ஆகியோருக்கே விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

த.தே.கூ நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், 2005 ஆம் ஆண்டு மட்டக்களப்பு புனித மரியாள் இணைப் பேராலயத்தில் நடைபெற்ற நத்தார் நள்ளிரவு ஆராதனையில் கலந்து கொண்டிருந்தபோது சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபரான சிவநேசதுரை சந்திரகாந்தன் உள்ளிட்ட 4 பேர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர். (ஐ-10)

# கொழும்பில் மட்டும் 3000 சட்ட விரோதக் குடியிருப்புக்கள்

## மதிப்பீட்டில் தகவல்

கொழும்பு, ஏப். 29

கொழும்பு நகரில் மாத்திரம் மூவாயிரம் சட்ட விரோதக் குடியிருப்புக்கள் காணப்படுகின்றன என்று இலங்கை மீட்டல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம் மேற்கொண்ட மதிப்பீட்டின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

காலாகாலமாக இருந்து வரும் முறையற்ற ஒழுங்கமைப்பைச் சரிசெய்வதற்காக சட்ட விரோதக் குடியிருப்பாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூட்டுத்தாபனத்தின் தலைவர் அசேல இத்தவல தெரிவித்தார்.

கால்வாய்கள், கீழ் நிலப்பகுதிகள் போன்றவற்றில் சட்ட விரோதக் குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நகர அபிவிருத்தி நடவடிக்கையின் போதும், வெள்ள இடர் தவிர்ப்பு நடவடிக்கையின் போதும் இந்தக் குடியிருப்புக்கள் விரைவில் அகற்றப்பட வேண்டிவரும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-10)

## கூட்டமைப்பின் மே தினம் அம்பாறையில்

அம்பாறை,ஏப்.29

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மே தின நிகழ்வுகள் எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை அம்பாறை மாவட்ட ஆலையடிவேம்பு பொது மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொள்வர். (ஐ-101)

## அரச பொது ஊழியர் சங்கத்தின் மே தின நிகழ்வு கல்முனையில்

அம்பாறை,ஏப்.29

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் மே தின நிகழ்வு எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி கல்முனை மாநகரில் நடைபெவுள்ளது.

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் ஆயுள்காலத் தலைவர் எஸ்.லோகநாதன் தலைமையில் நடைபெறும் மேதின நிகழ்வுகளின் இறுதி நிகழ்வான மே தினக் கூட்டம் கல்முனை வை.எம்.சீ.ஏ மண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்வில் சமூக சேவைகள் திணைக்கள கிழக்கு மாகாண பணிப்பாளர் எம்.சி.அன்சார் முதன்மை விருந்தினராகவும், சங்க ஆலோசகரும், கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான பேராசிரியர் எம். இராஜேஸ்வரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (ஐ-30)

# தனியார் யானை வளர்க்க அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஏப். 29

தனியாரும், சமய வழிபாட்டுத் தலங்களும் குட்டி யானைகளைத் தத்தெடுத்து வளர்ப்பதற்கு அனுமதி வழங்குமாறு, வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனஜீவராசிகள் அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேராவால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பின்னவல யானைக் காப்பகத்தில் உள்ள இட நெருக்கடி மற்றும் அதனைப் பராமரிப்பதற்கான நிதி நெருக்கடி என்பவற்றைச் சமாளிப்பதற்காகக் குட்டி யானைகளைத் தத்தெடுத்து வளர்ப்பதற்கு இருந்த தடையை நீக்குவதற்கு , அரசு தீர்மானித்துள்ளது.

30 ஏக்கர் நிலத்தில் அமைந்த இந்தக் காப்பகத்தில் 88 யானைகள் உள்ளன. அங்கு, யானை இனப் பெருக்கும் திட்டம் வெற்றிகரமாக உள்ளது. வளர்ப்பு யானைகளைப் பதிவு செய்தல், பாதுகாத்தல் தொடர்பான சட்டங்களை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

வளர்ப்பு யானைத் தடையால் சமய மற்றும் கொண்டாட்ட ஊர்வலங்களுக்கு யானைகள் கிடைக்காமல் போகலாம் என்ற பிரச்சினை உள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

ஆலயங்களுக்கு யானைகள் இலவசமாக வழங்கப்படும். வளர்ப்புக்காக யானையொன்றைப் பெறுவதானால் 10 மில்லியன் ரூபா செலுத்த வேண்டும். வயது குறைந்த யானைகளை, பாரம் நகர்த்தப் பயன்படுத்துவது, இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் 7 ஆயிரத்து 500 காட்டு யானைகளும் 200 வளர்ப்பு யானைகளும் உள்ளன என்று அரச பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"யானையொன்றை வளர்ப்பது உயர் மதிப்பின் சின்னமாக இலங்கையில் கருதப்படுகின்றது. குட்டி யானைகளை யானைக் குடும்பத்திலிருந்து பிரிப்பதற்கு எதிர்ப்பும் உள்ளது." என்று ஆசிய யானை நிபுணர் ஜயந்த ஜயவர்த்தன தெரிவித்தார். (ஐ-10)

# மக்களின் கதவடைப்புப் போராட்டத்துக்கு உரிய தீர்வை அரசு வழங்கவேண்டும்

## கிழக்கு மாகாண அமைச்சர் துரைராசசிங்கம் வலியுறுத்து

மட்டக்களப்பு,ஏப்.29

கதவடைப்புச் செயற்பாட்டின் மூலம் மக்களால் வெளிப்படுத்தப்பட்ட உணர்வுகளை பன்னாட்டுச் சமூகமும், அரசும் அக்கறையோடு புரிந்து கொள்ளும் என்று நம்புகின்றோம். எனவே காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் தாம் நிறைவேற்றவுள்ளதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு அரசு வழங்கியுள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் அரசு கூடிய அக்கறை செலுத்த வேண்டும்.



இவ்வாறு கிழக்கு மாகாண விவசாய அமைச்சரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளருமாகிய கி. துரைராசசிங்கம் தெரிவித்தார் என்று அவரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உறவினர்களின் கோரிக்கையின் அடிப்படையில் அழைப்பு விடுக்கப்பட்ட முழுக் கடையடைப்புப் போராட்டம் தமிழ் மக்களால் முழுமையான முறையில் ஏற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது. அந்த அழைப்புக்கு எமது அனுசரணையும் இருந்தது. எமது இந்த அனுசரணை அழைப்பை ஏற்றுக் கடையடைப்புப் போரட்டம் வெற்றி பெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்கி அனைத் துத் தமிழ் மக்களுக்கும் எமது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நன்றிகள்.

குறிப்பாக வர்த்தகச் சமூகங்கள், போக்குவரத்துத் துறையினர், மாணவர்கள், தொழிலாளர்கள், உத்தியோகத்தர்கள், உள்ளிட்ட அனைத்துப் பொது மக்களும் தங்கள் உணர்வார்ந்த ஆதரவை வழங்கினர். இந்தச் செயற்பாட்டின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்ற உணர்வுகளைப் பன்னாட்டுச் சமூகமும், அரசும் அக்கறையோடு புரிந்து கொள்ளும் என நம்புகின்றோம்.

பன்னாட்டுச் சமூகம் இவ்வுணர்வை மதித்து கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையிலான செயற்பாடுகளுக்கு இன்னும் கூடுதலான அக்கறையையும், செயற்பாட்டுத் தன்மையும் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.- என்றுள்ளது. (ஐ-101)



## இராணுவப் பதவியில் சரத் பொன்சேகாவை நியமிப்பது ஏற்றதல்ல

### ஆனந்தசங்கரியும் போர்க்கொடி

யாழ்ப்பாணம், ஏப். 29

ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்த இராணுவ அதிகாரிகள் தேவையில்லை. பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவைத் தளபதி அதிகாரம் கொண்ட அல்லது அதுபோன்ற அதிகாரம் கொண்டவராக நியமிப்பது எவருக்கும் ஏற்புடையது அல்ல எனத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்த இளைப்பாறிய இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை தளபதி அதிகாரம் கொண்ட அல்லது அதுபோன்ற அதிகாரம் கொண்டவராக சிறப்பாக நியமிப்பது எவருக்கும் ஏற்புடையது அல்ல.

அரசின் இந்த நடவடிக்கை எதிர்பார்த்த பலனைத் தராது. நாட்டில் புரட்சியையும், சில குழுக்கள் ஆயுதம் தாங்கவும் வசதி செய்து கொடுப்பதாக அமையும். மிகவும் புத்திசாதுரியமற்ற இந்தச் செயற்பாடு பன்னாட்டுச் சமூகத்தின் கண்களுக்குப் படுமோசமான செயலாகத் தோன்றுவது மட்டுமல்ல இது நாட்டை சர்வாதிகார ஆட்சிக்கு இழுத்துச் செல்லும் என்று நிராகரித்துவிடும்.

எமது மக்கள் தாம் அங்கீகரிக்க உடன்பாடற்ற விடயங்களை அரசுக்குத் தெரியப்படுத்த உள்ள ஒரேயொரு வாய்ப்பு ஆர்ப்பாட்டமே.

அரசு வன்முறையைக் கட்டுப்படுத்த நல்லதொரு வழிமுறையை ஏற்படுத்தவேண்டுமானால் ஏதாவதொரு விதிமுறையை அல்லது சட்டத்தைச் செயற்படுத்தலாம். நாட்டை ஆளும் அதிகாரத்தைப் பெற்றவர்கள் மக்களைத் தமது இரும்புக் கரத்தால் நசுக்க முடியா தென்பதை ஞாபகமூட்டத் தேவையில்லை என்றார். (த-101)

# முள்ளிக்குளம் காணி விடுவிப்புக் குறித்து இன்று முக்கிய பேச்சு

### கடற்படைத் தளபதி, மக்கள் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்பர்

யாழ்ப்பாணம், ஏப். 29

மன்னார் முள்ளிக்குளம் பகுதியில் தமிழ் மக்களின் காணிகளில் அமைந்துள்ள கடற்படை முகாமைப் பின் நகர்த்தி மக்களைக் குடியேற்றுவது தொடர்பான பேச்சு ஒன்று இன்று இடம்பெறவுள்ளது.

கடற்படைமுகாமில் நடக்கும் இந்தப் பேச்சில் சகலரும் பங்கேற்கவுள்ளன.

மன்னார் முள்ளிக்குளத்தில் தமிழ் மக்களின் வாழ்விடங்கள், மத வழிபாட்டுத் தலங்கள் உள்ளடங்கிய 300 ஏக்கர் நிலம் உட்பட 600 ஏக்கர் நிலப்பரப்பில் கடற்படையினர் முகாமிட்டுள்ளனர்.

இந்த முகாமில் கடற்படையினர் தமக்கான பெரும் கட்டடம் ஒன்றை அமைத்துள்ளதோடு தமிழ் மக்களின் 27 வீடுகளையும் ஆக்கிரமித்து அவற்றில் தமது குடும்பங்களைத் தங்க வைத்துள்ளனர்.

இவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமது 300 ஏக்கர் நிலத்தையும் கடற்படையினர் விடுவித்து முகாமைப் பின்ன நகர்த்த வேண்டும் எனக் கோரி முள்ளிக்குளம் மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் குறித்த பகுதி விடுவிப்புத் தொடர்பில் இன்று குறித்த கடற்படை முகாமில் கடற்படைத் தளபதி, மாவட்டச் செயலக அதிகாரிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மன்னார் ஆயர் இல்லப் பிரதிநிதிகள் உள்ளடங்கிய குழுவினர் கூடிப் பேச்சு நடத்தவுள்ளனர்.

இதன்போது பொதுமக்களின் காணிகள் விடுவிப்புத் தொடர்பில் ஒரு உறுதியான தீர்மானம் எட்டப்படும் என எதிர்பார்க்கப் படுகின்றது. (த-101)

## கொக்கிளாய் பகுதியிலும் இல்மனைற் கண்டுபிடிப்பு

### அதனைச் சட்ட ரீதியாகப் பெறுவது தொடர்பில் ஆராய்வதற்கு தீர்மானம்

யாழ்ப்பாணம், ஏப்.29

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்து றைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொக்குளாய் பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ள இல்மனைற் தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த இல்மனைற் காணப்படும் பகுதியில் ஆய்வு மேற்கொள்வதற்கான முன்னோடிக் கலந்துரையாடல் ஒன்று நேற்று முன் தினம் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு, திருகோணமலை எல்லைப் பகுதிகளான புல்மோட்டை உள்ளிட்ட பிரதேசத்தில் காணப்படும் இல்மனைற்றை வேறு நபர்கள் பெற்று வருமானம் ஈட்டுவதாகத் தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில் தற்போது கொக்குளாய்ப் பகுதியிலும் இல்மனைற் அதிகம் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இதனையடுத்து சட்ட ரீதியில் அதனைப் பெறமுடியுமா என்பது தொடர்பில் ஆராயவே இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இது குறித்து கரைத்துறைப்பற்றுப் பிரதேச செயலாளர் குணபாலனிடம் கேட்டபோது,

இந்தப் பகுதியின் இல்மனைற் தரமானது எனக் கண்டறியப்பட்டாலும் புல்மோட்டைப் பகுதியில் இடம்பெறுவது போன்று மணலை அள்ளிச் சென்று இல்மனைற் பெற அனுமதிக்கப்படமாட்டாது என்பதை உறுதிபடத் தெரிவித்துள்ளோம். இந்தப் பகுதியில் வைத்தே மணலில் இருந்து பிரித்து இல்மனைற் மட்டுமே கொண்டு செல்லப்பட முடியும் இவ்வாறு செய்வதால் ஆண்டுக்கு 15 தொடக்கம் 25 சுமைக்கும் உட்பட்ட மணலே பிரதேசத்தில் இருந்து வெளியேற செல்லும். இதனால் அந்தப் பகுதிக்குப் பாதிப்புக்கள் ஏற்படமாட்டாது. குறித்த பணிக்காகத் துறைசார் தொழிலாளர்கள் தவிர்ந்த ஏனைய அனைவரையும் உள்ளூரில் இருந்தே வேலைக்கு அமர்த்து இளைஞர்களுக்குத் தொழில் வாய்ப்பை வழங்கவேண்டும்.

குறித்த பகுதி மணலின் மாதிரி கொண்டு செல்லப்பட்டு பரீட்சிக்கப்பட்ட பின்னர் அவை தரமானது எனக் கண்டறியப்பட்டால் அடுத்த கட்டப் பேச்சுக்களில் சகல தரப்பையும் உள்ளடக்கி இறுதி தீர்வை எட்டுவதாக இணக்கம் காணப்பட்டது-என்றார். (த-101)



## குமனாயங்குளம் பகுதியில் தோமையார் சிலை திறப்பு

மன்னார், ஏப். 29

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஆண்டாங்குளம் குமனாயங்குளம் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட புனித தோமையார் சிலை நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 7 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

மன்னார் மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை இதனைத் திறந்து வைத்தார்.

குறித்த பிரதேசத்தில் முன்னர் காணப்பட்ட தோமையார் சிலை போரின் காரணமாக சேதமடைந்தது. குறிந்த சிலையை மீண்டும் அந்தப் பகுதியில் அமைக்கவேண்டும் எனக் கிராம மக்கள் மேற்கொண்ட முயற்சியின் பலனாக 6 அடி உயரத்தில் புதிய சிலை அமைக்கப்பட்டது.

நேற்று முன் தினம் இரவு மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை குறித்த சிலையை வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் அருட்தந்தையர்கள், பங்கு மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (த-56)

## ஆலயத்தில் அதிகாலை பாடல் ஒலிபரப்ப படையினர் தடை?

யாழ்ப்பாணன், ஏப். 29

கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் அம்மன் ஆலயத்தில் அதிகாலையில் பாடல்களை ஒலிபரப்ப இராணுவம் தடை விதித்துள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது .

இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ள ஆலயத்தின் அருகில் இறுதிப் போரின் பின்னர் இராணுவத்தினர் பௌத்த விகாரை ஒன்றை அமைத்துள்ளனர். இந்த விகாரையைக் காரணம் காட்டியே ஆலயத்தில் அதிகாலை பாடல் ஒலிபரப்பத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஆண்டாண்டு காலமாகப் பின்பற்றி வந்த வழிபாட்டு முறையை இப்போது இராணுவத்தினர் தடுத்துள்ளதாக ஆலய நிர்வாகத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆலயத்தின் அதிகாலைப் பூசை 5 மணிக்கு இடம்பெறுவது வழமை . இதனால் அதிகாலை 4.30 மணிக்குத் திறக்கப்படும் ஆலயத்தில் துயில் எழுப்பும் பாடல்களும், ஆராதனைகளும் ஒலிபரப்புச் செய்யப்படுவது வழமையாகும்.

இந்த நிலையில் அருகில் உள்ள விகாரையில் காலையில் இடம்பெறும் வழிபாட்டுக்கு இந்து ஆலயத்தில் ஒலிபரப்பப்படும் பாடல்கள் இடையூறாக இருப்பதாகக் கூறப்பட்டே அது தடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு அண்மையில் உள்ள வேறொரு ஆலயத்தில் இவ்வாறு அதிகாலையில் பாடல்களை ஒலிபரப்ப இராணுவம் தடை விதித்ததாகக் கூறப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் ஆலய நிர்வாகத்தினருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, ஒலிபெருக்கி பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டதை அவர்கள் மறுக்கவில்லை. ஆயினும் இப்போது அப்படி ஏதும் இல்லை என ஒரு உறுப்பினர் கூறினார்.

ஆயினும் குறித்த இரு ஆலயங்களிலும் அதிகாலை ஒலிபரப்பப்பட்டு வந்த பக்திப்பாடல்கள் இப்போது ஒலிபரப்பப்படுவதில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த-101)

# சில முஸ்லிம் பிரதேசங்களில் கடையடைக்காமை ஏமாற்றம்

### வடக்கு மாகாணசபை உறுப்பினர் அஸ்மின் கவலை

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட கடையடைப்புக்கு கிழக்கு மாகாணத்தில் ஒரு சில முஸ்லிம் பிரதேசங்களில் கடையடைப்பு முன்னெடுக்கப்படவில்லை. இது ஏமாற்றத்தை அளிப்பதாகவுள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாணசபை உறுப்பினர் அஸ்மின் அயூப் தெரிவித்தார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

காணாமலாக்கப்பட்டோர் மற்றும் நிலவிடுவிப்புத் தொடர்பில் அரசின் செயற்பாடுகளின் மீதான அதிருப்தியை வெளிப்படுத்தும் வகையில் கடையடைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதற்குப் பல்வேறு தரப்பினரும் ஆதரவு வழங்கினர். கிழக்கு மாகாணத்தில் ஒரு சில முஸ்லிம் பிரதேசங்களில் குறித்த கடையடைப்பு நடவடிக்கை இடம்பெறவில்லை என்ற செய்திகளை அறியக் கூடியதாக இருந்தது. இது மிகுந்த ஏமாற்றத்தை ஏற்படுத்தும் நிகழ்வாகவே அமைந்திருக்கின்றது.

வடக்குகிழக்கு மக்கள் என்றவகையில் தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும், சிங்கள மக்களும் பல்வேறு பாதிப்புகளைக் கடந்த 30 வருடகாலப் போரின் மூலம் எதிர்நோக்கியிருந்தார்கள். சமூகங்களுக்கு இடையிலான விரிசல்களும் அதிகரித்துக் கொண்டே சென்றன. இவ்வாறான நிலையில் 2009 இல் போர் நிறைவுக்கு வந்ததன் பின்னர் குறித்த பிரதேசங்களிலே நிலமைகள் வழமைக்குத் திரும்பத் தொடங்கியும் முழுமையான தீர்வுகள் இதுவரை பெற்றுத் தரப்படவில்லை.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான பிரச்சினைகளும் நில ஆக்கிரமிப்பு தொடர்பிலான பிரச்சினைகளும் முக்கியமானவையாக மாறியிருக்கின்றன. இந்த மக்களின் போராட்டங்களை அரசியலாக நோக்க முடியாது. இது மனிதாபிமான விடயமாகவே பார்க்கப்பட வேண்டும். இத்தகைய மனிதாபிமானத்திற்கு வலுச் சேர்க்கும் போராட்டம் ஒன்றிற்கு கிழக்கின் முஸ்லிம் பிரதேச மக்கள் ஆதரவு வழங்கவில்லை என்பதை எக்காரணம் கொண்டும் நியாயப்படுத்த முடியாது.

தம்மோடு முறையாகத் தொடர்பாடல்களை மேற்கொள்ளவில்லை என்பதும், இதற்கான விளக்கங்கள் சரியாக மக்களுக்குத் தரப்படவில்லை என்பதும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயங்கள் அல்ல. சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், நல்லாட்சிக்கான தேசிய முன்னணி போன்ற அரசியல் அமைப்புகள் இதற்கான ஆதரவினை வெளிப்படுத்தி நின்றன. அதேபோன்று வடக்கு முஸ்லிம் மக்களும் தமது முழுமையான ஆதரவை வழங்கினார்கள்- என்று தெரிவித்துள்ளார். (த-4)

# ஆயுத உற்பத்திகளை நிறுத்தினால் உலகளாவிய ரீதியில் சமாதானம்

## அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கருத்து

கொழும்பு, ஏப். 29
ஆயுதங்களின் உற்பத்தியை அனைத்து நாடுகளும் தவிர்க்குமாக இருந்தால், அவர்களுடைய நாட்டில் மட்டுமல்ல உலகளாவிய ரீதியிலும் நீண்டதொரு சமாதானத்தை ஏற்படுத்த முடியும்.
இவ்வாறு அரச தலைவவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பன்னாட்டு இஸ்லாமிய மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் என அரச தலைவரின் ஊடக அறிக்கையில் குறிபி டப்பட்டுள்ளது.
அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
நாம் அனைவரும் ஒரே நாட்டில் இலங்கையர்களாக வாழ்வதற்கு உறுதிபூணுவோமானால் நாம் எதிர்பார்க்கும் அமைதியான சமூகத்தைக் கட்டியெழுப்புவது கடினமான விடயம் அல்ல. தம்முடையதைப் போன்று அடுத்தவர்களுடைய உரிமைகளையும், சலுகைகளையும் மதிப்பதன் மூலமே இன்று பேசப்படுகின்ற நல்லிணக்கத்தை யதார்த்தமாக மாற்ற முடியும். நாட்டில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்தி அனைத்து மக்கள் மத்தியிலும் சகோதரத்துவத்தையும், நல்லிணக்கத்தையும் பலப்படுத்தி ஒரே நாடாகக் கட்டியெழுப்புவதற்கு நாம் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.



மனிதன் அதிகாரத்துக்காகவும், செல்வத்துக்காகவும் போராடிய தன் இறுதி விளைவாக மற்றைய மனிதனை அழிவுக்குட்படுத்தினான். உலகில் போர் நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு நாம் கலந்துரையாட வேண்டியது போரில் ஈடுபட்டுள்ளவர்களுடன் அல்ல. போருக்குத் தேவையான ஆயுதங்களை உற்பத்தி செய்பவர்களுடனேயாகும் என்று அரச தலைவர் தெரிவித்தார்- என்றுள்ளது. (ஐ-10)

# மே தினத்தை புறக்கணிப்போர் மீது நடவடிக்கை குறித்து முடிவில்லை

## கூறுகிறார் அமைச்சர் எஸ்.பி.

கொழும்பு, ஏப். 29
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்துக்கு வருகை தராத கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு, இதுவரையில் எந்தவொரு தீர்மானத்தையும் கட்சி முன்னெடுக்கவில்லை.



இவ்வாறு சமூக நலத்துறை அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது,
சகலரையும் கட்சியுடன் இணைத்துக் கொள்வதே கட்சியின் நோக்கமாகும். இந்த நிலைப்பாட்டுடன் உள்ள சகலருக்கும் மே தினத்துக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பகுதியினர் கண்டிக் கூட்டத்துக்கும், மற்றொரு பகுதியினர் காலிமுகத்திடல் கூட்டத்துக்கும் செல்லவுள்ளனர். மற்றும் சிலர் எந்தக் கூட்டத்திலும் கலந்துகொள்ளாதிருக்கவும் தீர்மா னித்துள்ளனர் என்று தெரியவருகிறது.
ஆனால் சுதந்திரக் கட்சியின் கூட்டத்துக்கு வருகை தராதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதா? என்ற முடிவை கட்சி இன்னமும் எடுக்கவில்லை- என்றார். (ஐ-10)

# தாஜுதீனின் உடற்பாகங்களை மன்றில் ஒப்படைக்கப் பணிப்பு

கொழும்பு, ஏப். 29
ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீனுடைய உடற்பாகங்களை நீதிமன்றில் ஒப்படைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் புத்திக ராகல உத்தரவிட்டார்.
ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீனின் கொலை வழக்கு, கொழும்பு நீதவான் நீதிமன்றில், கடந்த புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.
ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீனின் கொலை செய்யப்பட்ட காலப் பகுதியில், அரச தலைவர் செயலகத்தில் இருந்த பதிவுப் புத்தகத்தின் பக்கங்கள் கிழிக்கப்பட்டமை தொடர்பாக, அரச தலைவர் பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றிய மேலும் 14 இராணுவத்தினரிடம் விசாரணை நடத்தவுள்ளதாகக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் அறிவித்தனர்.
பக்கங்கள் கிழிக்கப்பட்டமை தொடர்பில், பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த 25 பேரிடம் விசாரணை நடத்தியுள்ளதாகவும் அவர்களுடைய மேலதிக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
2012ஆம் ஆண்டு மே மாதம் 10ஆம் திகதியிலிருந்து 22ஆம் திகதி வரை, அப்போதைய அரச தலைவர் பாதுகாப்புக்கான பிரிவினர் கையெழுத்திடும் பதிவுப் புத்தகத்தின் பக்கங்கள் கிழிக்கப்பட்டு, செலோரேப்பினால் ஒட்டப்பட்டுள்ளன என்று, புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைகளில் இருந்து கண்டறியப்பட்டது. 2011ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் 2012ஆம் ஆண்டு மே மாதம் வரை மேற்கொள்ளப்பட்ட விசாரணை களிலேயே இது தெரியவந்துள்ளது என்றும் புலனாய்வுப் பிரிவினர் குறிப்பிட்டனர். இந்த விவகாரம் தொடர்பில், விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும், மேலதிக விசாரணைகளுக்கு காலம் தேவைப்படுவதாகவும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் டிலான் ரத்னாயக்க நீதிமன்றில் கோரினார்.
சைட்டம் நிறுவனத்திலிருந்து மீட்கப்பட்ட எலும்பு உள்ளிட்ட உடற் பாகங்கள், தாஜுதீனினுடையது அல்ல என்று, ஜின்டெக் நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில், அந்த உடற்பாகங்களை ஜின்டெக் நிறுவனத்திலிருந்து நீதி மன்றத்துக்குக் கொண்டு வருவதற்கான உத்தரவை வழங்குமாறு, புலானாய்வுப் பிரிவினர் நீதிவானிடம் கோரினர். அதற்கான உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது.



**சைட்டம் நிறுவனத்திலிருந்து மீட்கப்பட்ட எலும்பு உள்ளிட்ட உடற் பாகங்கள், தாஜுதீனினுடையது அல்ல என்று, ஜின்டெக் நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

இந்த நிலையில், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று கூறப்படும், முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்கவின் விளக்கமறியல் மே மாதம் 4ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டதுடன், நாரகேன்பிட்ட பொலிஸ் நிலைய குற்றப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி சுமித் பெரேராவையும் அன்றையதினம் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டது.
வசீம் தாஜுதீன், நாரஹேன்பிட்டிய சாலிகா விளையாட்டு மைதானத்துக்கு அருகில் காரொன்றுக்குள் இறந்த நிலையில் 2012ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதியன்று உடலமாக மீட்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-10)

# பொன்சேகாவுக்கு சிறப்புப் பதவி முன்மொழியவேயில்லை மைத்திரி

## அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 29
பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவை இலங்கை இராணுவத் தளபதியாகவோ, ஒட்டுமொத்தப் படைகளினதும் தளபதியாகவோ நியமிக்கும் யோசனையை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முன்மொழியவில்லை.
இவ்வாறு இலங்கைக் கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தா.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
ஊடகங்களில் செய்திகள் வெளியானது போன்று, பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவை இலங்கை இராணுவத் தளபதியாகவோ, ஒட்டுமொத்தப் படைகளினதும் த்ளபதியாகவோ நியமிக்கும் யோசனையை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முன்மொழியவுமில்லை, அத்தகைய பதவியைச் சரத் பொன்சேகா கேட்கவுமில்லை.



மக்களுக்கு அத்தியாவசியத் தேவைகளைத் தடையின்றி வழங்குவதை உறுதிப்படுத்துவதற்கானபொறிமுறையை நடைமுறைப்படுத்த உதவ முடியுமா என்றுதான் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, சரத்பொன்சகாவிடம் கேட்டார். அதற்கு பொன்சேகா இணங்கினார்.
முன்னறிவிப்பின்றி தொழிற்சங்கங்கள் நடத்தும் போராட்டங்களால் பொது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சரவையில் விவாதிக்கப்பட்டது. அப்போதுதான், அத்தியாவசியத் தேவைகளைத் தடையின்றி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரச தலைவர் தெரிவித்தார். போர்க்காலத்தில் கூட அத்தகைய பொறிமுறைகள் இருந்தன-என்றார். (ஐ-10)

# சிறப்புப் படையணி அமைப்பது சிறந்ததே

## வரவேற்கிறார் அமைச்சர் சொய்சா

கொழும்பு, ஏப். 29
பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவின் தலைமையின் கீழ் சிறப்புப் படையணியொன்றை அமைப்பது தொடர்பில் அமைச்சரவையில் அரச தலைவரால் முன்வைக்கப்பட்ட கருத்தை, ஒரு முக்கிய விடயமாக நான் கருதுகிறேன்.
இவ்வாறு அமைச்சர் விஜித் விஜேமுனி சொய்ஷா தெரிவித்தார்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
சிறப்புப் படையணி தொடர்பாக அரச தலைவர் எடுத்துக் கொண்ட முடிவை நகைச்சுவையாகக் கருத முடியாது. அது முக்கிய விடயம்.
நானும் அரச தலைவரின் அந்த யோசனைக்குக் கையை உயர்த்தினேன். அரச தலைவர் நகைச்சுவையாகச் சொன்னாரா? இல்லையா என்பது எனக்குத் தெரியாது. அரச தலைவரும் அதனை முக்கிய விடயமாகக் கொண்டிருப்பார் என்றே கருதுகின்றேன்.
ஒரு சிறிய குழுவுக்கு அரசின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியாது. இவர்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டும். முன்னைய கால கட்டங்களில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்கள் எவ்வாறு நடத்தப்பட்டார்கள் என்பதை நாம் மறக்கவில்லை. அந்த ஆர்ப்பாட்டங்களில் இராணுவத்தினர் பிரயோகிக்கப்பட்டனர்-என்றார். (ஐ-10)

# அக்ஷய திருதியை (தங்கத்திருநாள்) நிகழ்வுகளின் பதிவுகள்
























# அக்ஷய திருதியை (தங்கத்திரு



# நநாள்) நிகழ்வுகளின் பதிவுகள்











































Facebook
Twitter :

# அணு ஆயுத சோதனைகள் கைவிடப்படா

## வடகொரியா உடும்புப்பிடி

பியாங்யாங், ஏப். 29
ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதாரத் தடைகள் மற்றும் உலக நாடுகளின் பொருளாதாரத் தடைகள் ஆகியவற்றக்குப் பயந்து ஒருபோதும் தமது அணுவாயுதச் சோதனைகளைக் கைவிடமாட்டோம் என்று வடகொரியா அறிவித்தது.
வடகொரியாவின் மூத்த இராணுவ அதிகாரியான சோல் வான், சி.என்.என். நிறுவனத்துக்கு நேற்றுமுன்தினம் செவ்வி வழங்கினார். அதிலேயே இந்தத் தகவலை அவர் வெளிப்படுத்தினார்.
"வடகொரியாவின் அணுவாயுத சோதனைகள் ஒருபோதும் நிறுத்தப்படாது. இந்தச் சோதனைகள் எமது சுய பாதுகாப்பை மையமாகக் கொண்டவை. எனவே அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு மனோபாவம் இல்லாமல் போகிற வரைக்கும் எமது சோதனைகள் தொடர்ந்துகொண்டே இருக்கும்.
பொருளாதாரத் தடைகள் அவற்றை ஒன்றும் செய்யாது" என அவர் மேலும் தெரிவித்தார்.
இந்த விவகாரத்தில் தன்னை நடுநிலைமையாகக் காட்டிவந்த சீனா, தற்போது படிப்படியாக வடகொரியாவின் பக்கம் சாய எத்தனிக்கிறது என்று கருதப்படுகிறது.
இதற்கு தக்க சான்றாகத் தென்கொரியாவில் அமெரிக்கா, வடகொரியாவுக்கு எதிராக அமைத்துள்ள ஏவுகணைத் தடுப்புக்கு சீனா தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)
வடகொரியாவுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுக்கும் நோக்கில் கொரியத் தீபகற்பத்தில் தனது விமானம் தாங்கிப் போர்க் கப்பலையும், நீர்மூழ்கிக் கப்பலையும் அமெரிக்கா நிறுத்தியுள்ளது. அமெரிக்காவின் இந்த நகர்வுக்குப் பின்னர் வடகொரியா இரண்டு தடவைகள் இராணுவ அணிவகுப்பையும், இரண்டு தடவைகள் போர்ப் பயிற்சியையும் நடத்தியுள்ளது. இதனால் வடகொரியாவைச் சமாளிக்க அமெரிக்கா, தென் கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகள் இணைந்து விரைவில் ஆலோசிக்கவுள்ளன.





கியூபாவின் பிளேலா கிரோன் கடல்பரப்பில், ஏராளமான சிவப்புக் கால் நண்டுகள் இனப்பெருக்கம் செய்துள்ளன. பெரும்பாலான வீதிகளில் அவை உலாவித் திரிவதால் பிளேலா கிரோனுக்குச் செல்லும் சில வீதிகளில் வாகனங்கள்



## விமானத்திலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்ட மருத்துவருக்கு இழப்பீடு

### யுனைற்ரெட் வழங்கியது

வொஷிங்டன், ஏப். 29
அமெரிக்காவில் யுனைற்ரெட் எயார்லைன்ஸ் நிறுவனத்தில் இருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்ட மருத்துவருக்கு இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 17 லட்சம் ரூபா இழப்பீடு வழங்கப்பட்டது.
அமெரிக்காவில் உள்ள கென்டக்கியைச் சேர்ந்த மருத்துவர் டேவிட் தயோ (69). இவர் அமெரிக்க வாழ் வியட்நாமியர். இவர் சிக்காகோவில் இருந்து லூயிஸ் வில்லேவுக்கு யுனைற்ரெட் எயார்லைன்ஸுக்கு சொந்தமான விமானத்தில் அண்மையில் பயணிக்க முற்பட்ட வேளை இருக்கைகள் பற்றாக்குறை காரணமாக, வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டார்.
இது தொடர்பான காணொலி இணையத் தளங்களில் வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தியது. இதற்கு யுனைடெட் ஏர் லைன்ஸ் நிறுவனம் மன்னிப் கேட்டதுடன் இழப்பீட்டுத் தொகை வழங்கவும் முன்வந்தது. இதன்படியே இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 17 லட்சம் ரூபா இழப்பீடாக வழங்கப்பட்டது. இந்தச் சம்பவம் இடம்பெற்றபோது அந்த நிறுவனத்துக்கு எதிராக பன்னாட்டு ஊடகங்களும் சமூக வலைத் தளங்களும் கடும் விமர்சனங்களை முன்வைத்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ஈரானியச் சிப்பாய்கள் எண்மர் சாவு

பாகிஸ்தானில் செயற்பட்டுவரும் ஆயுதக் குழுவொன்று நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் ஈரானிச் சிப்பாய்கள் எட்டுப்பேர் உயிரிழந்தனர் என பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. எல்லைப் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த சிப்பாய்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதலிலேயே இந்த அசம்பாவிதம் ஏற்பட்டது என்று சொல்லப்படுகிறது.
"இந்தத் தாக்குதலுக்குப் பாகிஸ்தான் உரியதும் வரைவானதுமான நடவடிக்கைகளை மிகத் துரிதமாக எடுக்க வேண்டும். மட்டுமல்லாமல் இந்த அம்பாவிதத்துக்கான பொறுப்பையும் அவர்கள் ஏற்க வேண்டும்" என்று ஈரான் அரசு தெரிவித்தது. தாக்குதலை அடுத்து எல்லையில் தேடுதல் பணியை ஈரான் துரிதப்படுத்தியுள்ளது என்று அந்த நாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)

## மிகப்பெ வடகொா

### சீனா மீது தி

வொஷிங்டன், ஏப். 29
வடகொரியாவுடன் மிகப்பெரிய அளவில் மோதல் ஏற்படுவதற்கு வாய்ப்பு அதிகளவில் உள்ளது என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்தார்.
ஓவல் அலுவலகத்தில் நேற்று முன்தினம் ரொயிட்டர்ஸ் ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
"வடகொரியா உலகுக்குப் பெரும் சவாலாக இருக்கிறது. அணுஆயுத ஏவுகணைச் சோதனைகளைத் தொடர்ந்து நடத்திவரும் வடகொரியாவுக்கும், அமெரிக்கா

## வின்சன் போர்க் கப்பலில் இருந்து அமெரிக்கா திடீர்ப் போர்ப் பயிற்சி

வொஷிங்டன், ஏப். 29
கொரியத் தீபகற்பத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அமெரிக்க விமானம் தாங்கிப் போர்க் கப்பலில் உள்ள விமானங்கள் மற்றும் உலங்கு வானூர்திகள் நேற்றுமுன்தினம் போர்ப் பயிற்சியில் ஈடுபட்டன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
வடகொரியாவின் அணுவாயுதத் திட்டம் அமெரிக்காவுக்கு எதிரானது என்று அந்த நாடு தெரிவித்ததைத் தொடர்ந்து தனது பாதுகாப்புக் கருதியும், கொரியத் தீபகற்பத்தில் உள்ள தனது நட்பு நாடுகளான தென் கொரியா மற்றும் ஜப்பான் ஆகியவற்றின் பாதுகாப்புக் கருதியும் தீபகற்பத்தில் வின்சன் என்ற விமானம் தாங்கிப் போர்க் கப்பலையும், யு.எஸ்.எஸ். மிசிகன் என்ற ஏவுகணை நீர்மூழ்கிக் கப்பலையும் நிறுத்தியுள்ளது அமெரிக்கா.
அமெரிக்காவின் இந்த நகர்வுக்கு வடகொரியா தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்தது. இருமுனை போர்ப் பயிற்சிகளையும் இராணுவ அணிவகுப்புக்களையும் நடத்தியது. இதனால் கொரியத் தீபகற்பத்தில் பதற்றம் இரட்டிப்பாகியுள்ள நிலையில் அமெரிக்கா இந்தத் திடீர் போர்ப் பயிற்சியையும் நடத்தியது. (ம)



## 15 ஆயிரம் கோடியில் 560 மசூதிகள் பங்களாதேஷில் அமைக்கிறது சவூதி


டாக்கா, ஏப். 29
இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 15 ஆயிரம் கோடி செலவில் பங்களாதேஷில் 560 மசூதிகளை சவூதி அமைக்கவுள்ளது என்று பங்களாதேஷ் அரசு தெரிவித்தது.
பங்களாதேஷ் அதிபர் சேக் ஹசீனா, கடந்த வருடம் சவூதிக்கு சுற்றுப் பயணம் செய்தார். சவூதி அரேபிய மன்னரைச் சந்தித்த அவர், பங்களாதேஷில் மசூதிகள் அமைக்க சவூதி உதவ வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார். இது மன்னரால் ஏற்கப்பட்டதைத் தொடர்ந்து பங்களாதேஷின் ஒவ்வொரு நகரிலும் சவூதியால் மசூதிகள் அமைக்கப்படவுள்ளன. 560 மசூதிகள் கிட்டத்தட்ட 15 ஆயிரம் கோடி ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.
பங்களாதேஷின் அபிவிருத்தித் திட்ட அமைச்சர் முஸ்தபா கமால், நேற்றுமுன்தினம் இந்தத் தகவலைத் தெரிவித்தார். (ம)



உட்பிரவேசிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
சுற்றுலாப் பயணிகளை கவரக்கூடிய இடமாகவும் அந்தப் பகுதி மாறியுள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

# தமிழகத்துக்கு புதிய ஆளுநர்

சென்னை, ஏப். 29
தமிழகத்தின் ஆளுநராக இருந்த ரோசையாவின் பதவிக்காலம் கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் முடிவடைந்தது. இதனால் அடுத்த மாதம் தமிழகத்துக்குப் புதிய ஆளுநர் நியமிக்க இந்தியப் பிரதமர் மோடி திட்டமிட்டுள்ளார் என்று இந்திய ஊடகங்கள் சில குறிப்பிட்டன.
ரோசையாவின் ஓய்வை அடுத்து மராட்டிய ஆளுநரான வித்யாசாகர் ராவ் தமிழகத்துக்குப் பொறுப்பு ஆளுநராகச் செயற்பட்டு வருகிறார். இந்த நிலையில் எதிர்வரும் 12 ஆம் திகதி மோடி தமிழகத்தின் ஆளுநரை அறிவிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)





# சிரியத் தலைநகரில் இஸ்ரேல் தாக்குதல்

## மற்றுமொரு அத்துமீறல்

டமஸ்கஸ், ஏப். 29
சிரியத் தலைநகர் டமஸ்கஸில் இஸ்ரேல் நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தியது என்று பிரிட்டனை தலைமையகமாகக் கொண்ட கண்காணிப்புக் குழு தெரிவித்தது.
டமஸ்கஸுக்கு அருகில் உள்ள இராணுவ நிலைமீதே இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் ஆயுதக் கிடங்கும், எண்ணெய் தாங்கிகளும் தீக்கிரையாகின என்று சிரிய அரச ஊடகமான சனா செய்தி வெளியிட்டது. ஆனால் இந்தத் தகவலை இஸ்ரேல் மறுத்துள்ளது.
தாம் தாக்குதல் நடத்தியது உண்மை தான். ஆனால் சிரிய இராணுவத்துக்கு எதிராகத் தாக்குதல் நடத்தவில்லை. தடைசெய்யப்பட்ட ஹிஸ்புல்லா தீவிரவாத அமைப்புக்காக நடைபெறவிருந்த ஆயுதக் கடத்தலை முறியடிக்கவே தாக்குதல் நடத்தினோம் என்று இஸ்ரேலின் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ம)


# ரிய மோதலுக்கு இடமுண்டு; ரியா குறித்து ட்ரம்ப் கருத்து

## உர் பாசம்



வுக்கும் இடையே மிகப் பெரிய மோதல் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனினும் அமெரிக்கா இந்த விவகாரத்தைப் பேச்சு வார்த்தை மூலமே தீர்க்க விரும்புகிறது. ஆனால் அது கடினமானது என்று நினைக்கிறேன். வடகொரியா விவகாரத்தில் அமைதி ஏற்பட சீன அதிபர் ஜி ஜின் பிங் பெரும் முயற்சி செய்தார் என்று நம்புகிறேன். இரு நாடுகளுக்கிடையே சண்டையினால் உயிரிழப்புக்கள் ஏற்பட விரும்பவில்லை. அவர் நல்ல மனிதர். நான் சீனாவையும், சீன மக்களையும் நேசிக்கிறேன்" என ட்ரம்ப் மேலும் தெரிவித்தார் (ம)





# டி.டி.வி. தினகரன் வழக்கில் மேலும் ஒருவர் கைதானார்

சென்னை, ஏப். 29
இந்தியத் தேர்தல் ஆணையத்தக்கு 50 கோடி ருபா லஞ்சம் கொடுக்க முயன்றார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள அ.தி.மு. கழகத்தின் முன்னாள் துணைப் பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரனுக்கு நெருக்கமானவர் என்று கருதப்படும் மேலும் ஒருவர் டெல்லியில் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.
தினகரன், முடக்கப்பட்டுள்ள இரட்டை இலை சின்னத்தைப் பெறுவதற்காகத் தேர்தல் ஆணைய அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுக்க முயன்றார். இதற்காக இடைத்தரகர் சுகேஷ் சந்திரசேகர் என்பவருடன் 50 கோடி ரூபா (இந்திய மதிப்பில்) பேரம் பேசினார் என்று தெரிவிக்கப்படுகிறது. இதுபற்றி தகவல் அறிந்த டெல்லி பொலிஸார் தீவிர விசாரணை நடத்தினர். டெல்லியில் ஒரு விடுதியில் தங்கியிருந்த சுகேஷ் சந்திரசேகரை கடந்த 16 ஆம் திகதி இரவு கைது செய்தனர். அவருக்கு முன்பணமாக ரூ.10 கோடி கொடுக்கப்பட்டது தெரியவந்தது.
தினகரன் மீதான குச்சற்றச்சாட்டையும் பொலிஸார் உறுதி செய்து அவரையும் அண்மையில் கைது செய்தனர். இந்த வழக்கில் ஏற்கனவே கோபி, பைசல் சஹா என இரண்டு இடைத்தரகர்கள் பெயர்கள் அடிபட்டு வரும் நிலையில் மூன்றாவதாக நரேஷ் என்ற தரகளின் நேற்றுக் கைது செய்யப்பட்டார். (ம)

> “ இந்த வழக்கில் ஏற்கெனவே கோபி, பைசல் சஹா என இரண்டு இடைத்தரகர்களின் பெயர்கள் அடிபட்டுவரும் நிலையில் மூன்றாவதாக நரேஷ் என்ற தரகர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# அமைச்சர் ராஜிதவின் வரவேற்கத்தக்க கருத்துகள்

ஈழத்தமிழினத்தந்தை செல்வாவின் (எஸ்.ஜே.வி.செல்வநாயகம்) நினைவுதின கொழும்பு நிகழ்வில் அமைச்சர் ராஜித சேனாரத்ன ஆற்றிய உரை மிக முக்கியமானது; வரவேற்கத்தக்கது. துணிச்சல் மிக்கதும்கூட. தந்தை செல்வா கூறியதைப் போன்று கூட்டாட்சித் தத்துவம்தான் இந்த நாட்டுக்குப் பொருத்தமானது என்று அவர் ஆணித்தரமாகத் தெரிவித்திருக்கிறார்.

அதேநேரத்தில், சிங்களப் பெரும்பான்மையின அரசியலையும், அதன் அபத்தங்களையும்கூட புட்டுப்புட்டு வைத்துள்ளார் அமைச்சர் ராஜித. கூட்டாட்சியைச் சிங்களவர்கள் நிராகரித்ததன் காரணத்தாலேயே வேறு வழியின்றித் தமிழர்கள் தனிநாடு கேட்கப் போனார்கள் என்பதையும் அவர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

இலங்கையின் முதன்மைக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும்சிறிலங்காசுதந்திரக்கட்சியுமே இந்தநிலமைக்கும், இனப் பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படாமல் இழுத்தடிக்கப்படுவதற்கும் காரணம் என்பதையும்கூட அவர் வெளிப்படையாகவே ஒத்துக்கொண்டுள்ளார். இத்தகைய அரசியலைஅவர் “கீழ்த்தரமானது” என்றுகாட்டமாகவிமர்சித்தார்.

இந்த இருகட்சிகள் மட்டுமல்ல இலங்கையின் இடதுசாரிக் கட்சிகள்கூட தமிழர்கள் விடயத்தில் ஆதரவாக நடப்பது போன்று காட்டிக் கொண்டாலும், பின்னர் வந்த நாள்களில் தமிழர்களுக்கு எதிராகச் சிங்கள இனவாதத்தைத்தா கக்கின என்ற உண்மையையும் போட்டுடைத்தார்.

அவர்இவற்றையெல்லாம்சொல்லும்போது கேட்டுக்கொண்டிருக்கும் எவருக்குமே இயல்பாக எழும் கேள்வி, இவர் மட்டும் உத்தமரா என்ன? இவரும் இதே கட்சிகளில்தானே இருக்கிறார், அவற்றின் கீழ்த்தரமான செயல்கள் எல்லாவற்றிலும் இவருக்கும் பங்கிருக்கிறதுதானே என்பதுதான். தேர்ந்த அரசியல்வாதி என்பதனால் பார்வையாளர்களின் இந்தக் கேள்வியை முன்கூட்டியே ஊகித்துக்கொண்டு அதற்கும்பதிலளித்துள்ளார்ராஜித. “இதற்குநான்பொறுப்பில்லை என்று சொல்லிவிட முடியாது. நானும் பொறுப்பாளிதான். ஆனாலும்அப்போதுநான்மாணவன்” என்றுகூறியிருக்கிறார்.

தமிழர்களுக்காகப்பேசினால்அல்லதுதமிழர்களின்உரிமைகளைவழங்கிவிட்டால்சிங்களமக்களிடம்செல்வாக்கிழந்து வாக்குகளையும்இழந்துவிட நேரும்என்றஅச்சம் பொய்யானது என்பதைத்தனது தேர்தல் வாக்குகளின் எண்ணிகைகள் படிப்படியாக அதிகரித்த புள்ளிவிவரங்களுடன் சொல்லியிருக்கிறார்.

தமிழ்மக்கள்கூட்டாட்சிகோருவதுஎன்பதுபிரிவினைஎன்று சிங்களமக்களுக்குத்தவறாகஎடுத்துச்சொல்லப்பட்டுள்ளது, அதனால் அவர்கள் அஞ்சுகிறார்கள், அது அப்படியல்ல என்பதை அவர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.


அமைச்சர் ராஜிதவின் பேச்சு உண்மையைத் துல்லியமாக எடுத்துக்காட்டுகிறது. கிட்டத்தட்ட சிங்களமனச்சாட்சியின் குரலாக அது ஒலிக்கின்றது. இந்தக் கருத்துக்கள் சிங்களத் தலைவர்களிடமும்சிங்களமக்களிடமும்எடுத்துச்செல்லப்படவேண்டும். அவர்களுக்கும்இந்தஉண்மைபுரியவைக்கப்படவேண்டும். அவரது இந்தக்கருத்துக்கள்ஏனையசிங்களத் தலைவர்களையும்மாற்றிப்புரிந்துணர்வுள்ளவர்களாக்கினால் இந்த நாட்டின் பிரச்சினையைத் தீர்ப்பது வெகு சுலபம்.

எல்லாஅரசியல்வாதிகளும்கடந்தகாலத்தவறுகளில்இருந்து பாடங்களைக்கற்றுக்கொண்டால்பிரச்சினையைத்தீர்ப்பது ஒன்றும்சிக்கலானது அல்ல. அதற்குராஜிதஉணர்ந்திருக்கும் உண்மைஏனையவர்களுக்கும்பரப்பப்படவேண்டும். அவர்களின் மனங்களில் மாற்றம் ஏற்படுத்தப்படவேண்டும்.

அந்த மாற்றத்துக்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் உழைக்க வேண்டும் என்று ராஜித வலியுறுத்தியிருக்கிறார். கூட்டமைப்பு மட்டமல்ல, ராஜிதவும் அதற்காகப் பாடுபட வேண்டும்.

போர்க் குற்றங்கள் நடந்தால்தானே அதற்கு விசாரணை தேவைஎன்றுயாழ்ப்பாணத்தில்சொல்லிவிட்டு, அதுபற்றிக் கொழும்பில் கேட்டபோது அப்படி நான் கூறவேயில்லை என்று தெரிவித்ததைப் போன்று இல்லாமல், அமைச்சர் ராஜித இந்த விடயத்தில் உண்மையைச் சிங்களவர்களுக்கு உணர்த்தப்படவேண்டும்.

# ஈடாட்டம் கண்ட அ.தி.மு.க. தேறியெழ வாய்ப்புண்டா?



நியூசிலாந்து சிற்சபேசன்

கடந்த பத்து மாதங்களாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ச்சியாகச் சிக்கல்களைச் சந்தித்து வருகின்றது. 2016ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் திகதிநடைபெற்ற தமிழகச் சட்டமன்றத் தேர்தலில் மொத்தமுள்ள 234 தொகுதிகளில் 150 தொகுதிகளில் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் வெற்றிபெற்று ஆட்சி அமைத்தது. அதிலிருந்து ஒன்றன்பின் ஒன்றான குழப்பங்களையும், அதிரடியான மாற்றங்களையுமே அந்தக் கட்சி எதிர்கொள்கின்றது. முதலமைச்சராக ஜெயலலிதா பதவியேற்ற வேளையில் காவிரி நீர்ப் பிரச்சினை விஸ்வரூப மெடுத்தது. அதிலிருந்து விடுபட முயற்சிகளை மேற்கொண்டிருந்த வேளையிலேயே செப்டம்பர் 22ஆம் திகதியன்று ஜெயலலிதா உடல்நலக் குறைவால் சென்னை அப்போலோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

### ஜெயலலிதாவின் சாவின் மர்மமுடிச்சு அவிழுமா?

அதன் பின்னர் முதலமைச்சர் ஜெயலலிதாவுடனான வெளியுலகத் தொடர்பு முற்றுமுழுதாகத் துண்டிக்கப்பட்டது. மருத்துவர்களைத் தவிர்த்து ஜெயலலிதாவின் உள்வட்டத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே ஜெயலலிதாவை நேரடியாகப் பார்க்க அனுமதிக்கப்பட்டனர். மூத்த அமைச்சர்கள்கூட அனுமதிக்கப்படவில்லை. ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் உடல்நலம் குன்றிச்செயற்பட முடியாதநிலையில் மாற்று ஏற்பாடுகளைச் செய்யவேண்டிய பொறுப்பை ஒரு மாநிலத்தின் ஆளுநருக்கே இந்திய அரசமைப்பு வழங்கியுள்ளது. அந்த வகையில் முதலமைச்சர் ஜெயலலிதாவின் உடல்நிலையை நேரடியாக அறிந்து கொள்வதற்கான வாய்ப்பும் தமிழக ஆளுநர் வித்யாசாகர்ராவுக்கு மறுக்கப்பட்டது.

ஜெயலலிதா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தபோது அரசின் முடிவுகளை யார் எடுத்தார்கள் என்பது மர்மமான ஒன்றாகும். ஒரு மருத்துவமனை என்பதையும் கடந்து அப்போலோ தலைமைச் செயலகமாகவும் மாறியிருந்தது. ஒரு தனியார் இடத்தில் அரசின் செயற்பாடுகள் எவ்வாறு முன்னெடுக்கப்படலாம் என்பது கேள்வியாகியது. அப்படியில்லாத பட்சத்தில், மூன்று மாதங்களுக்கு மேலாக தமிழக அரசு முற்றிலுமாக முடங்கியிருந்ததா என்னும் கேள்வியும் எழுந்தது. ஜெயலலிதா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் எந்தவொரு அமைச்சரோ, அதிகாரியோ செய்தியாளர்களைச் சந்திக்கவில்லை. மருத்துவமனையில்சிகிச்சை பெறுகின்ற முதலமைச்சர் ஜெயலலிதாவின் உடல்நிலை குறித்த தகவல்களை வெளியிட வேண்டும், தற்காலிக முதலமைச்சரை நியமிக்க வேண்டும் என்னும் கோரிக்கைகளுடன் தொடரப்பட்ட பொது நலவழக்கை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. 2016ஆம் ஆண்டு ஒக்ரோபர் 11இல் ஓ.பன்னீர்செல்வத்திடம் ஜெயலலிதாவின் அமைச்சுப் பொறுப்பு மட்டும் ஒப்படைக்கப்பட்டது.

> “ஜெயலலிதா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தபோது அரசின் முடிவுகளை யார் எடுத்தார்கள் என்பது மர்மமான ஒன்றாகும்.
> ஒரு மருத்துவமனை என்பதையும் கடந்து அப்போலோ தலைமைச் செயலகமாகவும் மாறியிருந்தது. ஒரு தனியார் இடத்தில்அரசின்வேலைகள் எவ்வாறு முன்னெடுக்கப்படலாம் என்பது கேள்வியாகியது. அப்படியில்லாத பட்சத்தில் மூன்று மாதங்களுக்கு மேலாக தமிழக அரசு முற்றிலுமாக முடங் கியிருந்ததா என்னும் கேள்வியும் எழுந்தது.

### தமிழகத்தில் கொடிகட்டிப் பறந்த அ.தி.மு.க.

தமிழகத்தின் மிகப்பெரிய அரசியல் கட்சியாகவே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் காணப்பட்டது. சுமார் ஒன்றரைக் கோடி உறுப்பினர்களையும், 41 சதவீத வாக்கு வங்கியையும் அது கொண்டிருந்தது. நாடாளுமன்றத்தில் மொத்தமாக 47 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்கின்றது. அத்தகைய வலுவானதொரு அரசியல்கட்சியின் தலைமைப் பொறுப்பிலுள்ள ஜெயலலிதாவின் உடல்நலக் குறைவு அரசியல் பரப்பில் பதற்றத்தை ஏற்படுத்தியது. மாநில மத்திய அரசுகளிடையான அரசியல் சமன்பாடுகளை மாற்றியமைத்தது. தமிழகத்தில் ஏற்பட்டிருந்த அரசியல்வெற்றிடத்தை புதுடெல்லி பயன்படுத்திக் கொண்டது. காவிரி மேலாண்மைவாரியத்தை அமைக்க முடியாது என்னும் பக்கச்சார்பான முடிவை மோடி அரசு அறிவித்தது. 2016ஆம் ஆண்டு ஒக்ரோபர் 17ஆம் மற்றும்19ஆம் திகதிகளில் நடைபெற்றிருக்க வேண்டிய உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது.

பிரதமர் மோடியின் செல்லாத ரூபாய் நோட்டு அறிவிப்பால் நாடு முழுவதும் ஏற்பட்ட கொந்தளிப்பில் தமிழகமும் தத்தளித்தது. செல்லாத ரூபாய் நோட்டு விவகாரம் நீடித்த நிலையில், 75 நாள்கள் அப்போலோவில்






அனுமதிக்கப்பட்டிருந்த ஜெயலலிதா சாவடைந்து விட்டதான அறிவிப்பு 2016 டிசெம்பர் 5ஆம் திகதி வெளியாகியது. ஜெயலலிதாவின் மறைவைத்தொடர்ந்து ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் புதிய அமைச்சரவை டிசெம்பர்6ஆம்திகதிசெவ்வாய்க் கிழமை அதிகாலை ஒரு மணிக்கு பதவி ஏற்றது. ஜெயலலிதா அமைச்சரவையில் பதவி வகித்த அமைச்சர்கள் அனைவருமே அதே இலாகாப் பொறுப்புக்களுடன் பதவியேற்றுக் கொண்டனர். ஜெயலலிதா மறைந்துஇரண்டுநாள்கள் கழித்து மூத்த பத்திரிகையாளரானசோ.ராமசாமி உயிரிழந்தார். ஜெயலலிதாவின் நம்பிக்கைக்குரிய ஆலோசகரான சோ. ராமசாமியின் மறைவு, ஜெயலலிதாவின் மரணம் தொடர்பான சந்தேகங்களை வலுப்படுத்தின. 2016 டிசெம்பர் 12இல் வர்தா புயல் சென்னையையும், கரையோர மாவட்டங்களையும் தாக்கியது. டிசெம்பர் 15 இல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கலைஞர் கருணாநிதி உடல் நலக்குறைவு காரணமாக தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். டிசெம்பர் 29இல் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழுவில் புதிய பொதுச் செயலாளராக வி.கே.சசிகலா தெரிவு செய்யப்பட்டார். ஜனவரி 8ஆம் திகதி ஆரம்பமாகிய ஜல்லிக் கட்டுப் போராட்டம்மூன்று வாரங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றன.

**சசிகலாவின் அரசியல் பிரவேச ஆசையே சிக்கல்க்ள் உருவாகக் காரணம்**

2017 பெப்ரவரி 5இல் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்ட மன்றத் தலைவராக வி.கே. சசிகலா தெரிவு செய்யப்பட்டார். பெப்ரவரி 6இல் முதலமைச்சர்ஓ.பன்னீர்செல்வம் பதவியில் இருந்து விலகினார். அதற்கு மறுநாள் இரவு மெரினா கடற்கரையிலுள்ள ஜெயலலிதா சமாதியில் அமர்ந்து சுமார் 40 நிமிடம் தியானம் செய்த பின்னர் ஓ. பன்னீர்செல்வம் செய்தியாளர்களைச் சந்தித்தார். வி.கே.சசிகலா தரப்பினரின் நிர்ப்பந்தத்தி னாலேயேதான் பதவியைத் துறந்ததாக அவர் அறிவித்து அதிர்ச்சியை ஏற்படுத்தினார். அதனைத் தொடர்ந்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொருளாளர் பொறுப்பிலிருந்து ஓ.பன்னீர் செல்வம் விலக்கப்பட்டார்.







அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சசிகலா அணி, பன்னீர் அணி என இரண்டாகப் பிளவுபட்டது.

கட்சியின் கீழ்மட்ட நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பன்னீர்செல்வம் அணியில் ஒன்றிணைந்திருந்தனர். கட்சியில் மொத்தமுள்ள 135 சட்டமன்ற உறுப்பினர்களில் 122 உறுப்பினர்களும், மொத்தமுள்ள 47 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 33 உறுப்பினர்களும், மாவட்டச் செயலாளர்களும் சசிகலா அணியில் செயற்பட்டனர். அதனால் சசிகலா அணி வலுவானதாகியது. சட்டமன்றத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட வி.கே.சசிகலாவை அரசமைக்குமாறு ஆளுநர் அழைக்காமையில் அரசியல் சூட்சுமங்கள் நிலவின. 2017 பெப்ரவரி 14ல் சொத்துக் குவிப்பு வழக்கில் வெளியாகிய உச்சநீதிமன்றத் தீர்ப்பினால் வி.கே.சசிகலா முதலமைச்சராக முடியாது என்னும் நிலை ஏற்பட்டது. வி.கே.சசிகலா தரப்பிலிருந்து எடப்பாடி பழனிச் சாமி முதலமைச்சரானார். டி.டி.வி.தினகரன் துணைப் பொதுச் செயலாளரானார். வி.கே.சசிகலாதரப்பிற்கு ஆதரவான தொழிலதிபர் சேகர் ரெட்டி, முன்னாள் தலைமைச் செயலாளர் ராம்மோகனராவ் உள்ளிட்டோர் வருமான வரித்துறையினரது சோதனையில் சிக்கியதால் ஒருபுறம் பரபரப்பு ஏற்படுத்தினர்.

> ஜெயலலிதாவின் மறைவைத் தொடர்ந்து கட்சி பிளவுபட்டதே இத்தனை பிரச்சினைகளுக்கும் காரணம் என்பதை இரு அணியிலுள்ளவர்களும்வெளிப்படையாகவேபேசஆரம்பித்தனர். இரண்டு அணிகளும் இணைந்தாலே கட்சியையும், ஆட்சியையும் காப்பாற்ற முடியுமென இருதரப்பு நிர்வாகிகளும் பகிரங்கமாகவேபேசிக்கொள்ள ஆரம்பித்தனர்.

2017 பெப்ரவரி 15ல் நெடுவாசலில் ஆரம்பமாகிய எரிவாயு திட்டத்துக்கு எதிரான போராட்டம் மூன்று வாரங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றது.

தமிழகத்தின் காவிரி டெல்டா மாவட்டங்களில் தண்ணீரின்றி பயிர்கள் வாடின. நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர். தமிழக விவசாயிகளின் போராட்டம் டெல்லியிலும் ஆரம்பமாகியது.

ஜெயலிதாவின் ஆர்.கே. நகர்த் தொகுதிக்கு இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் இரட்டை இலைச் சின்னத்தைத் தங்களுக்கு ஒதுக்க வேண்டுமென சசிகலா மற்றும் பன்னீர்செல்வம் அணியினர் போராடத் தொடங்கினர்.


அதனால் கட்சியின் சின்னமும், பெயரும் முடக்கப்பட்டன. இரண்டு அணியினரும் தனித்தனியே இடைத் தேர்தலில் போட்டியிடும் நிலை ஏற்பட்டது. அதனால் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களே மோதிக்கொள்ளும் சூழல் ஏற்பட்டது. வாக்காளர்களுக்குப் பணம் வழங்கிய குற்றச் சாட்டு பரபரப்பை ஏற்படுத்தியது.

தமிழக சுகாதார அமைச்சர் விஜயபாஸ்கர் வீட்டில் நடைபெற்ற வருமானவரித்துறை சோதனையின்போது ஆர். கே.நகர் தொகுதி வாக்காளர்களுக்கு டி.டி.வி தினகரனின் வெற்றிக்காக 89 கோடி ரூபாய் வழங்கியதற்கான ஆவணங்கள் கிடைத்தன. அதனால் இடைதேர்தல் கைவிடப்பட்டது.

ஜெயலிதாவின் மறைவைத் தொடர்ந்து கட்சி பிளவுபட்டதே இத்தனை பிரச்சினைகளுக்கும் காரணம் என இரண்டு அணியிலுள்ளவர்களும் வெளிப்படையாகவே பேச ஆரம்பித்தனர். இரண்டு அணிகளும் இணைந்தாலே கட்சியையும், ஆட்சியையும் காப்பாற்ற முடியுமென இருதரப்பு நிர்வாகிகளும் பகிரங்கமாகவே பேசிக் கொள்ள ஆரம்பித்தனர்.

ஜெயலலிதாவின் உயிர்த் தோழி வி.கே.சசிகலா குடும்பத்தினரை அகற்றினால் மட்டுமே இரண்டு அணிகளும் இணைந்து கொள்ளலாம். அதற்கான சாத்தியக் கூறுகளைத் தெளிவாகக் காணமுடியவில்லை.

குழம்பிய குட்டையில் தேசியக் கட்சிகளும் விளையாடுகின்றன. அந்த வகையில் 1972இல் எம்.ஜி.ஆரால் ஆரம்பிக்கப்பட்ட அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் எதிர்காலம் இன்று கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது.



# வாசகர் திருமுகம்

## இயற்கையை நேசித்து வாழ்ந்தால் சொர்க்கம் மனிதர்களின் காலடியில்


இம்முறை பருவ மழையும் பொய்த்து கடுமையான வறட்சியும் நிலவுவதால் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் என்றுமில்லாதவாறு உயர்ந்து சாதாரண மக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த பெரும்போகத்தின்போது மிகக் குறைந்த மழைவீழ்ச்சி பதிவாகியிருந்தது. இதனால் நெல் உட்பட இதர தானிய வகைகள் எதிர்பார்த்த விளைச்சலைத் தரவில்லை. இதன் காரணமாக இவற்றின் விலைகள் உயர்வடைந்து காணப்படுகின்றன. குறிப்பாக மக்கள் தினமும் பயன்படுத்துகின்ற அரிசியின் விலை உச்சத்தில் ஏறி நிற்கின்றது. அரசு குறைந்த விலையில் அரிசியைத் தாராளமாக விநியோகம் செய்வதாகத் தெரிவித்து வருகின்ற போதிலும் அது நடைமுறையில் சாத்தியமாகவில்லை. இதனால் அதிக விலை கொடுத்து அரிசியைக் கொள்வனவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த நாள்களில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு கடுமையான கோடை வெப்பம் மக்களை வாட்டி வருகின்றது. பல பிரதேசங்களில் குடிதண்ணீருக்கு மக்கள் அலைந்து திரிகின்றனர். கால்நடைகளும், காட்டு விலங்குகளும் தண்ணீரைத் தேடி அலைந்து திரிகின்றன. குடாநாடும் இதிலிருந்து தப்பவில்லை. மழை காலங்களில் அணைகளை அமைத்தும் குளங்களைச் சீரமைத்தும் வெள்ள நீரைத் தேக்கி வைத்திருந்ததால் நிலத்தடி நீரை ஓர் அளவுக்காவது பாதுகாத்து வைத்திருக்க முடியும். இதைவிட வீடுகள்தோறும் மழைநீரைச் சேகரித்து வைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கும் நாம் தவறிவிட்டோம். இன்று தலைமீது கையை வைத்துக் கொண்டு இயற்கையைச் சபித்து வருகின்றோம். இயற்கை ஒருபோதுமே எம்மை வஞ்சிப்பதில்லை. ஆனால் மனிதர்கள் இயற்கையைச் சீண்டிப் பார்க்கின்றனர். இதன் விளைவாகவே மழைவீழ்ச்சி குறைந்து வெப்பமான காலநிலையும் நிலவுகின்றது. மரங்களை வட்ட வேண்டாம் எனக் கூறுவதை நாம் காதில் கேட்டுக் கொள்வதில்லை. எமது மனம் போனவாறு மரங்களை வெட்டி வீழ்த்துகின்றோம். இயற்கையை அழிக்கின்றோம். இதனால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளை ஏற்பதற்கும் நாம் தயாராக இருக்க வேண்டும்.


தா.மகேந்திரன், நீர்வேலி.



# வடிவங்கள்




## வடிவங்களுக்கு ஏற்ற நிறத்தைத் தீட்டுவோம்





# நாளை எனது பிறந்ததினம்

- நாளை ஞாயிற்றுக்கிழமை எனது பிறந்ததினம்.
- நான் 2007ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி பிறந்தேன்.
- தற்போது எனக்குப் பத்து வயதாகிவிட்டது.
- வருடந்தோறும் எனது பிறந்தநாளைக் கொண்டாடி வருகிறேன்.
- எனது பெற்றோர் எனது பிறந்தநாள் கொண்டாட்டத்தை ஒழுங்கு செய்வார்கள்.
- அவர்களது அழைப்பின் பேரில் உறவினர்களும் நண்பர்களும் வருவார்கள்.
- நாளை நிகழும் எனது பிறந்தநாள் வைபவத்தில் என்னுடன் படிக்கும் சகல மாணவர்களும் கலந்துகொள்ள உள்ளனர்.
- அவர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளேன்.
- எனது வகுப்பாசிரியரையும் தவறாது வரும்படி அழைத்துள்ளேன்.
- நாளை நிகழும் எனது பிறந்தநாள் வைபவத்தில் தேநீர் விருந்துடன் சிறுவர்களுக்கான திரைப்படக்காட்சி ஒன்றும் இடம்பெற இருக்கிறது.
- எனது பிறந்த தினத்தை விமரிசையாகக் கொண்டாட இருப்பது குறித்து நான் பெரிதும் மகிழ்கிறேன்.



# நமது உணவில் காய் கனிகள்

★ உண்ணும் உணவில் பல்வேறு வகையான வேர்கள், தண்டுகள், இலைகள், பூக்கள், கனிகள், விதைகள் என்பனவற்றைச் சேர்த்து உண்டு வருகிறோம்.

★ பீற்றூட், கரட், முள்ளங்கி என்பன தாவரத்தின் வேர்ப் பகுதிகள். ஆனால் உருளைக் கிழங்கு, சேனைக் கிழக்கு, கருணைக்கிழக்கு, இராசவள்ளிக்கிழங்கு என்பன நிலத்தினடியில் விளைந்தாலும் அவை வேர் பகுதிகளல்ல. அவை தாவரங்களின் தண்டுகள் ஆகும்.

★ கீரை, கோவா, கறிவேப்பிலை என்பன இலைகளாகும். கோலி பிளவர் தாவரத்தின் பூ ஆகும். புடலங்காய், மாங்காய், தக்காளி என்பன காய் கனிகளாகும். வெங்காயம் அவரை, பூண்டு, மல்லி என்பன விதைகளாகும்.

★ உடல் நலத்துக்கும் வளர்ச்சிக்கும் காய்கறிகள் இன்றியமையாதவை. மலச்சிக்கல் இல்லாதிருக்க காய்கறி உண்ண வேண்டும். விற்றமின் A, C இரும்பு கல்சியம் முதலான சத்துக்களும் மாச்சத்துக்கள், புரதம், கொழுப்பு முதலான ஊட்டச் சத்துக்களும் காய் கனிகளிலுள்ளன.


# விடுகதைகள்

1. கண்ணெதிரே பறக்கிறான். பார்க்கலாம். பிடிக்கவோ முடியவில்லை. அவன் யார்?
2. புன்னகையால் மணம் பரப்பும் வெள்ளைக் காரி. பூத்திருப்பாள் ஒரு பொழுது வெள்ளைக் காரி. அவள் யார்?
3. காலை வேளை கூரை மேலே அலாரம் அடிக்கும். அது என்ன?
4. மொட்டை மாடு கட்டிக் கிடக்குது. மூக்கணாங் கயிறு மேயுது. அது என்ன?
5. பறக்கும் அது பறவை போல, பாலூட்டும் குட்டிக்கு, உறங்கும் மரக்கிளையில், உலவும் அது இருட்டில். அது என்ன?
6. தேர் ஒன்று உயர்ந்து நிற்கிறது. தெருவில் எங்கும் ஓடாது. படைத்த தச்சர் பலராங்கே பதுங்கியிருப்பார். கண்டிருப்பீர். அது என்ன?
7. தட்டினால் உடையும். உள்ளே தாகம் தீர்க்கும் நீருண்டு. வெட்டினால் பூவுண்டு நெய்யுண்டு அது என்ன?
8. தண்ணீரின் மேல் மிதக்கும் முட்டை. தட்டில் உடைத்தால் ஓடோ குஞ்சோ இல்லை. அது என்ன?
9. பூட்டுச் சாவி இல்லாப் பெட்டி. அடுப்பு மூட்ட அழகுப் பெட்டி. அது என்ன?
10. ஒரு குடத்துள் இரண்டு எண்ணெய்கள் அது என்ன?

## விடைகள்

1. புகை
2. மல்லிகைப் பூ
3. சேவல்
4. பூசனிக்காய்
5. வௌவால்
6. கறையான் புற்று
7. தேங்காய்
8. நீர்க்குமிழி
9. தீப் பெட்டி
10. முட்டை





# புகழ்பெற்ற ஓவியம்

ஓவியங்கள் கண்களுக்கு விருந்தளிப்பவை; சிந்திக்கும் ஆற்றலைத் தூண்டுபவை. குறிப்பால் விடயத்தை உணர்த்தும் தன்மை கொண்டவை; மனதுக்கு அமைதியைத் தருபவை. உலகில் ஓவியர்களால் வரையப்பட்ட பல சிறந்த ஓவியங்கள் உள்ளன. அவற்றுள் "மோனா லிசா" ஓவியம் முதன்மையானது. உலகப் புகழ் பெற்றது. உலகில் வேறு எந்த உருவப் படத்திலும் இல்லாத அழகு இந்த ஓவியத்தில் பிரகாசிக்கின்றது. இந்த ஓவியத்தில் வண்ணாங்களைக் கையாண்டிருக்கும் விதம் அற்புதமானது. தூரிகையைப் பயன்படுத்தித்தான் இந்த ஓவியம் வரையப்பட்டுள்ளதா என ஆச்சரியப்பட வைக்கிறது இந்த ஓவியத்தின் தோற்றம்.

இதனை வரைந்தவர் 15ஆம் நூற்றாண்டில் இத்தாலிய நாட்டில் அவதரித்த லியனா - டோ - டாவின்சி ஆவார். இவர் ஓவியர் மட்டுமல்ல சிறந்த கவிஞர். பொறியியல் வல்லுநர், சிற்பி, கணித மேதை என பல துறைகளில் சிறப்புப் பெற்றவர்.

இவர் வரைந்த ஓவியங்களில் உலகப் புகழ் பெற்றது புன்னகை பூத்த பெண்ணான இந்த மோனலிசாவின் ஓவியமாகும். இந்த ஓவியம் இப்பொழுது பரிஸ் நகரின் "லோவ்ரே" அரும் பொருள்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்த ஓவியம் கால மாற்றங்களால் மங்கி விடும் அபாயத்துக்குள்ளான நிலையில் இதனைப் பார்த்து புதிதாக வரையும் முயற்சிகள் தோற்றுப் போயின. இதனால் இதன் சிதைவுற்ற பகுதிகளை கணினி மூலம் சீர் செய்து புதுப் பொலிவு பெறச் செய்துள்ளனர் இந்தக் காட்சியக அதிகாரிகள்.

# கடைசி வீடு



ஒரு ஊரில் ஒரு தனவந்தர் இருந்தார். அவர் நிலங்களை வாங்கி வீடுகள் கட்டி நல்ல விலைக்கு விற்கும் தொழில் செய்து வந்தார். தன் தொழிலுக்கு உதவியாக ஒருவரை வேலைக்கு அமர்த்தியிருந்தார். அவர் மிகவும் நேர்த்தியான அழகான வீடுகளைக் கட்டுவதில் திறமைசாலி. அவர் கட்டும் வீடுகள் உடனேயே நல்ல விலைக்குப் போயின. பலரும் போட்டி போட்டு வாங்கினர்.

வியாபாரம் செழித்தது. தனவந்தரும் உதவியாளருக்கு நல்ல சம்பளம் கொடுத்து அவரை சிறப்பாகக் கவனித்து வந்தார். உதவியாளர் தனக்கு வயது சென்றதும் தனவந்தரை அணுகி "ஐயா எனக்கு வயசாகிறது. ஓய்வு பெற யோசிக்கிறேன்" என்றார். தனவந்தருக்கும் அதுசரியென்றே பட்டது. "தம்பி நீ எவ்வளவோ செய்து விட்டாய். இனி உனக்கு ஓய்வு தேவை தான். எனக்காக இறுதியாக ஒரு வீடு கட்டிக் கொடுத்து விட்டுப் போ" என்று கேட்டுக் கொண்டார். உதவியாளருக்கு தனவந்தர் மேலும் வேலை சொன்னது பிடிக்கவில்லை. "ஓய்வு கேட்டால் வேலை சொல்கிறாரே" என்று கோபப்பட்டார். ஆனாலும் பல நாள்களாக தன்னைக் கவனித்துக் கொண்ட மனிதரென்ற நன்றியறிதலால் ஒன்றும் பேச முடியவில்லை.


வேண்டா வெறுப்பாக அந்த கடைசி வீட்டைக் கட்டி முடித்தார். ஆனால் வழக்கமான அவரது கட்டடத் தரம் அந்தக் கட்டடத்தில் இல்லை.

வீடு கட்டி முடிக்கப்பட்ட பின் தனவந்தர் வந்தார். வீட்டின் சாவியை உதவியாளரிடம் ஒப்படைத்து "தம்பி இந்த வீட்டை உனக்காகவே கட்டினேன். நீ எனக்கு எவ்வளவோ உழைத்து தந்திருக்கிறாய். உன் ஓய்வு காலத்துக்கு இது உதவும். உனது பிள்ளை குட்டிகளோடு இந்த வீட்டில் சிறப்பாக வாழ்வாயா" என்று கூறி வாழ்த்தி விட்டுப் போனார்.

உதவியாளருக்கு திடுக்கென்று இருந்தது. "நமக்குத் தான் வீடு என்று தெரிந்திருந்தால் இன்னமும் கவனம் எடுத்து சிறப்பாகச் செய்திருக்கலாமே" என கவலையோடு வெகு நேரம் உட்காந்து யோசனை செய்து கொண்டிருந்தார்.

நாமும் நமது இளவயதில் நம் யோசனைத் தெரிவுகளாலும், செய்கைத் தெரிவுகளாலும் நமது எதிர்காலம் என்ற வீட்டைக் கட்டுகிறோம். அவ்வீட்டில் தான் எதிர்காலத்தில் வாழப் போகிறோமென முன்கூட்டியே யோசித்து திட்டமிட்டு கட்டுபவர்கள் எப்போதுமே சிறப்பாக வாழ்கிறார்கள்.

ஏனோ தானோ என்றநிலையில் திட்டமிடாமல் எதிர் காலத்தை அமைப்பவர்கள் அமைதியின்றி வாழ்கிறார்கள். நாம் சிறு வயதில் பெறும் கல்வி ஒழுக்கம், இளமை வயதில் பெறும் தொழில் வாய்ப்பு, உழைப்பு, சேமிப்பு ஆகிய அத்திபாரங்களே எமது எதிர்காலம் என்ற வீட்டை உறுதி பெறச் செய்கின்றன.



**எண்ணித் துணிக கருமம்; துணிந்த பின்
எண்ணுவம் என்பது இழுக்கு** – *குறள் :467*

## பிரதேச...

மாநாட்டு மண்டபத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தலைமையில் நடைபெற்றது.

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபைக்குச் சொந்தமான காணியை இராணுவம் கையகப்படுத்தி வைத்திருப்பதால் திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவத்தை மேற்கொள்ள முடியாத நிலமை காணப்படுகின்றது.

மாதகல் தெற்கு ஜே/151 கிராம சேவகர் பிரிவில் உள்ள காடாபுலம் என்ற பகுதியில் உள்ள காணியையே இராணுவம் கையகப்படுத்தியுள்ளது. இந்தக் காணியைப் பொதுமக்கள் பிரதேச சபைக்கு நன்கொடையாக வழங்கியிருந்தனர். குறித்த காணி பிரதேச சபைக்குச் சொந்தமானது என்பதற்கான சகல ஆவணங்களும் எங்களிடம் இருக்கின்றன. எனவே அந்தக் காணியை இராணுவத்திடமிருந்து விடுவித்துத் தாருங்கள். அந்த இடத்தில் திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவ நடவடிக்கையை மேற்கொள்ள உதவியாக இருக்கும் எனப் பிரதேச சபைச் செயலாளர் கூட்டத்தில் சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன், பிரதேச சபைக்குச் சொந்தமான காணியைத்தான் இராணுவம் கையகப்படுத்தி வைத்திருக்கின்றது என்பதை உறுதிப்படுத்த அதனுடன் தொடர்புடைய சகல ஆவணங்களையும் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுவிடம் ஒப்படையுங்கள். நாங்கள் இராணுவம் மற்றும் பாதுகாப்புத் தரப்புக்கு அனுப்பி அந்தக் காணியை விடுவிப்பது தொடர்பாக ஆராய்வோம் - என்றார்.

(ந-8)

## விகாரை...

பெண்கள் தங்கள் வீடுகளில் இருந்தவாறு நோன்பு நோற்றனர். பொலிஸாரின் எதிர்ப்புக் கும் மத்தியில் போராட்டங்கள் விரிந்தன.

கல்முனை,

சாய்ந்தமருது, மருதமுனை, அக்கரைப்பற்று, சம்மாந்துறை, இறக்காமம் உள்ளிட்ட பல முஸ்லிம் பிரதேசங்களில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டப் பேரணிகளில் முஸ்லிம் மக்களும், அரசியல் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது பல்வேறு கோஷங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு ஜும்ஆப் பள்ளிவாசல்கள்களின் முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட முஸ்லிம்கள் அவ்வப் பிரதேசசெயலகங்கள் வரை சென்று பிரதேச செயலாளர்களிடம் மனுக்களைக் கையளித்தனர்.

கல்முனையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் முன்னாள் மாநகர சபை உறுப்பினர் ஏ.எம்.பறக்கத்துல்லாஹ், தேசமான்ய ஜௌபர் ஹாஜியார் உள்ளிட்ட பிரமுகர்கள் பங்கேற்றிருந்ததுடன் பிரதேச செயலாளர் எம்.எச் முஹம்மட் கனியிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

சாய்ந்தமருது நகரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயர் எம்.ஐ.எம்.பிர்தௌஸ், முன்னாள் மாநகர சபை உறுப்பினர்களான ஏ.சி. சமால்தீன், அப்துல் மஜீத், பிரதி அமைச்சர் எச்.எம்.எம்.ஹரீஸின் இணைப்புச் செயலாளர் நௌபர் ஏ.பாவா உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர். அங்கு உதவிப் பிரதேச செயலாளர் முஹம்மட் றிகாஸிடம் மனுக் கையளிக்கப்பட்டது.

அக்கரைப்பற்றில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ஏ.எம்.அப்துல் லத்தீப்பிடம் மனுக் கையளிக்கப்பட்டது..

கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எல்.தவத்தின் வழிகாட்டலில் அக்கரைப்பற்று இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற பேரணியில் ஆயிரத்துக்கும் அதிகமான முஸ்லிம் மக்கள் கலந்துகொண்டனர்.

"முஸ்லிம்களின் காணிகளைப் பறிக்காதே!", "இன முறுகலை ஏற்படுத்தாதே!", "சமாதானத்தைக் குழப்பும் இனவாதிகளை அடக்கிவை!", "முஸ்லிம்களைத் தீண்டாதே!", 'ஜனாதிபதியே நல்லாட்சி இதுதானா?" என இன்னும் பல்வேறு கோஷங்களுடனும், ""மாயக் கல்லிக்குப் பாதுகாப்பு நாங்களே!", ""நீதிமன்றத்தை அவமதிக்காதீர்!", ""சிங்கள சகோதரர்களே நாட்டுச் சட்டத்திற்கு மதிப்புக் கொடுங்கள்" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் தாங்கியிருந்தனர்.

அக்கரைப்பற்று பட்டினப்பள்ளிவாசலில் இருந்து சுமார் இரண்டு கிலோ மீற்றர் தொலைவிலுள்ள பிரதேச செயலகத்திற்குச் செல்வதற்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் முயற்சி செய்தபோது அக்கரைப்பற்றுப் பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களைத் தடுத்து நிறுத்தினர்.

பொலிஸாரின் இந்தச் செயலுக்கு எதிராகத் திரண்டெழுந்த மக்கள் பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இந்த மோதலைத் தவிர்க்கும் முகமாக அக்கரைப்பற்று பொலிஸாரால் சம்பவ இடத்துக்கு அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் வர வழைக்கப்பட்டார். பிரதேச செயலாளருடன் தமது ஆர்ப்பாட்டத்தின் நோக்கம்பற்றி இளைஞர்கள் தெளிவுபடுத்தினர்.

இதன்போது சமாதானத்துக்குக் குந்தகம் விளைவிப்போருக்கு எதிரான தமது எதிர்ப்பைத் தெரிவிப்பதோடு புத்தர் சிலை நிறுவுவதை உடன் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற கோரிக்கைகள் அடங்கிய மனுவைப் பிரதேச செயலாளரிடம் முஸ்லிம் மக்கள் கையளித்தனர்.

இறக்காமத்திலும் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி நேற்று நடைபெற்றது. நேற்றுக் காலை முதல் இறக்காமம் பிரதேச பாடசாலைகளுக்கு மாணவர்கள் சமுகமளிக்கவில்லை. கடைகள் அனைத்தும் அடைக்கப்பட்டிருந்தன. வீதிகள் எங்கும் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. கணிசமான பெண்கள் தங்கள் வீடுகளில் இருந்தவாறு நோன்பு நோற்றிருந்தமையையும் காண முடிந்தது.

நேற்று ஜும்ஆ தொழுகையை அடுத்து இறக்காமம் ஜும்ஆ பள்ளிவாசல் ஜாமியுல் தையார் பள்ளிவாசல், வரிப்பதான்சேனை ஜும்ஆப் பள்ளிவாசல் ஆகிய பள்ளிகளில் இருந்து ஒன்று திரண்ட சுமார் மூவாயிரத் துக்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் அல்லாஹ் அக்பர் என்ற கோஷத்துடன் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டனர்.

3 பள்ளிகளிலுமிருந்தும் இறக்காமம் பிரதான சந்திக்கு வருகை தந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து பேரணியாக இறக்காமம் பிரதேச செயலகத்துக்குச் சென்று மாயக்கல்லி மலையை மீட்டுத்தரு மாறு கோரும் மகஜரை பிரதேச செயலாளர் எம்.எம்.நஸீரிடம் கையளித்தனர்.

(ந-4-10)

## மரண அறிவித்தல்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 15 | 25 |
| 02 | 04 |
| 1960 | 2017 |

### திருமதி லங்காதேவி மகேந்திரராசா

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லங்காதேவி மகேந்திரராசா 25.04.2017 செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் மகேந்திரராசாவின் அன்பு மனைவியும், குரும்பசிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மனோரஞ்சிதன் - மனோன்மணி தம்பதியரின் கனிஸ்ட புத்திரியும், வதிரியை சேர்ந்த காலஞ்சென்ற Dr. மாணிக்கம் மற்றும் இராசம்மா தம்பதியரின் ஆசை மருமகளும், காலஞ்சென்ற சாரதாதேவி மற்றும் பாரதாதேவி, கதாதரன், நரேந்திரன், சிறீதரன், சுபத்திராதேவி, கலைவாணிதேவி மனோகரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.04.2017) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

2 ஆம் ஒழுங்கை,
பொற்பதி வீதி, கொக்குவில்.

(சி.எஸ்.3571) (13.17)

தகவல் :
திருச்செல்வன்

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை
**திருமதி கஜேந்தினி கமலதாசன்**
அவர்களின் பாசமிகு மாமனார்
**தில்லையம்பலம் சுப்பிரமணியம்**

அவர்கள் 27.04.2017 அன்று காலமான செய்தி கேட்டு பெருந்துயரடைகிறோம். அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தவரின் துயரில் பங்குகொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்,**
**யா/இணுவில் மத்திய கல்லூரி, இணுவில்.**

## நன்றி நவிலலும்
## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர் யோகராணி சிவானந்தராசா

கடந்த 16.03.2017 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் யோகராணி சிவானந்தராசா அவர்களின் பிரிவுச் செய்திகேட்டு எமது துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன்,

அன்னாரின் அந்தியேட்டி வீட்டுக்கிரியைகள் இன்று (29.04.2017) முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்**
**கல்வயல் வீதி, முதலாம் ஒழுங்கை,**
**நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.**

## மரண அறிவித்தல்கள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 13 | 28 |
| 11 | 04 |
| 1942 | 2017 |

### நாகலிங்கம் சற்குணநாதன் (குணம்)

யாழ்ப்பாணம், சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் அம்பாறை அக்கரைப்பற்றை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சற்குணநாதன் நேற்று (28.04.2017) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - நாகரத்தினம் தம்பதிகளின் ஏக புதல்வனும், கனகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், வேலுப்பிள்ளை (பிரான்ஸ்), விஜயகுமார் (லண்டன்), விக்னேஸ்வரன் (பிரான்ஸ்), அருந்ததி (கொழும்பு), சந்திரகுமார் (லண்டன்), ரஞ்சனி (கனடா), சகுந்தலா (கனடா), விஜயாகினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சரஸ்வதி (கனடா), காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி (யாழ்ப்பாணம்), நாகம்மா (யாழ்ப்பாணம்) மற்றும் சுந்தரலிங்கம் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அக்கரைப்பற்று.**

தகவல்:
**மனைவி, மருமகன்.**

**067 227 7159, 077 026 6139,**
**மருமகன் - 077 348 9238** (c/29371)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 | 27 |
| 06 | 04 |
| 1929 | 2017 |

### திருமதி புஸ்பரத்தினம் மயில்வாகனம்

யாழ்ப்பாணம், புத்தூர், வாதரவத்தையைப் பிறப்பிடமாகவும், திருநகரை நிரந்தர முகவரியாகவும், வவுனியா வேப்பங்குளத்தை தற்காலிக முகவரியாகவும் கொண்ட திருமதி புஸ்பரத்தினம் மயில்வாகனம் 27.04.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற ராமலிங்கம் - பவானி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சாமிநாயகம், சுப்பிரமணியம், சிவநேசம் மற்றும் செல்வராசா, பத்மலோஜினி, நேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற திலகவதி, அரியநாயகி, பாக்கியநாதன் மற்றும் இரத்தினராசா, லீலாவதி, சத்தியநாதன் ( பிரான்ஸ்), யோகராசா (கனடா), மகேஸ்வரி (வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுந்தரமூர்த்தி, சிவபாதம், காலஞ்சென்ற தனபாலசிங்கம், தர்மராசா மற்றும் சிவகுமார், அன்னலட்சுமி, வரலட்சுமி, சற்குணதேவி, நற்குணதேவி, தனலட்சுமி ஆகியோரின் சிறிய தாயாரும், காலஞ்சென்ற சின்னராசா, தவம் மற்றும் சிவராசா, ஜெகா, மகா, லதா, செந்தில்நாதன் ஆகியோரின் மாமியாரும், யோகராசா (தனியார் பேருந்து உரிமையாளர்), ரூபன், குமுதினி, நந்தினி, தர்சினி, காலஞ்சென்ற சுதர்சன் மற்றும் நிதர்சன், நிர்மலன், சுபாசினி, சுபாநந்தி, கோகிலவதனா, கார்த்திகா, காயத்திரி, காருண்யா, சானுகா, லோஜித், றினோஜ், நிலக் ஷி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சந்திரிக்கா, தனுசிகா, சிந்துஜன், தேனு, வாஷிகா, வினோச், சஸ்வின், சக்தி, அபி, மிதுஷா, டினோ, டிலானி, செந்தூரன், யாழினி, கயனி, குருமதி, பாவினி, தமிழினியன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.05.2017 திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் 343/5, மெதடிஸ்த சேர்ஜ் லேன், வேப்பங்குளத்திலுள்ள அவரின் வதிவிடத்தில் நடைபெற்று பூதவுடல் தட்சணாங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(aja in/1834)

தகவல்:
**பிள்ளைகள்.**

**077 572 5032**

## ராணுவ...

போன்று மக்களை ஒடுக்கும் இராணுவ ஆட்சியை நோக்கிச் செல்லவா சிறப்புச் செயலணியை அமைக்கப் பார்க்கின்றது?
இந்தச் செயலணிக்கு நியமிக்கப்படவுள்ள நபர் குறித்து எமக்குப் பிரச்சினை இல்லை. ஆனால், இந்த முறைமையே தவறு என்றுதான் சுட்டிக்காட்டுகின்றோம்.
நிறைவேற்று அரச தலைவர் முறைமை ஒழிக்கப்பட்டு, மேலும் சில சுயாதீன குழுக்கள் அமைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், இப்படியொரு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளமை பயங்கரமானது. மக்கள் பிரச்சினைக்கு அடக்குமுறை வழியல்ல. அதைத் தேடிச் செல்வதும் முறையல்ல - என்றார். (த-4)

## யாழ்.பல்கலை...

நடை முறைக்கு வரும் வகையில் 3 வருடங்களுக்கு அவர் துணைவேந்தராக நியமிக்கப்பட்டதாக அரச தலைவரது செயலரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தர் பதவிக்காக நடைபெற்ற தேர்தலில் அதிக வாக்குகளைப் பெற்று தொழில்நுட்பப் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராஜா முன்னிலையில் இருந்தார். அடுத்ததாகப் பேராசிரியர் ஆர்.விக்னேஸ்வரனும் மூன்றாவதாக வணிக முகாமைத்துவப் பீடாதிபதி பேராசிரியர் ரீ.வேல்நம்பியும் வாக்குகளின் அடிப்படையில் தெரிவாகினர்.
குறித்த மூவருடைய பெயர்களும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவையால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குப் பரிந்துரைக்கப்பட்டிருந்தன. அவற்றை மானியங்கள் ஆணைக்குழு அரச தலைவருக்கு அனுப்பியிருந்தது.
கடந்த சில தினங்களுக்கு முன்னர் தொழில்நுட்பப்பீடாதிபதி பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராஜா துணைவேந்தராகத் தெரிவு செய்யப்படவுள்ளார் என்று செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-4-101)

## அரச...

தொகுதியில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் மாணிக்கமடு மாயக்கல்லிமலை விவகாரம் தொடர்பில் பல்வேறு சாதகமான தீர்மானங்கள் எட்டப்பட்டுள்ளன என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்தார்.
சந்திப்புத் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
இறக்காமம் மாணிக்கமடு மாயக்கல்லி மலையை அண்டிய பகுதியில் சிறுபான்மையினரின் காணிகளே உள்ளன. அவர்களின் காணி உறுதிகள் உள்ளிட்ட ஆவணங்கள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன. இது தொடர்பில் அரச தலைவர் சிறப்புக் கவனம் செலுத்தியுள்ளார்.
அதேவேளை, கிழக்கில் காணப்படும் சிறுபான்மையினரின் காணி ஆக்கிரமிப்புக்கள், அத்துமீறல்கள் தொடர்பிலும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் இதன்போது அரச தலைவரிடம் எடுத்துரைத்தார்.
எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் மாணிக்கமடு தொடர்பில் அரச தலைவரிடம் பல அழுத்தமான கோரிக்கைகளை விடுத்தனர். எனவே, இது தொடர்பில் அரச தலைவரால் சாதகமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படக்கூடிய சாத்தியங்கள் உள்ளன.
இதனையடுத்து மாணிக்கமடு விவகாரம் தொடர்பில் கிழக்கின் ஆளுநர் மற்றும் அம்பாறை மாவட்ட அரச அதிபரிடமும் அரச தலைவர் பேச்சு நடத்தியுள்ளார். இதன்போது அவர்களுக்கு அரச தலைவர் பல சாதகமான பணிப்புரைகளை விடுத்துள்ளார் எனத் தெரியவருகின்றது.
சிறுபான்மையினரின் பிரச்சினைகளின் போது தமிழ், முஸ்லிம் தலைமைகளான எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் ஒன்றிணைந்து செயற்படுவது வரவேற்கத்தக்க விடயம். இவ்வாறான தருணங்கள் சிறுபான்மையின அரசியல் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை.
சிறுபான்மையினருக்கான நலன்களுக்கு குந்தகம் ஏற்படுகின்றபோது தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகள் இணைந்து குரல் கொடுப்பதன் ஊடாக பாரிய வெற்றிகளை எட்ட முடியும்" - என்றார். (த-4)

## வீடமைப்புச்...

திறைசேரியில் தலைமை அமைச்சரின் மேலதிக செயலாளர் பாஸ்கரலிங்கம் தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.
குறித்த சந்திப்பில் வடக்கு மாகாணம் தொடர்பில் பல திட்டங்கள் மேற்கொள்ள முன்மொழியப்பட்டன.
யாழ்ப்பாணம் நாவற்குழியில் படையினர் வசம் உள்ள தேசிய வீடமைப்பு அதிகார சபையின் காணி தொடர்பில் பேசப்பட்டவேளை, தற்போது மக்களுக்குச் சொந்தமான நிலங்களை மீளக் கையளிப்பதற்கான முடிவுகள் எட்டப்படுவதால் குறித்த காணியை படையினருக்கே விட்டுக் கொடுக்குமாறு கோரப்பட்டது.இருப்பினும் அந்தப் பகுதியில் வீடமைப்பு அதிகார சபையின் தேவை தொடர்பிலும் எடுத்துக் கூறப்பட்டது. இதனை ஆராய்ந்து இறுதியில் குறித்த இடத்தைப் படையினர் மீளவும் அதிகார சபையிடமே ஒப்படைக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.
அத்தோடு யாழ்ப்பாண மாவட்டத்துக்கான அபிவிருத்தியாகப் புதிதாக விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்கான வீட்டுத் திட்டம் அமைத்தல். அந்தப் பகுதிகளுக்கான உள்ளக வீதிகள் உட்பட குடாநாட்டில் 300 கிலோமீற்றர் உள்ளக வீதி திருத்தம் எனபன குறிப்பிடப்பட்டன. அத்துடன் மாற்றுவலுவுள்ளோருக்கான 200 மலசலகூடங்கள் அமைப்பு, ஆயிரம் கிணறுகள் அமைப்பு என்பனவும் மேலதிக மாவட்டச் செயலரால் முன்மொழியப்பட்டன.
எழுவைதீவுக்கும் அனலைதீவுக்கும் இடையிலான பாதுகாப்பான போக்குவரத்துக்காக ஒரு பாதை வசதி வேண்டும் என்பது தொடர்பிலும் ஆராயப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.
கிளிநொச்சி மாவட்டத்தின் முக்கிய தேவைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது. முழங்காவில் நீர் விநியோகத்திட்டம் மற்றும் வீட்டுவசதிகள் உள்ளிட்டவை உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டியுள்ளதாகக் கிளிநொச்சி மாவட்டச் செயலரால் தெரிவிக்கப்பட்டது.
முல்லைத்தீவு மாவட்டத்தில் மிக முக்கியமாக வட்டுவாகல் பாலம் புனரமைக்கப்பட வேண்டும் எனவும், இப்போதுள்ள பாலத்தால் எதிர்காலத்தில் அதிக ஆபத்துக்கள் நிகழும் வாய்ப்புள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டதோடு மாவட்டத்தில்மாந்தைகிழக்குபிரதேசத்தின்16 கிலோமீற்றர் வீதிகள் எதிர்வரும் மாரி காலத்தின் முன்னர் திருத்தியமைக்கப்பட்டே ஆகவேண்டும் எனவும் கூறப்பட்டது. அத்துடன் கடந்த ஆண்டு அனுமதிக்கப்பட்ட வீட்டுத் திட்டத்துக்கான நிதி விடுவிப்புத் தொடர்பில் மாவட்டச் செயலாளரினால் கூறப்பட்டது.
கொக்கிளாய் பாலம் சீரமைப்புக்கான திட்ட அறிக்கையையும் மாவட்டச் செயலர் முன்வைத்தார். வட்டுவாகல் பாலத்திற்கான திட்ட அறிக்கையை உடன் சமர்ப்பிக்குமாறு அரச தரப்பினால் கோரப்பட்டது.
மன்னார் மாவட்டத்தில் மக்களுக்கான வீட்டுத்திட்டம் குறித்து ஆராயப்பட்டது. இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பியவர்கள் அதிகமாக இருப்பதால் 2 ஆயிரம் வீடுகளை வழங்குமாறு கோரப்பட்டது. அதேபோன்று வவுனியா மாவட்டத்தின் சார்பில் பங்குகொண்டிருந்த மேலதிக மாவட்டச் செயலர், மாவட்டத்துக்கான வீட்டு வசதிகளைக் கோரினார். அத்துடன் மாவட்டத்தில் அதிகமான சிறுநீரக நோயாளர்கள் காணப்படுவதால் அதற்கான வசதி வாய்ப்புக்களை வழங்குமாறு கோரினார். இதற்கான திட்ட அறிக்கையினையும் உடனடியாகவே வழங்குமாறு அரச தரப்பினரால் கோரப்பட்டது. குறித்த கலந்துரையாடலில் அமைச்சுக்களின் செயலாளர்களும் கலந்து கொண்டனர். (த-4-101)

## குப்பைமேடு...

பற்றி சிந்திக்கவேண்டும். இதற்காக அரசியல் கலாசாரத்திலும் மாற்றம் ஏற்படவேண்டும்.
இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருடான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்பு வேளை மீதொட்டமுல்ல பேரிடர் தொடர்பிலான பிரேரணை மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மீதொட்டமுல்ல குப்பைமேடு அமைந்துள்ள பகுதியில் இடர் இருக்கின்றதென அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், அசமந்தமான செயற்பாடுகளால் அப்பாவி மக்கள் இன்று பாதிக்கப்பட்டுள்ளன. இடர் இருக்கின்றதென எச்சரிக்கை விடுக்கப்பட்டும் ஏன் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை? குப்பையிலும் அரசியல் நடத்தப்பட்டுள்ளது. இலங்கையின் அரசியல் கலாசாரம் அவ்வாறானதாக மாறிப்போயுள்ளது.
மக்களுக்காக முன்னெடுக்கப்படும் எந்தவொரு திட்டமாக இருந்தாலும் அரசியல் தலையீடு இன்றி முன்னெடுக்கப்படுவதில்லை. இது துரதிர்ஷ்ட நிலை.
அதேவேளை, தமது சௌகரியத்துக்காக அதிகாரத்தை மீளப்பெறும் நோக்கில் எந்தவொரு திட்டமாக இருந்தாலும் அதை எதிர்க்கும் கலாசாரம் உருவாகியுள்ளது. இதன்போது நாடுபற்றிச் சிந்திக்கப்படுவதில்லை. ஜனநாயக ரீதியில் மக்கள் வழங்கிய ஆணையை மீறும் செயற்பாடாகவே இது அமைந்துள்ளது. இப்படியான அரசியல் அணுகுமுறை மாறவேண்டும்" என்றார்.
மீதொட்டமுல்ல இடரினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு உரிய நட்டஈட்டை வழங்கவேண்டும், அவர்களை வேறு இடங்களில் தங்க வைக்க உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். குறித்த சம்பவத்தைக் கருத்திற்கொண்டு குப்பைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்என்றார்.
சபை ஒத்திவைப்புவேளைப் பிரேரணையை வழிமொழிந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், இடரினால் உயிரிழந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவித்ததுடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு உரிய தீர்வை வழங்கவேண்டும் எனவும் வலியுறுத்தினார். (த-4)

## ரணிலுக்கு...

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில பாராட்டுத் தெரிவித்தார்.
அவர் மேலும் கூறியதாவது:
இடர் ஒன்று ஏற்படும்போது அதை அரசியல் ரீதியாகப் பார்க்காது, மக்களுக்காக அனைவரும் இணைந்து செயற்படவேண்டும். மீதொட்டமுல்ல இடர் நடைபெற்று மறுநாளே இதற்கு ராஜபக்ச ஆட்சிதான் பொறுப்புக்கூற வேண்டுமென அமைச்சரொருவர் குற்றஞ்சாட்டினார். இதையடுத்து கடந்த காலம் பற்றிப் பேசவேண்டிய சூழ்நிலை எமக்கும் ஏற்பட்டது. தலைமை அமைச்சர் ரணில் மீது எமக்கு விமர்சனம் இருக்கின்றது. ஆனாலும், சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சென்று மக்களை அவர் பார்வையிட்டார். இடருக்காக அரசு முழுப்பொறுப்பையும் ஏற்று உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்று அவர் அறிவித்தார். இதற்காக நாம் அவருக்குப் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அமைச்சர் சாகல ரத்னாயக்கவும் எதிர்ப்புக்கு மத்தியில் அங்கு சென்றிருந்தார். அவரின் தைரியத்தையும் பாராட்டவேண்டும்.
மீதொட்டமுல்ல குப்பைமேடு சரிந்து விழாமல் இருப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச எடுத்திருந்தார். மேல் மாகாணத்தில் இருக்கும்போது என்னாலும் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.
அத்துடன், சுகாதாரத்துக்கும், சூழலுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் குப்பை சேகரிக்கும் முறைமை உலகநாடுகளில் இருக்கின்றது. தொம்பைப் பகுதியிலும் அவ்வாறான பொறிமுறை உள்ளது. இப்படியான திட்டங்களே உருவாக்கப்படவேண்டும் - என்றார். (த-4)

## மகிந்தவின்...

வருகின்றனர் என அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார். இதனால் அரசியல் அரங்கில் வெகுவிரைவில் அதிரடி மாற்றங்கள் ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.
மகிந்த அணியின் மே தினக் கூட்டத்தில் சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் பலர் கலந்துகொள்ளவுள்ளனர் என்று கூறப்படுகின்றமை தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மகிந்தவுக்கு உண்மையில் மக்கள் செல்வாக்கு உண்டு. ஆனால், அவரால் வெல்ல முடியாது. சிறிமாவின் காலத்திலும் இவ்வாறுதான் சிறிமாவுக்கு மக்கள் செல்வாக்கு அதிகமாக இருந்தது. ஆனால்,தொடர்ச்சியாக எட்டுத் தேர்தல்களில் அவர் தோல்வியடைந்தார். ஆனால், அவர் கட்சியை விட்டுக் கொடுக்காமல் பிடித்துக் கொண்டதால் பிறகு 94 இல் இருந்து சுதந்திரக் கட்சியால் தொடர்ச்சியாக ஆட்சியைக் கைப்பற்ற முடிந்தது. 94 இல் பெற்ற அந்த வெற்றிதான் மகிந்த இரண்டு தடவைகள் அரச தலைவர் பதவியைக் கைப்பற்ற உதவியது.
மகிந்தவுக்கு மக்கள் செல்வாக்கு உள்ளபோதிலும் அவருக்கென்று ஒரு கட்சி இல்லாததால் அவரால் வெல்ல முடியாது. வெல்ல முடியாதவர்களின் பின்னால் சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்லமாட்டார்கள். அவரது தலைமையிலான மே தினக் கூட்டத்தில் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் கலந்துகொள்வர் என்று அவர்கள் சொல்வது மக்களைக் குழப்புவதற்காகத்தான்.
சுதந்திரக் கட்சியில் மீண்டும் வந்து இணைவதற்காக மகிந்த அணியின் பலர் எம்முடன் பேச்சு நடத்திக்கொண்டு இருக்கின்றனர். அதைவிடவும் முக்கியமானது என்னவென்றால் மகிந்தவின் நெருங்கிய உறவினர்களே எம்முடன் இணைவதற்காக அரச தலைவர் மைத்திரிபாலவுடன் பேச்சு நடத்திக்கொண்டிருப்பதுதான். அரசியல் அரங்கில் விரைவில் பல மாற்றங்கள் ஏற்படும் - என்றார். (த-3)

## குப்பைமேடு சரிவை...

அகற்றுவதற்குரிய பணி ஆரம்பமாகும்.
இவ்வாறு மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மீதொட்டமுல்லையில் மட்டுமல்ல கொழும்பு, காலி, மாத்தறை, கண்டி ஆகிய இடங்களிலும் குப்பைமேட்டுப் பிரச்சினை இருக்கின்றது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண அதிகாரமுள்ள நிறுவனமொன்று உருவாக்கப்பட வேண்டும்.
குப்பைகளை மீள்சுழற்சி செய்வதற்குச் செலவு அதிகம். அதை ஏற்பதற்கு நிறுவனங்கள் முன்வருவதில்லை. மீள்சுழற்சித் திட்டம் தோல்வியடைகின்றது. ஒரு டொன் குப்பையை முறையாக மீள்சுழற்சி செய்வதற்கு 10 ஆயிரம் ரூபா வரை செலவாகும். ஒரு கிலோ குப்பைக்கு 7 முதல் 10 ரூபா வரை செலவாகும்.
குப்பைப் பிரச்சினைக்கு விஞ்ஞான ரீதியில் தீர்வு காண்பதே அரசின் திட்டம். அதற்குரிய நிலையங்களை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. இதனை எவரும் எதிர்க்கக்கூடாது. எதிர்ப்புக் காரணமாகத்தான் கடந்த காலங்களில் பல திட்டங்கள் கைவிடப்பட்டன.
மே மாதம் மழை ஆரம்பித்துவிடும். எனவே, மீதொட்டமுல்ல குப்பைமேடு சரிந்துவிழும் அபாயம் இருக்கின்றது. அதைத் தடுப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது- என்றார்.
அதேவேளை, மீதென் வாயு அதிகரித்துள்ளதால் குப்பைமேடு சரிந்துவிழும் எனச் சுட்டிக்காட்டி ஜப்பான் குழுவினர் முன்வைத்துள்ள பரிந்துரைகள் தொடர்பில் அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன சுட்டிக்காட்டிய போது, 5 வீதத்துக்கும்மேல் மீதென் வாயு இருந்தாலேயே வெடிப்பு ஏற்படும். அதனை விடவும் குறைவாகவே இருக்கின்றது. எனவே, மீதொட்டமுல்ல குப்பைமேடு வெடிக்காது என்று பதிலளித்தார் அமைச்சர் சம்பிக்க ரணவக்க. (த-4)

## இலங்கைக்குள்...

திருமலையில் இருக்கின்ற 99 எண்ணெய்க் குதங்களையும் இலங்கை இந்தியாவுக்குக் கொடுத்துவிட்டது. இப்போது இந்தியா அதைச் சுற்றியுள்ள முழு நிலத்தையும் இலங்கையிடம் கேட்டுக்கொண்டிருக்கின்றது. இலங்கையும் கொடுப்பதற்குத் தயாராகிவிட்டது.
சீனா போன்ற நாடுகளைச் சமாளிப்பதற்கு இந்தியாவுக்கு திருகோணமலைத் துறைமுகம் தேவைப்படுகின்றது. இப்போதைய எண்ணெய்க் குதங்களில் எரிபொருளை இந்தியா களஞ்சியப்படுத்தத் தொடங்கியதும் இந்தியாவின் போர்க் கப்பல்கள் திருகோணமலை துறைமுகத்துக்குத் தொடர்ச்சியாக வரும்.
இந்த எண்ணெய்க் குதங்களுக்கு முஸ்லிம் தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் இருக்கிறது என்று கூறிப் பாதுகாப்பு என்ற போர்வையில் இந்திய இராணுவத்தைத் திருமலையில் நிறுத்துவதற்கான திட்டம் ஒன்று இந்தியாவிடம் உண்டு.
இது இலங்கைக்கு மிகவும் ஆபத்தான ஒரு திட்டமாகும். இதை அரச தலைவர் உடன் தடுத்து நிறுத்த வேண்டும். மக்கள் இது தொடர்பில் தெளிவு பெறவேண்டும். எமது வளங்களை வெளிநாட்டு சக்திகள் சுரண்டுவதைத் தடுப்பதற்கு அனைவரும் முன்வர வேண்டும் - என்றார். (த-3)

# சித்திரை மாத பலன்

## கும்பம்

சிறிய வேலையாக இருந்தாலும் அதிகமான உழைப்பைச் செலுத்தும் குணமுடைய கும்ப ராசி அன்பர்களே, இந்தக் காலகட்டத்தில் குறிக்கோளற்ற வீண் அலைச்சல் உண்டாகலாம். தைரியம் அதிகரிக்கும். சமி பாடின்மை ஏற்படலாம். உடல்சோர்வு உண்டாகும். பணம் பலவழிகளிலும் செலவாகும். காரியதாமதம் ஏற்படும். அடுத்தவர்களுக்காக எந்த உத்தரவாதமும் கொடுக்காமல் இருப்பது நல்லது. வீண் மனக்கவலை நீங்கும். வாகனங்களில் செல்லும்போது கவனம் அவசியம். நண்பர்கள் மூலம் கிடைக்க வேண்டிய உதவிகள் தாமதப்படும். தொழில், வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் சற்று விழிப்புடன் இருப்பது நல்லது. பொருள்களை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும்போது கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. எதிர்பார்த்த பணம் கைக்குவர தாமதம் ஆகலாம்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலைச்சலையும், வேலைப் பளுவையும் சந்திக்க நேரிடும். சிலருக்கு இடமாற்றம் உண்டாகலாம். குடும்பத்தில் திடீர் கருத்து வேற்றுமை ஏற்படலாம். வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்பதும், கணவன் – மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்துச் செல்வதும் நல்லது. சகோதரர்களுடன் கருத்து வேற்றுமை உண்டாகலாம். எச்சரிக்கை தேவை. பெண்கள் அடுத்தவர்களுக்கு உதவிகள் செய்யும்போது கவனமாக இருப்பது நல்லது. செலவு அதிகரிக்கும். வீண் கவலை உண்டாகலாம். கலைத்துறையினர் சோம்பேறித் தனத்தை விட்டுவிட்டு நன்கு உழைப்பது வெற்றிக்கு வழிவகுக்கும். அறிவுத்திறன் அதிகரிக்கும்.

உங்களது பேச்சு மற்றவரை மயக்கும். எங்கு இருந்தாலும் ருசியான உணவை உண்டு மகிழ்வீர்கள். சாமர்த்தியமாக காரியங்களை செய்து வெற்றி பெறுவீர்கள். அரசியல்துறையினருக்கு உங்கள் வளர்ச்சிக்காக சில திட்டங்களைச் செயற்படுத்த முடிவெடுப்பீர்கள். பணவரத்து திருப்தி தரும். செயல்திறமை கூடும். பயணங்களும் செல்ல நேரிடலாம். மனதில் நிம்மதி ஏற்படும். சுற்றத்தினர் வருகை இருக்கும். நண்பர்கள் மூலம் மனமகிழ்ச்சி ஏற்படும். இனிமையான வார்த்தைகளால் சிக்கலான காரியத்தை கூட எளிதாக செய்து முடிப்பீர்கள். மாணவர்கள் கல்வி பற்றிய கவலையை தவிர்த்து கூடுதல் கவனத்துடன் படிப்பது நல்லது. வீண் அலைச்சல் இருக்கும்.

**பரிகாரம்:**
அருகிலிருக்கும் சிவன் கோயிலுக்குச் சென்று பைரவருக்கு விளக்கு ஏற்றி வழிபட நன்று. கடன் தொல்லை அகலும்.

## மீனம்

இளகிய மனம் கொண்ட மீன ராசி அன்பர்களே, நீங்கள் பொதுச்சேவையில் நாட்டம் உடையவர்கள். இந்தக் காலகட்டத்தில் மற்றவர்களின் உதவியால் காரிய அனுகூலம் உண்டாகும். பணவரத்து தாராளமாக இருக்கும். கையிருப்புக் கூடும். இதுவரை இருந்த தொல்லைகள் நீங்கும். நீண்ட தூரப் பயணங்களால் இலாபம் உண்டாகும். மனதில் தைரியம் பிறக்கும். வாக்குவன்மையால் ஆதாயம் பெறுவீர்கள். உயர்மட்ட பதவியில் உள்ளவர்களின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரம் சற்று நிதானமாக நடக்கும் எதிர்பார்த்த இலாபம் இருந்தாலும் தொழில் தொடர்பான செலவும் கூடும். பொருள்களை வாங்கும்போது கவனித்து வாங்குவதும், பாதுகாப்பாக வைப்பதும் நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக பணியாற்ற வேண்டியிருக்கும்.

பதவி உயர்வு கிடைக்கலாம். குடும்பத்தில் இருப்பவர்களுடன் கோபப்படாமல் நிதானமாகப் பேசி அனுசரித்துச் செல்வது நல்லது. சகோதரர் வகையில் உதவி கிடைப்பதில் தாமதம் உண்டாகலாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன், மனைவிக்கிடையே இருந்த மனஸ்தாபம் நீங்கும். விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள். பெண்களுக்கு ஆடை, ஆபரணங்கள் வாங்கும் எண்ணம் அதிகரிக்கும். நிதானமாகப் பேசி மற்றவர்களிடம் அனுசரித்துச் செல்வது காரிய வெற்றிக்கு உதவும். கலைத்துறையினருக்கு எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு சில திட்டங்களை ஆலோசிப்பீர்கள். எந்தச் சூழ்நிலையிலும் மனம் தளராது விடாமுயற்சியுடன் காரியங்களைச் செய்யுங்கள். வாகனங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். சிலருக்கு மருத்துவச் செலவு ஏற்படும்.

வீட்டை விட்டு வெளியில் தங்க நேரிடும். கடன் விவகாரங்களில் கவனம் தேவை. உபதொழில் தொடர்பான காரியங்கள் தாமதமாக நடக்கும். அரசியல்துறையினர் மேலிடத்துக்குப் பயந்து வேலை செய்ய வேண்டி இருக்கும். உழைப்பு அதிகரிக்கும். நண்பர்களுடன் கருத்து வேறுபாடு உண்டாகலாம். உங்கள் வசம் உள்ள ஆவணங்களைக் கவனமாகப் பார்த்துக் கொள்வது நல்லது. சொத்து விவகாரங்களில் கவனம் தேவை. எதிர்பாராத செலவு உண்டாகும். நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த காரிய வெற்றி கிடைக்கும். மாணவர்கள் கல்விக்குத் தேவையான உபகரணங்கள், புத்தகங்கள் வாங்குவீர்கள். கூடுதலாக நேரம் ஒதுக்கிப் பாடங்களைப் படிக்க வேண்டும்.

**பரிகாரம்:**
தினமும் வீட்டுப் பூசையறையில் பஞ்சமுக தீபம் ஏற்றிவர மன அமைதி கிடைக்கும். காரிய அனுகூலம் உண்டாகும்.

## வரலாற்றில் இன்றைய தினம்

1946 –பன்னாட்டு இராணுவ நீதிமன்றால் ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஹைடெகி ரோஜோவும் மற்றும் 28 பேரும் போர்க்குற்றத்துக்காக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

1951 –மத்திய மக்கள் அரசுக்கான திபெத்திய பிரதிநிதிகள் சீனாவின் இறையாண்மை மற்றும் திபெத்திய சுயாட்சி தொடர்பாக 17 அம்ச ஒப்பந்தத்தை வரைவதற்காக பீஜிங்கைச் சென்றடைந்தனர்.

1970 –ஐக்கிய அமெரிக்க மற்றும் தென் வியட்நமியப் படகள் வியட்கொங் படைகளை வேட்டையாட கம்போடியாவுள் பிரவேசித்தது.

1986 –லோஸ் ஏஞ்சல் பொது நூலகத்தில் பரவிய தீயால் 4இலட்சம் புத்தகங்களும் வேறு ஆவணங்களும் சேதமடைந்தன அல்லது அழிந்தன.

1986 –அமெரிக்க மற்றும் ஐரோப்பிய புலனாய்வு விண்கலத்தால் செர்னோபில் அணுமின் சக்தி நிலையத்தின் 4ஆவது உலையில் ஏற்பட்ட இடர் படம் பிடிக்கப்பட்டன.

1991- பங்களாதேசின் தென் கிழக்கு பகுதியான சிட்ட கொங் மாவட்டத்தில் சூறாவளி 155 மைல்/மணி வேகத்தில் தாக்கியதில் ஒரு இலட்சத்து 38 ஆயிரம் பேர் வரை உயிரிழந்ததுடன் பல மில்லியன் மக்கள் வீடிழந்தனர்.

1992 –லொஸ் ஏஞ்சல் கலவரம்; றொட்னி கிங் என்பவரைப் பொலிஸ் அதிகாரியொருவர் கடுமையாகத் தாக்கி விடுவித்த நிலையில் அது தொடர்பான பதிவுகள் வெளிவந்து அடுத்து மூன்று நாள்களில் ஏற்பட்ட கலவரங்களில் 53 பேர் கொல்லப்பட்டதுடன் நூற்றுக் கணக்கான கட்டடங்கள் சேதமாக்கப்பட்டன.

### நாளை

**சித்திரை-17**
ஞாயிற்றுக்கிழமை -30.04.2017
திதி: சதுர்த்தி மு.ப.08.57
நட்சத்திரம்: மிருகசீரிடம் பி.ப.01.36
சுபநேரம்:08.58-10.28 வரை
ராகுகாலம்:04.28-05.58 வரை

Be Come a Beautician?
Dip.in Beauty Therapy
Make-up
Threding
Facial
Cleanup
Skin Care
Manicure & Pedicure Treatment
Waxing Techniques
Saloon reception duties
Nail Arts
Health & Safety Practice
1 Year part time
6 Months full time
Free Herbal Items
Practical 100%
Special 1 day workshop on May 2017 Certificate Issue
NEW WAY SKY LINE INSTITUTE
No. 2C, IBC Road, Colombo -06.
(Near by Arpico Wellawatte - sea side)
Tel : 0114 575 043 / 077 334 7332



இம்முறை தனயோகம் உங்களுடையதா?

| திகதி | வெற்றிவாரம் | வர்ணம் |
| --- | --- | --- |
| 28.04.2017 | 2125 | சிவப்பு |

துலாம்
10 18 28 56
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 2, 335, 252/=
2017.04.30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

## தேர்த் தரிப்பிட திறப்பு விழாவும் மலர் வெளியீட்டு விழாவும்

அச்சுவேலி வடக்கு, சித்திரவேலாயுதர் ஆலயத் திற்கென காலஞ்சென்ற சந்தன் - செல்லர், செல்லர் செல்லம்மா நினைவாக தேர்த்தரிப்பிடம் ஒன்று அமைக்கபட்டு அதனை இன்று 29.04.2017 திறப்பு விழா செய்வதற்கு முருகன் திருவருள் கைகூடியுள்ளது.

இக் கைங்கரியத்தில் அனைத்து பக்த அடியார்களும் கலந்துகொண்டு முருகன் அருளைப் பெற்று ஏகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சுபம்
**ஆசை - சுப்பிரமணியம்**
**குடும்பத்தினர்.**

## மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்
## கேள்வி அறிவித்தல் - திருத்தம்

தவிசாளர், பெறுகைக்குழு மாவட்டச்செயலகம் சார்பாக அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளரால் " மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகின் மூலம் 2017 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள அனர்த்த தணிப்புச் செயற்றிட்டங்களுக்கு தகைமையுடையோரிடமிருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகள் கோரப் படுகின்றன " என்பது தொடர்பாக 12.04.2017 ஆம் திகதி பத்திரிகை விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளிற்கு மேலதிகமாக கீழ் குறிப்பிடப்படும் விடயமும் சேர்க்கப்படுகிறது என்பதனை அறியத் தருகின்றேன்.

" பொதுநிதிச் சுற்றறிக்கை 4/2016 இற்கு அமைவாக இவ்விலைமனுக் கோரலானது வடமாகாணத்திற்குள் தகுதியுடைய வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளைக் கொண்டுள்ளதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடப்படாததுமான கேள்வியாளருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது "

**திருமதி சு.தெய்வேந்திரம்**
**மேலதிக அரசாங்க அதிபர் யாழ்ப்பாண மாவட்டம்.**

## முதலாம் ஆண்டு நினைவு

### அமரர் சங்கரப்பிள்ளை கங்காதேவி



**தோற்றம் 11.02.1957**

**மறைவு 09.05.2016**

முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வு இன்று [29.04.2017] சனிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடை பெற இருப்பதால் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும்கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**கட்டுப்பிலானை ,கோப்பாய் மத்தி,**
**கோப்பாய்.**

**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 13 | 27 |
| 09 | 04 |
| 1928 | 2017 |



### தில்லையம்பலம் சுப்பிரமணியம்

கோப்பாய் வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் சுப்பிரமணியம் (27.04.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இராசமணியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற செல்லம்மாவின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான கந்தையா, வேலுப்பிள்ளை, சுப்பிரமணியம், பரஞ்சோதி மற்றும் இரத்தினம், அன்னலட்சுமி, தில்லைநாதன் ஆகியோரின் மைத்துனரும் இந்துமதி (அமெரிக்கா), காந்திமதி (கோப்பாய்), சந்திரமதி (நெதர்லாந்து), குகதாசன்(லண்டன்), சுமதி (சுவிஸ்), கமலதாசன் (ஆசிரியர், யாழ் கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம், கோப்பாய்), அன்புமதி (அமெரிக்கா) ஆகியோரின் தந்தையும் பழனித்துரை (அமெரிக்கா), காலஞ்சென்ற திருநாவுக்கரசு, விசுவநாதன் (நெதர்லாந்து), மந்தாகினி(லண்டன்), சந்திரகுமார் (சுவிஸ்), கஜேந்தினி(ஆசிரியர், யாழ் இணுவில் மத்திய கல்லூரி), துரைராஜா(அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரபாகரன் - ரஜனி, நகுலேஸ்வரன்(இ.போ.ச.கோண்டாவில்) - அகிலா, தயாபரன் - அஞ்சலா(சுவிஸ்), அஷாந்தன் - தனுஷியா (சுவிஸ்), பவித்திரா (ஆசிரியர், மு / ஐயன்கன்குளம் அ.த.க பாடசாலை), பிரியங்கன், கரேஸ் அனோஸ் (லண்டன்), கனுஷியா, சாருண்யா(சுவிஸ்), அபிசாலினி, ஆர்த்திகன், நாராயணி, ஆதவன், அபிநயா, வேணுகா (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு பேரனும், இஷானிகா அபிஷாந்தன், அதீஸ், நேருஜன், ஹிஷானிகா, தயூரன், தயந்தன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நாளை (30.04.2017) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று மு.ப 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன் காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
077 621 8308

திருட்டுநகை...
வியாபாரம் செய்பவர்களை அடையாளப்படுத்திய பொலிஸார் சிலர் அவர்களிடம் இருந்து உருக்கப்படும் திருட்டு நகைகளுக்கு ஏற்ப தங்க நகைகளைக் கப்பமாகப் பெற்று வந்தனர் என்று எழுப்பப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பிலேயே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நீண்ட காலமாக இடம்பெற்று வந்த இந்தக் குற்றச்செயலில் அண்மைக்காலமாக நீதிபதி ஒருவருக்கும் பங்கு வழங்கப்பட வேண்டியிருப்பதாகக் கூறி மேலதிகப் பங்கு ஒன்றைப் பெறுவதற்குக் கப்பம் பெற்றவர்கள் முயன்றனர் என்றும் கூறப்படுகிறது. இதில் ஏற்பட்ட தகராறை அடுத்தே இந்த விவகாரம் பொலிஸ் உயர் அதிகாரிகளிடம் முறையிடப்பட்டது என்றும் கூறப்படுகிறது. இது தொடர்பான சந்கேத்தில் உதவிப் பரிசோதகர் ஒருவர் உட்பட மூன்று பொலிஸாரிடம் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று தெரிய வருகிறது.

பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவருக்கு மட்டும் மட்டும் 10 பவுண் தங்கமும், 25 ஆயிரம் ரூபா பணமும் வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. எனினும் இதன் நம்பகத் தன்மை பொலிஸாரின் விசாரணையின் பின்பே தெரிய வரும்.

"இது தொடர்பில் விசாரணைகளின் பின்னரே எந்த விவரத்தையும் கூறமுடியும்" என்று யாழ்ப்பாணப் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரனிஸ்லஸ் தெரிவித்தார். (உ-4-101)

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 07 | 27 |
| 02 | 04 |
| 1945 | 2017 |



### திருமதி கமலாதேவி இராசசிங்கம்

யாழ்ப்பாணம், இல.128, அம்பலவாணர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி இராசசிங்கம் 27.04.2017 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வே. கந்தையா-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி-சின்னம்மா (சோமு) தம்பதியரின் அன்பு மருமகளும் சின்னத்தம்பி இராசசிங்கத்தின் அன்பு மனைவியும் தர்சிகாவின் அன்புத் தாயும் ரகுராமின் அன்பு மாமியும் லொசியின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற கமலராஜ் மற்றும் விமலாதேவி (பிரான்ஸ்), அமிர்தராஜா(அமெரிக்கா), உருத்திரா (அமெரிக்கா), பாஸ்கரன்(அமெரிக்கா), கலாரஞ்சினி, நிர்மலா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 128, அம்பலவாணர் வீதி,
யாழ்ப்பாணம்.
தகவல்:
குடும்பத்தினர்.

**வேலை வாய்ப்பு**

யூஸ் பைக்கற்றுக்களை பொதி செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. சம்பளம் மாதம் ரூபா 15000 .00 வழங்கப்படும்.
அம்மா யூஸ்
28, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
077 758 7079
0777 111 530
021 222 1155

**வீடு வாடகைக்கு**

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு மிக அண்மையில் குளிரூட்டப்பட்ட வசதியுடன்(A/C) கூடிய மேல் மாடிவீடு . நாள், கிழமை, மாத அடிப் படையில் வாடகைக்கு விடப்படும்.(A/C Rooms,Non A/c Rooms For Rent)
077 2017 824








## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 13 | 27 |
| 03 | 04 |
| 1953 | 2017 |



### கந்தையா கணபதிப்பிள்ளை

தம்பகாமம், பளையைப் பிறப்பிடமாகவும் ஆழியவளையை வசிப்பிடமாகவும் பத்திரகாளி கோயில் வீதி, பருத்தித்துறையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கணபதிப்பிள்ளை 27.04.2017 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னையா கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் திலகவதி, ஜெயமனோகரி(பலநோக்கு கூட்டுறவு சங்கம்), ஜெயாகரன்(பிரான்ஸ்), காந்தமனோகரி(சுவிஸ்), சுபாஸ்கரன்(கனடா), ஜெயரூபா ஆகியோரின் அன்புத் தந்தையும் நடராசாயசிந்தி, உதயகுமார், டயாளினி, காலஞ்சென்ற டொன் பொஸ்கோ, வரதராசா ஆகியோரின் அன்பு மாமனும் குயிந்தன், அஜிந்தன், சிந்துஜா, எழிலரசன், தேனுஜன், நிதுஜா, சஜீவன், விதுசன், மதுசன், யதுசன், யஸ்மிதா, ஜனனி, கதிரவன், கிர்த்தன், பிரியந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.04.2017) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
பத்திரகாளி கோயில் வீதி,
பருத்தித்துறை.
077 066 6033, 077 962 9422

## மரண அறிவித்தல்

### செல்லையா மகாதேவன்

(ஓய்வு பெற்ற அதிபர், நயப்பன அ.த.க. பாடசாலை புசல்லாவ)



கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் வீதி, முதலாம் ஒழுங்கை உரும்பிராய் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா மகாதேவன் (25.04.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - உத்தமிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான நடராஜா (C.T.B) - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வராணியின் அன்புக் கணவரும் அகிலா (அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூக சேவைகள் திணைக்களம், வட மாகாணம்), நந்தராஜ் (ஆஸ்திரேலியா), வினோகாந்தன் (ஆசிரியர், கிளிநொச்சி மகா வித்தியாலயம்), அகல்யா (நுண்கலைப்பீடம் மருதனார்மடம், ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் உமாகஜன் (ஆசிரியர் - உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம்), நிலானி (ஆஸ்திரேலியா), பிரகல்யா (ஆசிரியர், யா/சரவணை நாகேஸ்வரி ம.வி), காண்டீபன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புமாமனாரும் விஷாலினி, நிதிஸ், அஸ்விகா, அகர்ஷன், அனிஷா, அஞ்சனா ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்றவர்களான சண்முகதாஸ், விஸ்வரட்ணம் மற்றும் மகாதேவி (லண்டன்), ஆகியோரின் பாசமிகு சகோதரரும் தங்கராணி (கனடா) காலஞ்சென்ற அழகேந்திரன் மற்றும் வசந்தராணி (ஆஸ்திரேலியா) காலஞ்சென்ற அற்புதானந்தராஜா மற்றும் ஸ்ரீரங்கராஜா (சுவிஸ்), ஜெயலோகராஜா (சுவிஸ்) காலஞ்சென்ற சோதிராணி மற்றும் இந்திரானந்தராஜா (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் கௌரிராஜன் (ஆஸ்திரேலியா), சறோஜினிதேவி (உரும்பிராய்) காலஞ்சென்ற தவமணி மற்றும் பரமேஸ்வரி (சுவிஸ்), சதானந்தராஜா (பிரான்ஸ்), நந்தினி (சுவிஸ்) ஆகியோரின் சகலனும் சுரேந்திரன் - சுஜாதா (கனடா), நவசீலன் - சுமதி (லண்டன்), ரமேஸ் - கௌரி (லண்டன்), பிரதீஸ் - சசிலேகா (சுவிஸ்), சுகதீஸ்- சாந்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் விக்னகுமார் - சகுந்தலா (லண்டன்), விநாயகலிங்கம் - மஞ்சுளா (திருகோணமலை), மகேந்திரம் - ஜீவரஞ்சி (லண்டன்), குகேந்திரன் (பிரான்ஸ்), தேவசங்கர், ராஜசங்கர் (ராஜ் டிஜிற்றல் - உரும்பிராய்), கிரிதர் (துபாய்), கஜகோபன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், வவுனியா தெற்கு பிரதேசசெயலகம்), சுவிஸ் ஐ வதிவிடமாக கொண்டவர்களான ருக்சன் - நிரூஜா, வேணுசன், ஜெயமுகன் - ஜனோயா, அசோயன், ஆரூரன், அஜந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சிந்தி (பிரான்ஸ்), ஆதவன் (பிரான்ஸ்) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.04.2017) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
கோப்பாய் வீதி, முதலாம் ஒழுங்கை,
உரும்பிராய் தெற்கு.
021 223 0833, 077 602 2962

சீக்கிரமாய் வாங்கடா, அப்புறம் ஸ்கூல்ல அட்மிசன் இல்லன்னு சொல்லிடுவாங்க...




சொந்த ஊரில் இருந்து கொண்டு காலையில் வேலைக்குச் சென்று



மாலையில் வீடு திரும்ப வாய்ப்பு கிடைத்தவர்கள் அனைவருமே பாக்கியசாலிகள் தான்...

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 4 | 7 | | 8 | | |
| | 7 | 1 | | | 6 | | 2 | |
| | | | | 5 | | 7 | | |
| | 4 | | | | | | 7 | 3 |
| | 8 | | 2 | 4 | 7 | | 5 | |
| 6 | 5 | 7 | | | | | 8 | |
| | | 6 | | 2 | | | | |
| | 9 | | 7 | | | 3 | 1 | |
| | | 5 | | 3 | 9 | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 9 | 4 | 8 | 6 | 2 | 1 | 5 |
| 4 | 8 | 1 | 5 | 3 | 2 | 9 | 7 | 6 |
| 5 | 2 | 6 | 1 | 7 | 9 | 8 | 4 | 3 |
| 8 | 1 | 3 | 2 | 9 | 5 | 4 | 6 | 7 |
| 7 | 5 | 4 | 3 | 6 | 8 | 1 | 9 | 2 |
| 9 | 6 | 2 | 7 | 4 | 1 | 5 | 3 | 8 |
| 6 | 4 | 5 | 8 | 1 | 3 | 7 | 2 | 9 |
| 1 | 9 | 8 | 6 | 2 | 7 | 3 | 5 | 4 |
| 2 | 3 | 7 | 9 | 5 | 4 | 6 | 8 | 1 |

சுடோக்கு
ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங் கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக் கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** பணியில் தடுமாற்றம் ஏற்பட வாய்ப்பு உண்டு. தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், நிர்வா கத்தினரின் அடக்குமுறைக்கு ஆளாகலாம். பெண்கள் சோர்வுக்கு ஆளாவர்.

**இடபம்:** எதிர்பார்த்த செயல் எளிதாக நிறை வேறும். தொழில், வியாபாரத்தில் சாதனை படைப்பீர்கள். லாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் விரும்பிய இடமாற்றம் கிடைக்கப்பெறுவர்.

**மிதுனம்:** பேச்சில் நிதானத்தைக் கடை பிடிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி அதிகரிக்கும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**கடகம்:** விலகிச் சென்ற உறவினர் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சிக் கான வாய்ப்பு கிடைக்கும். ஆதாயம் பன்மடங்கு உயரும். மனைவி விரும்பிக் கேட்ட பொருளை வாங்கித் தருவீர்கள்.

**சிங்கம்:** குடும்ப விடயத்தைப் பிறரிடம் சொல்லவேண்டாம். தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சி தேவைப்படும். லாபம் சீராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைத் திறம்பட சமாளிப்பர்.

**கன்னி:** உறவினர் வருகையால் மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை நிறைவேற்றுவீர்கள். தாராள லாபம் கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**துலாம்:** மனதில் புத்துணர்வு மேலோங்கும். சத்தியத்தின் மீதான நம்பிக்கை வளரும். தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் விரும்பிய இடமாற்றம் கிடைக்கப்பெறுவர்.

**விருச்சிகம்:** பேச்சில் விரக்தியின் தன்மை வெளிப்படலாம். அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம். தொழில், வியா பாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். அலைச்ச லால் அசதிக்கு ஆளாக நேரிடும்.

**தனுசு:** எதிர்பார்த்த செயல் நிறைவேறும். புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். லாபம் பன்மடங்கு உயரும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர்.

**மகரம்:** குடும்பத்தில் இருந்த குழப்பமான சூழ்நிலை மறையும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப்பணி நிறைவேறும். லாபம் உயரும். அதிர்ஷ்டவசமாக சுப விடயத்தில் நல்ல முடிவு கிடைக்கும்.

**கும்பம்:** பணியில் புத்துணர்வுடன் ஈடுபடு வீர்கள். கடினமான பணியும் எளிதாக நிறை வேறும். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப்பெறுவர்.

**மீனம்:** பேச்சில் நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

WhatsApp



**வளர்ந்துவரும் நம்மாட்டு சிறார்களிடம் கேள்விகளைக் கேட்டால், இப்போது இப்படித் தான் பதில்கள் வருகின்றன.**

(பன்னாட்டுத் தொலைக்காட்சிகளின் ஆக்கிரமிப்பு)
கே: ஒரு பூவின் பெயர்?
ப: தலையணைப்பூக்கள்.
கே: பாம்பு தெரியுமா?
ப: ஆமா...சுவன்யா மாதிரியே இருக்கும்....நாகினி பாக்குறது இல்லையா...???
கே: நல்வழி, அறவழி என்றால் என்ன?
ப: டோராக்கிட்டதான் கேக்கனும்
கே: ஊஞ்சலில் விளையாடப் பிடிக்குமா?
ப: ஆமா, பொன்னூஞ்சல்னா ரொம்பவே பிடிக்கும்..
கே: மூலிகையொன்றின் பெயர்??
ப: ஹமாம் சோப்.
கே: பிரச்சினை என்றால் எங்கு முறையிடுவது?
ப: சொல்வதெல்லாம் உண்மை ஆன்டியிடம்.
கே: பிடித்த உணவு?
ப: மிக்ஸர்.
கே: அம்மாவின் பெயர்?
ப: ஜெயலலிதா
கே: சின்னம்மா?
ப: சசிகலா.
கே: பழமொழி ஒன்று சொல்லுங்க?
ப: நாட்டுக்கோழி முட்டைக்கு காவல் நல்லப்பாம்பா?
கே: எதுகை, மோனை என்றால் என்ன?
ப: ஏய்...டன்டனக்கா...டனக்குனக்கா...

இன்னும் இருக்கின்றன. சொல்லமுடியாது. அட... நம்மநாட்டுச் சனல்களையும், செய்திகளையும் கொஞ்சநேரமாவது காட்டுங்கள். இல்லன்னா எப்ப சுதந்திரம் கிடைத்தது, நாட்டு நிலமை என்ன என்பது தெரியாமலேயே போய்விடும். தமிழ் நாட்டுல வாழ்ர மாதிரியே சிலர் வாழ்ந்துக்கிட்டு இருக்காங்கள்.



# 'பாகுபலி 2' நாயகனுக்கு ராஜமவுலி கொடுத்த பரிசு

'பாகுபலி 2' நாயகன் பிரபாஸுக்கு இயக்குநர் எஸ்.எஸ்.ராஜமவுலி சிறப்புப் பரிசு ஒன்றைக் கொடுத்துள்ளார். எஸ்.எஸ்.ராஜமவுலி இயக்கத்தில் பிரம்மாண்டமாக உருவாகியுள்ள 'பாகுபலி 2' நேற்று வெளியானது.

தமிழ், தெலுங்கு, இந்தி மற்றும் மலையாளம் என 4 மொழிகளில் இந்தப் படம் வெளியிடப்பட் டுள்ளது. 5 வருடங்களாக வேறு எந்தப்"படத்திலும் நடிக்காமல் ஒரே படத்தில் நடிக்க ஒப்புக் கொண்ட வர் பிரபாஸ். எனவே பிரபாஸை பலமேடைகளில், பலமுறை ராஜ மவுலி பாராட்டியிருக்கிறார். இந்த நிலையில், அவரைச் சிறப்பிக்கும் விதமாக, 'பாகுபலி' படத்தில் பிரபாஸ் பயன்படுத்திய போர் கவசத்தை அவருக்குப் பரிசளித்துள்ளார். 'பாகுபலி 2' படத்தில் பிரபாஸ், ராணா, அனுஷ்கா, தமன்னா, சத்யராஜ், ரம்யா கிருஷ்ணன், நாசர் உள்ளிட்ட பலரும் நடித்துள்ளனர்.

# இன்றைய மோதல்கள்


யாழ்ப்பாணம், ஏப். 29

**கே.ஸி.ஸி.ஸி. கழக துடுப்பாட்டத் தொடர்**

கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் நடத்தும் கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக் கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. அணியை எதிர்த்து ஸ்ரான்லி அணி மோதவுள்ளது.

**இலங்கை கிரிக்கெட் சபையின் துடுப்பாட்டம்**

இலங்கை கிரிக்கெட் சபை நடத்தும் மூன்றாம் பிரிவு துடுப்பாட்டக் கழகங்களுக்கு இடையிலான தொடரின் ஆட்டங்கள் சில இடம்பெறவுள்ளன. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் ஹாட்லி யைற்ஸ் அணியை எதிர்த்து மானிப்பாய் பரிஷ் அணி மோதவுள்ளது. சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்



பெறும் ஆட்டத்தில் அரியாலை மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து றிபேக் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**பாரதி வி.கழக கரப்பந்தாட்டம்**

நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக 'ஏ', 'பி' என இரு பிரிவுகளாக நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. 'பி' பிரிவில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை அச்சுவேலி கலைமகள் அணி மோதவுள்ளது. இரவு 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வழக்கம்பரை அம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் குருநாதர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

# யாழ். மாவட்ட கபடித் தொடர்

யாழ்ப்பாணம், ஏப். 29

யாழ்ப்பாண மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான கபடித் தொடர்களில் ஆண்களுக்கான ஆட்டங்கள் இன்றும் பெண்களுக்கான ஆட்டங்கள் நாளையும் நெல்லியடி மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (ம-23)

# யூனியனை வென்றது ஜொலிஸ்ரரார் கழகம்

யாழ்ப்பாணம், ஏப். 29

இலங்கை கிரிக்கெட் சபை நடத்தும் மூன்றாம் பிரிவு துடுப்பாட்டக் கழகங்களுக்கு இடையிலான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் அணியிடம் தோல்வியடைந்தது தெல்லிப்பழை யூனியன் அணி.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இந்த ஆட்டம் இடம்பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 188 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது அதிகபட்சமாக ஜெனாந்தனன் 39 ஓட்டங்களையும், பகீரதன் 26 ஓட்டங்களையும் உமாசுதன் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் யூனியன் அணியின் சார்பில் பிரசாந் 5 இலக்குகளையும், சயந்தன், கோபி ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர். 188 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குக் களமிறங்கிய யூனியன் அணி 23.5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 153 ஓட்டங்களை மட்டும் பெற்றது. அதிகபட்சமாக சயந்தன் 69 ஓட்டங்களையும், தயாளன் 24 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மதுசன் 4 இலக்குகளை வீழ்த்தினார். (ம-23)

# மைக்கலின் துடுப்பாட்டம்

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் 5, 10 மற்றும் 20 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து துடுப்பாட்டத் தொடரை நடத்தவுள்ளது. இந்தத் தொடரில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் நாளைக்குள் பதிவை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-23)

# மரதன் ஓட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 29

அரியாலை கலைமகள் சனசமூக நிலையத்தின் 71ஆவது ஆண்டு விழாவையும், புதிய மைதானத்தின் திறப்பு விழாவையும் முன்னிட்டு நடத்தத் திட்டமிட்ட மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டப்போட்டிகள் இன்று காலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளன. (ம-23)


# பெங்களூர் மோசமான அடைவு

ஐ.பி.எல். வரலாற்றில் அதிக தடவைகள் சகல இலக்குகளையும் இழந்த அணி என்ற மோசமான அடைவைப் பதிவு செய்தது பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்.

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஹைதராபாத்துக்கு எதிரான ஆட்டத்தில் 134 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது பெங்களூர். ஒட்டுமொத்த ஐ.பி.எல். தொடர்களில் அந்த அணி இதுவரை 14 தடவைகள் சகல இலக்குகளையும் இழந்துள்ளது. ராஜஸ்தான், டெல்லி அணிகள் 14 தடவைகள் சகல இலக்குகளையும் இழந்தமையே மோசமான அடைவாக உள்ளநிலையில் அந்த வரிசையில் தற்போது பெங்களூரும் இணைந்தது.




14 தடவைகள் சகல இலக்குகளையும் இழந்த இந்த மூன்று அணிகளும் அந்த ஆட்டங்களில் தலா ஒவ்வொரு வெற்றியையே பெற்றுள்ளன. 13 ஆட்டங்களில் தோல்வியையே சந்தித்துள்ளன. நடப்பு வருடத்தில் மட்டும் மூன்று தடவைகள் பெங்களூர் சகல இலக்குகளையும் இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



# டெல்லியை வென்றது கொல்கத்தா

ஐ.பி.எல். தொடரில் நேற்று மாலை நடைபெற்ற ஆட்டத்தில் டெல்லியை வென்றது கொல்கத்தா.

நாணயச் சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி 160 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக சாம்சன் 60 ஓட்டங்களையும், அய்யர் 47 ஓட்டங்களையும் சேர்த்தனர்.

பந்துவீச்சில் கட்டர் நைல் 3 இலக்குகளையும், யாதவ், நரைன் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய கொல்கத்தா அணி 22 பந்துகள் மீதமிருக்க 3 இலக்குகளை மாத்திரம் இழந்து இலக்கை அடைந்தது. கம்பீர் ஆட்டமிழக்காமல் 71 ஓட்டங்களையும், உத்தப்பா 59 ஓட்டங்களையும் குவித்தனர். ஆட்டநாயகனாக கம்பீர் தெரிவானார்.

இந்த வெற்றியின் மூலம் தரப்படுத்தலில் முதலிடத்தில் வலுவாக ஆதிக்கம் செலுத்துகிறது கொல்கத்தா. (ம)

# கிளி. மத்திய மகா வித்தியாலயம் முன்னிலை பெற வாய்ப்பு

கிளிநொச்சி, ஏப். 29

கிளிநொச்சி இந்துக் கல்லூரிக்கும், கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணிக்கும் இடையிலான நீலங்களின் சமர் துடுப்பாட்டத்தில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணி முன்னிலை பெறுவதற்கு அதிக வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இந்த ஆட்டம் நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கிளிநொச்சி இந்து கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணி 260 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக கிசோகரன் 53 ஓட்டங்களையும், சுபிகரன் 48 ஓட்டங்களையும், யதுசன் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பிரதீசன் 8 இலக்குகளையும், தர்சன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்துக் கல்லூரி அணி நேற்றைய நாள் முடிவில் 6 இலக்குகளை இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. ஆட்டத்தின் இறுதி நாள் இன்று. (ம)



# செரபோவாவுக்கு மன்னிப்பில்லை

## ஏமாற்றுக்காரர் என பவுர்சார்ட் கொதிப்பு



பவுச்சர்ட்

ஊக்கமருந்து விவகாரத்தில் தடைசெய்யப்பட்டு மீண்டும் களத்துக்குத் திரும்பியுள்ள மரிய செரபோவா ஓர் மோசடி நபர் அவருக்கு மன்னிப்பு இல்லை என்று கனடிய ரென்னிஸ் வீராங்கனை பவுச்சர்ட் தெரிவித்தார்.

2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மெல்டோனியம் என்ற தடை செய்யப்பட்ட மருந்தைப் பயன்படுத்தி தடைபெற்று அதிலிருந்து மீண்டுவந்துள்ளார் செரபோவா. அவர், தற்போது நடைபெற்று வரும் ஜேர்மனி ரென்னிஸ் தொடரில் விளையாடி வருகிறார். செரபோவாவை ரென்னிஸ் உலகில் மீண்டும் அனுமதித்திருக்கக்கூடாது என்று விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுவரும் நிலையில் கனடாவின் பிரபல வீராங்கனை பவுச்சர்ட், "செரபோவா ஓர் மோசடி நபர்" என்று வெளிப்படையாக விமர்சித்தார்.

ஜேர்மனியில் நேற்றுக்காலை (இலங்கை நேரப்படி) நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"செரபோவா ஓர் மோசடி நபர். அவர் ஊக்கமருந்தை எடுத்துக் கொண்ட பின்னர் மீண்டும் ரென்னிஸ் உலகில் அனுமதித்திருக்கக் கூடாது தடை செய்யப்பட்ட பின்னர் செரபோவா தரப்படுத்தலில் முதல் 90 இடங்களுக்குள் இல்லை. எனவே தற்போது நடைபெற்றுவரும் ஜேர்மனி ரென்னிஸ் தொடரில் அவருக்கு முக்கிய சுற்றுக்கு நேரடித் தகுதி அந்தஸ்து வழங்கியிருக்கக்கூடாது. அவர் தரப்படுத்தலில் பின்நிலையில் உள்ள வீராங்கனைகளுடன் போட்டியிட்டே முக்கிய சுற்றுக்கு முன்னேறியிருக்க வேண்டும். ஒட்டுமொத்தத்தில் செரபோவாவும் அவர் சார்ந்த நடவடிக்கைகளும் மோசடியாகவே அமைந்துள்ளன" என பவுச்சர்ட் மேலும் தெரிவித்தார்.

செரபோவாவுக்கு கூடுதல் தடை வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்று வலியுறுத்தப்படும் கருத்துக்களை விட, அவருக்கு ஜேர்மனித் தொடரில் நேரடித் தகுதி அந்தஸ்து வழங்கியமைக்கு அதிகளவான விமர்சனங்கள் வைக்கப்படுகின்றன. இந்த நிலையில் அடுத்ததாக நடைபெறவுள்ள ஸ்பெய்ன் தொடரிலும் செரபோவாவுக்கு நேரடித் தகுதி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)







## சச்சின் - சங்காவின் கலக்கல் ருவிற்கள்



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சினும், இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவான் சங்காவும் ருவிற்றரில் பதிவிட்ட பதிவுகள் சில தற்போது வைரலாகி வருகின்றன. கடந்த 24 ஆம் திகதி சச்சின் தனது 44 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார். அவருக்கு முன்னாள் இன்னாள் வீரர்கள் பலரும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். சங்கா ருவிற்றரில் தனது வாழ்த்தைத் தெரிவித்தார்.

சங்காவின் வாழ்த்துக்கு நன்றி தெரிவித்த சச்சின், "எப்போது என்னை உங்களது மினிஸ்ரி ஒவ் கிராப்ஸுக்கு (சங்கா உரிமையாளராக இருக்கும் இலங்கையின் பிரபல நண்டுக்கறி உணவகம்) அழைப்பீர்கள்" என்று கேட்டுப் பதிவிட்டார். இதற்குப் பதிலளித்த சங்கா, "நீங்கள் எப்போது வந்தாலும் மரியாதையுடன் வரவேற்கத் தயாராக உள்ளோம்" என்று பதிவிட்டார். இறுதியாக இந்திய அணி இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது, கோக்லி உள்ளிட்ட அத்தனை வீரர்களுக்கும் இந்த உணவகத்தில் சங்காவும், மகேலவும் இணைந்து விருந்து படைத்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## கோக்லி குடிக்கும் குடிதண்ணீர் ஒரு லீற்றர் ஆயிரத்து 600 ரூபா

### பிரான்ஸில் இருந்து இறக்குமதியாம்




உடல் பராமரிப்புக்காக இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் கோக்லி, பிரான்சில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட குடிதண்ணீரைப் பயன்படுத்துகிறார் என்று தகவல் வெளியாகி உள்ளது. இதன் இலங்கை மதிப்பு ஒரு லீற்றர் கிட்டத்தட்ட ஆயிரத்து 600 ரூபா.

உடற்தகுதியில் மிகச் சிறந்த வீரர்களில் ஒருவராக பரவலாக அங்கீகரிக்கப்பட்டுள்ள விராட் கோக்லி, மற்ற வீரர்களுக்கு உதாரணமாகவும் திகழ்கிறார். அவரது உடற்தகுதியை பல கிரிக்கெட் வீரர்கள் பாராட்டியுள்ளனர். உடற் கட்டமைப்புக்கு முக்கியத்து வம் கொடுக்கும் அதேசமயம், கடும் உணவுக் கட்டுப்பாடுகளையும் கடை பிடித்து வருகிறார் விராட் கோக்லி. தான் குடிக்கும் குடிதண்ணீரிலும் கூடுதல் கவனம் செலுத்துகிறாராம். ஆரோக்கியம் தொடர்பாக இணையதளத்தில் வெளியான தகவலின்படி, விராட்கோக்லி பிரான்சில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட குடிதண்ணீரைத்தான் பயன்படுத்துகிறாராம். (ம)


## டெல்லியில் இணைந்தார் சாமுவேல்ஸ்

மேற்கிந்தியத் தீவுகளின் சகலதுறை வீரரான மார்லன் சாமுவேல்ஸ், நடைபெற்றுவரும் ஐ.பி.எல். தொடரில் டெல்லி அணிக்காக ஒப்பந்தமாகியுள்ளார்.

டெல்லி அணிக்காக ஒப்பந்தமாகியிருந்த தென்னாபிரிக்க வீரர் குயின்டன் டி ஹொக், காயம் காரணமாக தொடரில் இருந்து விலகினார். இதனால் மற்றுமொரு வீரரை ஒப்பந்தம் செய்யக்கூடிய வாய்ப்பு டெல்லி அணிக்கு இருந்தது. இந்த அடிப்படையிலேயே சாமுவேல்ஸ் டெல்லி அணிக்காக ஒப்பந்தமாகினார்.

புள்ளிப் பட்டியலில் டெல்லி, தான் எதிர்கொண்ட முதல் ஆறு ஆட்டங்களில் 2 வெற்றிகள், 4 தோல்விகள் என 4 புள்ளிகளையே பெற்றுள்ளது. இதனால் சாமுவேல்ஸின் வருகை அந்த அணிக்குப் பலம் சேர்க்கும் என்று கருதப்படுகிறது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி ரி-20 உலகக்கிண்ணத்தை இரு தடவைகள் கைப்பற்றியுள்ளது. இதற்கு சாமுவேல்ஸ் முக்கிய காரணமாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



## மீண்டும் வருவேன்; செரீனா பகிரங்கம்



தற்போது கர்ப்பமாக உள்ள அமெரிக்க ரென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ், "குழந்தை பெற்றவுடன் மீண்டும் கள மிறங்குவேன்" என்று தெரிவித்துள்ளார்.

செரீனா வில்லியம்ஸ் தற்போது 21 வாரங்கள் கர்ப்பமாக உள்ளார். இதனால் அவர் ரென்னிஸ் உலகில் இருந்து விலகியே உள்ளார். குழந்தை பெற்றவுடன் அவர் மீண்டும் களமிறங்குவாரா மாட்டாரா என்பதுதொடர்பில் முன்னுக்குப் பின் முரணான தகவல்கள் வந்துகொண்டிருந்தன. இந்த நிலையில், தான் மீண்டும் களமிறங்குவதை அவர் உறுதி செய்தார்.

செரீனா, நேற்றுமுன்தினம் தனது ருவிற்றர் பக்கத்தில், "குழந்தை பெற்றவுடன் மீண்டும் ரென்னிஸ் உலகில் கால் பதிப்பேன். ஓய்வு பெறும் திட்டம் தற்போதில்லை. தொடர்ந்து களமிறங்கி மேலும் சில பன்னாட்டு அந்தஸ்து பெற்ற கிண்ணங்களை வெல்ல விரும்புகிறேன்'' என செரீனா மேலும் தெரிவித்தார். (ம)

**Everest** உலகளாவிய ரீதியாக இயங்கி வரும் எமது கம்பனியில் உங்களுக்கும் ஓர் அரிய வாய்ப்பு

- நிரந்தர வேலைவாய்ப்பு
- 75000 ரூபாவிற்கு மேற்பட்ட சம்பளம்
- EPF, ETF Medical போன்ற வாய்ப்பு
- வெளிநாட்டு சுற்றுலாப்பயணம்
- குறுகிய காலத்தில் பதவி உயர்வு
- ஊக்குவிப்பு சம்பளம்

இலங்கை மற்றும் கிழக்காசிய நாடுகளில் இயங்கிவரும் எமது கம்பனியில் புதிய கிளைகளில் உள்ள பதவி வெற்றிடங்களுக்காக O/L அல்லது A/L படித்த 18 தொடக்கம் 30 வயதிற்குள் இருக்கும் புதிய நபர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். தகுதிகாண் காலத்தின் போது 10. 000 தொடக்கம் 20. 000 வரையிலான வருமானமும் பின்னர் **Everest International Company** யினுள் நிரந்தர வேலைவாய்ப்பினை உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் பெற்றுக்கொள்ளமுடியும் (3581)

தொடர்புகளுக்கு - 076 416 5173, 077 517 9034

# பஞ்சாப்புக்கு எதிரான ஆட்டம்; ஹைதராபாத் பலமான வெற்றி




ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் பஞ்சாப்பை வென்று புள்ளிப்பட்டியலில் முதல் நான்கு இடங்களுக்குள் தன்னை நிலைப்படுத்தியுள்ளது ஹைதராபாத்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பஞ்சாப் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. ஹைதராபாத்தின் ஆரம்ப வீரர்களான தவான், வோர்ணர் இணை அடித்தளத்தை பலமாக அமைத்தது. 4.5 பந்துப் பரிமாற்றங்களில் இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்களைத் தொட்டது ஹைதராபாத். இணைப்பாட்டமாக 107 ஓட்டங்கள் பகிரப்பட்ட பின்னர் 51 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் வோர்ணர். வோர்ணரின் இடத்தை மிகச் சரியாக நிரப்பினார் வில்லியம்சன். தவான் - வில்லிம்சன் இணை மீண்டும் ஓர் இணைப்பாட்டத்தை அரங்கேற்றியது. அரைச்சதம் கடந்தார் தவான். வில்லியம்சனின் அரைச்சதம் 26 பந்துகளில் பதிவானது. 77 ஓட்டங்களுடன் தவான் ஆட்டமிழந்தார். முடிவில் 3 இலக்குகள் இழப்புக்கு 207 ஓட்டங்களைக் குவித்தது ஹைதராபாத்.

பந்துவீச்சில் மக்ஸ்வெல் 2 இலக்குகளையும், மொகிற் சர்மா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பஞ்சாப்புக்கு ஆரம்ப வீரரான வோக்ரா 3 ஓட்டங்களுடனும் அணித்தலைவர் மக்ஸ்வெல் ஓட்டமெதனையும் பெறாமல் ஆட்டமிழந்தும் ஏமாற்றினர். குப்தில் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஓர் முனையில் இலக்குச் சரிவு இருந்தாலும் மறுமுனையில் அடித்தாடி 36 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் சோன் மார்ஸ். 84 ஓட்டங்களுடன் மார்ஸ் ஆட்டமிழந்தார். பின்வரிசையில் அணியைக் காப்பற்ற எவராலும் இயலவில்லை. முடிவில் 181 ஓட்டங்களையே பஞ்சாப்பால் எடுக்க இயன்றது. 26 ஓட்டங்களால் பதற்றமில்லாத வெற்றியைப் பதிவுசெய்தது ஹைதராபாத்.

*புள்ளிப்பட்டியல்*

புள்ளிப்பட்டியலில் 9 ஆட்டங்களில் 7 வெற்றி, 2 தோல்விகள் என 14 புள்ளிகளுடன் கொல்கத்தா முதலிடத்திலும், 8 ஆட்டங்களில் 6 வெற்றி, 2 தோல்விகள் என 12 புள்ளிகளுடன் மும்பை இரண்டாவது இடத்திலும், 9 ஆட்டங்களில் 5 வெற்றி, 3 தோல்வி, ஓர் சமநிலை என்று 11 புள்ளிகளுடன் ஹைதராபாத் மூன்றாவது இடத்திலும், 8 ஆட்டங்களில் 4 வெற்றி, 4 தோல்வியென 8 புள்ளிகளுடன் புனே நான்காவது இடத்திலும் உள்ளன. அடுத்தடுத்த இடங்களில் முறையே குஜராத், பஞ்சாப், பெங்களூர், டெல்லி ஆகிய அணிகள் உள்ளன. (ம)

**SB TRAVELS & TOURS (Pvt)Ltd.**

இங்கு சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்களை மிகக்குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

இந்தியாவிற்கான விமான பயணச்சீட்டுக்களை சென்னை Srilankan Airlines 32000/= Air India 29000/=

இற்கும் மதுரை Srilankan Airlines 30500/= திருச்சி Srilankan Airlines 31800/= (7 Days before) அத்துடன் வீசா விண்ணப்பப்படிவமும் நிரப்பித் தரப்படும். மற்றும் மலேசியா, பாங்கொங், தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கான வீசாக்களையும் செய்து தரப்படும்.

ஐரோப்பிய நாடுகளுக்குமான வீசா ஆலோசனைகளும் விசேட விலைக்கழிவுகளும் வழங்கப்படுகின்றன. (பிரயாணக்காப்புறுதி, திகதி மாற்றம், சுற்றுலா ஒழுங்கமைப்புக்கள், ஹோட்டல் முன்னேற்பாடுகளும் செய்து கொடுக்கப்படும்)

BUDGET AIRLINES SPICE JET, AIR ASIA, FLYDUBAI, AIR ARABIA ஆகிய விமானங்களில் குறைந்த கட்டணங்களில் செல்வதற்கு இன்றே நாடுங்கள்.

SB Travels and Tours
No 212, Kasthuriyar Road, Jaffna.
021 222 9555, 222 8555/
076 691 1080, 81, 82, 83

இங்கு AIR TICKETING ACADEMY வகுப்புக்களும் 2மாத பயிற்சிகளும் நடைபெறுகின்றன.
தொடர்புகளுக்கு- 021 222 7111, 021 222 7666

SB Travels and Tours
No 216, Kasthuriyar Road, Jaffna.

**வீடு வாடகைக்கு**

நல்லூருக்கும் கைலாசப்பிள்ளையார் கோயிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ள சகல வசதிகளுடனும் கூடிய மேல்மாடி வீடு வாடகைக்கு விடப்படும். அரச நிறுவனங்களுக்கும், நிறுவனங்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும். (CS 3574) (14)

077 696 9511


**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

CERTIFICATE COURSE IN ENGLISH

14 Batches have successfully completed the courses
15th batch commences on 29th April 2017

**Further Details:**
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
0212223382/0212229149
(29464)(10)

# காலிறுதியில் ரபேல் நடால்



ஸ்பெய்னின் பார்சிலோனா நகரில் நடைபெற்று வரும் ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ஸ்பெய்ன் வீரர் ரபேல் நடால் காலிறுதிக்குத் தகுதி பெற்றார்.

நேற்று நடைபெற்ற காலிறுதிக்குத் தகுதி பெறும் ஆட்டத்தில் நடாலை எதிர்த்து கெவின் அண்டர்சன் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய நடால் தனது ஆதிக்கத்தை தொடர்ந்தும் தக்கவைத்து இரண்டாவது செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார். முடிவில் அவர் 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றார்.

பன்னாட்டு அந்தஸ்து பெற்ற தொடர்களில் ஒன்றான பிரான்ஸ் தொடர் இன்னும் சில நாள்களில் ஆரம்பமாகவுள்ளது. எனவே இந்தத் தொடர்களில் ஒவ்வொரு வீரரும் வெளிப்படுத்தும் பெறுபேறுகள் குறித்து பெரும் எதிர்பார்ப்பு நிலவுகிறது. முன்னதாக முடிவடைந்த ஆஸ்திரேலியத் தொடர், மியாமித் தொடர் போன்ற முக்கிய தொடர்களில் நடால் இறுதியாட்டத்துக்கு முன்னேறியிருந்தார். இரண்டிலுமே அவர் தன்னை எதிர்த்து விளையாடிய சுவிற்சர்லாந்து வீரர் பெடரரிடம் கிண்ணத்தைத் தவறவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

முருகன் துணை

**புங்குடுதீவு கிழக்கு தல்லையபற்று சங்கரமூர்த்தி முருகமூர்த்தி வேல் தேவஸ்தானம் புங்குடுதீவு - 12**

**பஞ்ச தள இராஜகோபுர அடிக்கல் நாட்டுவிழா**





காலம் - 2017.04.30
ஞாயிற்றுக்கிழமை
காலை - 9.08 - 10.59
வரையுள்ள

சுபமுகூர்த்த சுப வேளையில் எம்பெருமானுக்கு இடம் பெறும் இவ் அடிக்கல் நாட்டு விழாவில் பக்த அடியார்கள் அனைவரும் கலந்து கொண்டு உங்களுடைய கரங்களினால் கந்தனைப் பிரதிஷ்டை செய்து முருகப்பெருமானுடைய பேரருளினைப் பெற்று பேரானந்தப் பெருவாழ்வு வாழ்வீர்களாக!

புங்குடுதீவு - 12
ஆலய தர்மகர்த்தாவும்,
ஆலய நிர்வாக சபையினரும்.

**வேலையாள்கள் தேவை**

1. சிட்டை எழுதுநர் (ஆண் மட்டும்)
2. சிற்றுண்டி, தோசை, பறோட்டா, தயாரிப்பாளர்கள் (ஆண், பெண் இருபாலாரும்)

தங்குமிட வசதி, உணவு இலவசம். நேரில் வரவும். (AJA CS 3573) (14)

லிங்கன் கிறீம் ஹவுஸ்
213, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.04.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.